# பாவேந்தரின் எண்ணமும் எழுத்தும்

நெல்லை ந. சொக்கலிங்கம்



UG 7219

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

# பாவேந்தரின் எண்ணமும் எழுத்தும்

[பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு]

நெல்லை ந. சொக்கலிங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

ISBN : 978-81-7090-446-5

**தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 403**

**திருவள்ளுவராண்டு 2045 சித்திரை-ஏப்பிரல் 2014**

| | | |
|---|---|---|
| நூல் | : | பாரதிதாசன் எண்ணமும் எழுத்தும் |
| ஆசிரியர் | : | நெல்லை ந. சொக்கலிங்கம் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| பதிப்பு | : | முதற் பதிப்பு-2014 |
| பக்கம் | : | 9 + 125 |
| தாள் | : | டி.என்.பி.எல். மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | 1/8 டெம்மி |
| நூற்கட்டுமானம் | : | சாதா அட்டை கட்டுமானம் |
| விலை | : | உரூ. 90 /- |
| படிகள் | : | 500 |
| அச்சு | : | ஓம்சக்தி பிரிண்டர்ஸ், தஞ்சாவூர். |

முனைவர் ம திருமலை
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

# அணிந்துரை

"நவில்தொறும் நூல்நயம் போலும்
பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"
(குறள்.783)

என்னும் குறள் மொழிக்குச் சான்றாக விளங்கும் தன்மையுடைய பேராசிரியர் நெல்லை ந. சொக்கலிங்கம் அவர்கள் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் "அறுவகை இலக்கணம்" பற்றி ஆய்வு செய்தவர். ஆய்வுத்திறமும் சொல்வளமும் வாய்க்கப்பெற்றவர்.

பேராசிரியர் நெல்லை ந.சொக்கலிங்கம் அவர்கள் சொல்லாற்றலும் எழுத்து வன்மையும் உடையவர். எதனையும் செம்மையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவர்.

'பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும்' என்ற நூலை இயற்றியவர். பாரதிதாசன் படைப்புகளில் மிகுந்த ஈடுபாடும் பயிற்சியும் உடையவர். அவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் படைப்புகளின் சிறப்புக்களைப் பற்றிய "பாவேந்தரின் எண்ணமும் எழுத்தும்" என்னும் தலைப்பில் நிகழ்த்திய அறக்கட்டளைப் பொழிவு இந்நூல். அறக்கட்டளைச் சொற்பொழிவுக்கு முன்னரே நூலினை எழுதி முடித்துத் தந்திருக்கும் முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம் பாராட்டுக்குரியவர்.

இந்நூலில் பாவேந்தரின் பிறந்த நாளான ஏப்ரல் 29இல் வெளிவருதல் மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது. இந்நூலில் அவர் பாவேந்தரின் இளமைக் கல்விக் குறித்தும் விடுதலைக் கவிஞர் எட்டையபுரத்துப் பாரதியாரின் தொடர்பு பற்றியும் மிக நேர்த்தியாக ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். பாவேந்தருடைய ஆன்மீக உணர்வையும் நாட்டுப்பற்றையும் நிரல்படக் கூறிப் போகும் திறன் வியக்குமாறுள்ளது.

பாவேந்தர் ஆன்மீக உணர்விலிருந்து தன்மானவுணர்க்கு மாறிய நிலையைச் சுட்டிப் பேசிச் சமுதாயச் சீர்திருத்த உணர்வும் பெண்கல்வி பற்றிய சிந்தனையும் முகிழ்த்தமை பற்றி விளக்கிச் செல்கிறார். பாவேந்தரின் தொழிலாளர் நலம் பேணும் பாடல்கள் வாயிலாக அவருடைய எண்ணங்களைப் பதிவு செய்துள்ளார் பேராசிரியர்.

தமிழை உயிரெனப் போற்றியவர் பாவேந்தர். அவர்தம் உள்ளுணர்வுகளை-உரத்த சிந்தனைகளை விளக்கிச் செல்லும் பாங்கு போற்றும்வண்ணம் உள்ளது. அவர்தம் 'தமிழியக்க உணர்வும்' இல்லறத்தைப் பேணும் பெண்டி நலன், முன்னேற்றம் குறித்தும் தக்க சான்றுகள் கொண்டு எடுத்துரைக்கின்றார்.

பாவேந்தரின் கற்பனைக்கும் புலமைச் செழிப்பிற்கும் பஞ்சமில்லை. அத்தகவல்களைப் பேராசிரியர் நெல்லை ந.சொக்கலிங்கம் நம் நெஞ்சில் நிலைத்து நிற்கும் வண்ணம் சொல்லோவியமாக்கிக் காட்டித் தம் எழுத்துத் திறமையை நிலைநாட்டியுள்ளார்.

*25.4.2014* **ம. திருமலை**

# என்னுரை

இருபதின் தமிழ் எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் உந்து சக்தியாய் விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். அவர் பிறந்த நாளில் (ஏப்பிரல், 29) அவருடைய எண்ணங்களையும் எழுத்து வடிவங்களையும் தமிழ்ப் பல்கலைக்கழகம் அறக்கட்டளைப் பொழிவாக வழங்க எனக்கு வாய்ப்பு வழங்கியமைக்கு என் அன்பு கலந்த நன்றி.

மேலும், துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் **ம. திருமலை** அவர்களுக்கும் மொழிபெயர்ப்புத்துறை உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் **இரா.சு.முருகன்** அவர்களுக்கும் என் மனம் நிறை நன்றி. என் பொழிவினை நூலாகக் கொண்டுவர உதவிய அனைவருக்கும் பல்கலைக்கழகப் பதிவாளருக்கும் என் மனம் கனிந்த நன்றி.

பாவேந்தரை மீண்டும் ஒருமுறை படித்துப் பயன்பெற வாய்ப்பு நல்கியமைக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் தொடர்புடைய அன்பு உள்ளங்களுக்கும் நான் நன்றி மொழிந்து மகிழ்கிறேன்.

## பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டின் எழுச்சிக்கும் தமிழின் ஏற்றத்திற்கும் உந்து சக்தியாக விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். புதுவைக் குயில் புரட்சிக் குயிலாக விளங்கிற்று. இருண்டு கிடந்த தமிழ் உலகிற்கு ஒளி தரவந்த ஒப்பற்ற கவிஞராக விளங்கிய பெருமைக்குரியவர் பாவேந்தர். ஏப்பிரல் திங்கள் 29ஆம் நாளில் அவர்தம் பிறந்த நாள் ஆகும். அந்நாளைப் போற்றும் வகையில் நம் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் அறக்கட்டளைப் பொழிவை நடத்திப் பாவேந்தரைப் போற்றி வருகின்றது. இவ்வகையில் இவ்வாண்டு (2014) முதுபெரும் பேராசிரியர் முனைவர் **நெல்லை. ந. சொக்கலிங்கம்** அவர்கள் **பாவேந்தரின் எண்ணமும் எழுத்தும்** என்னும் தலைப்பில் பொழிவு நிகழ்த்த வேண்டினோம். அவரும் நம் வேண்டுகோளை ஏற்றதோடு அவருடைய உரையை எழுத்து வடிவில் தந்தமை கூடுதல் பெருமை அளிக்கின்றது.

1968ஆம் ஆண்டிலேயே “பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும்” குறித்த கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். அக்கட்டுரையும் தனித்தமிழ் இலக்கியக் கழகத்தினரால் நூலாக வெளிக்கொண்டு வரப்பெற்றுள்ளது. பேராசிரியர் **நெல்லை ந. சொக்கலிங்கம்.** தமிழ்ப் பேராசிரியராக

இருந்து பல மாணாக்கர்களைத் தொலைநிலைக் கல்வியின் வாயிலாக உருவாக்கிய தகைமையுடையவர். அன்னாரின் தமிழ் ஈடுபாட்டை மிகுத்துக்காட்டும் பாங்கில் புதிய கோணத்தில் பாவேந்தரின் எண்ணங்களை எடுத்துரைக்கும் நோக்கில் பேராசிரியர் நெல்லை ந.சொக்கலிங்கனாரின் கருத்துக்கள் அமைந்துள்ளன. அவை பாவேந்தருடைய பன்முகப் பார்வைகளை அவருடைய எழுத்துக்கள் அடிப்படையில் சீராகவும் சிறப்பாகவும் எடுத்துரைக்கும் பாங்கு எண்ணி எண்ணி இறும் பூது கொள்ளுமாறு அமைந்துள்ளது.

பேராசிரியரின் நடை எளிமையும் இனிமையும் நிறைந்து நூலைக் கற்போரைச் சுண்டி இழுக்கும் தகைமைத்து என்பதனைக் கூறத்தேவையில்லை. முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆசிரியப் பணியாற்றிய அறிவுத்தடத்தை-அவர்தம் பட்டறிவின் மேன்மையை இந்நூலில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

பாரதியாரைக் குருவாகப் போற்றி மதித்த பாங்கினையும். பாவேந்தர் தேசியவுணர்வும், இறையுணர்வும் நிரம்பியவராக விளங்கிய திறத்தையும் பேராசிரியர் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டி நிறுவுகின்றார். 1930-க்குப் பின் பாவேந்தரின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றத்தைத்தெளிவாக இப்பேராசிரியர் எடுத்துரைக்கும் ஆய்வுச் சிந்தனை போற்றத்தக்கதாகும். சமகாலப் புலவர் பெருமக்களுடன் இணைத்துக் காட்டிப் பாவேந்தருடைய கவிதைத் திறனை வெளிக்காட்டியுள்ளார்.

மேலும், பாவேந்தர் மரபைப் போற்றும் மனப்பான்மை உடையவர் என்பதனைத்தகுந்த சான்றுகள் வழி நிறுவிச் செல்லும் பேராசிரியர், பாவேந்தரின் தமிழுணர்வை மிகச் சரியான களத்தில் காட்டியுள்ளார், புலமைச் செழுமையின் ஆழத்தையும் அகலத்தையும் தம் சிந்தனை என்னும் அளவு கோல் கொண்டு அளந்து காட்டிப் பாவேந்தரின் ஆளுமைத்திறனை அழுத்தம் தந்து விளக்கியுள்ளார். பாவேந்தரின் கற்பனை

வளத்தையும் கவினையும் தக்கசான்றுகளால் படிப்பவர் விரும்பும் வண்ணம் தந்து செல்லும் பேராசிரியரின் நுண்ணறிவை வியந்து போற்றுகின்றேன்.

புலவர் புலமைப்பித்தனின் பாரதிதாசன் பிள்ளைத்தமிழ் நூலில் இருந்து பொருத்தமான பாடல் அடிகளையும் மேற்கோள்காட்டிப் போகும் பண்பை மதித்துப் போற்றுதல் நம் கடனாகும்.

அறக்கட்டளைப் பொழிவை உரிய நாளைக்கு முன்பே நூலாகக் கொண்டு வரல் வேண்டும் என்பது மாண்புமிகு துணைவேந்தரவர்களின் பெருவிருப்பமாகும். அதனை ஏற்றச் செவ்வனே செய்து முடித்த பேரா்சிரியர் நெல்லை **ந. சொக்கலிங்கம்** அவர்களின் முயற்சியையும் மனம் உவந்து ஏற்றுப் பெருந்தன்மையுடன் எழுதித் தந்த செய்லாற்றலையும் போற்றுவதோடு பேரா்சிரியரைப் பாராட்டுவதும் சாலப் பொருந்தும்.

பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவை மொழிபெயர்ப்புத்துறை சார்பில் நிகழ்த்த அனுமதி அளித்து, நெறிகாட்டி. ஊக்கப்படுத்தி பெருந்துணையாக இருந்துவரும் பேராசிரியர் மாண்பமை துணைவேந்தர் முனைவர் **ம. திருமலை** அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை அளித்து எங்களை வாழ்த்தியுள்ளார்கள். அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறை வளர்ச்சிக்கு உதவிவரும் பதிவாளர் முனைவர் **சே. கணேஷ்ராம்** அவர்களுக்கு நன்றி.

குறுகிய காலத்தில் நூலை செப்பமாக அச்சிட்டளித்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர், துணை இயக்குநர் மற்றும் பணியாளர்களுக்கு நன்றி.

**இரா.சு. முருகன்**

## தோரணவாயில்

பேரன்பு கொண்டோரே! பெரியோரே!
கற்கின்ற இருபாலீர்! சால வணக்கம்!

*"திங்களொடும் பரிதியொடும் பிறந்து வந்த*
*செந்தமிழை இலக்கியத்தை இலக்க ணத்தைக்*
*கண்களெனக் கொண்டதமிழ்க் கவிதை மன்னா!*
*காவியத்தில் நாடகத்தில் மூத்த தந்தாய்!*
*பெண்ணடிமை தீர்த்து வைத்த பெற்றி கண்டோய்!*
*பேசவரும் பேச்செல்லாம் கவிதை யாகி*
*விண்ணதிர ஒலியெழுப்பும் குயிலே! நெஞ்சில்*
*விளக்கேற்றி வைத்தஉனை வணங்கு கின்றேன்"*
*(கன்னதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதி, ப.59)*

என்று கவியரசர் கண்ணதாசன் பாவேந்தர் பாரதிதாசனின் பன்முகத்திறனைக் கவிதையால் போற்றிப் பாராட்டியுரைப்பார். தமிழைக்

*"காம்பில் மணக்கும் மல்லிகை*
*காதில் மணக்கும் தமிழ்மொழி"*
*(இளைஞர் இலக்கியம், ப.9)*

என்று இறுமாப்புடன் கூறி ஏற்றம் தந்தவர் பாவேந்தர்.

*"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்*
*விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"*
*(தமிழ்விடுதூது, 151)*

என்றும்,

*"பாரில்*
*அரியாசனம் உனக்கே யானால் உனக்குச்*
*சரியாரும் உண்டோ தமிழே" (மேலது, 62)*

என்றும் ஏற்றமுறக்கூறும் இனியதமிழை உயிராய்க் கொண்டு அருந்தமிழ்த் தொண்டாற்றியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆவார். அவர் பல்துறைப் பாவலர் ஆவார். அவர்தம் எழுத்துக்களையும் – படைப்புகளையும் அவற்றுள் பாவேந்தர் பதிவு செய்து வெளிப்படுத்தியுள்ள எண்ணங்களையும் தொகுத்துக் காண்பது நம் நெஞ்சிற்கு உரமூட்டும் ஓர் இன்ப இலக்கியமாகும்.

## இளமையும் ஏற்றமும்

1891 ஏப்பரல் 29-ஆம் நாள் புதன்கிழமை இரவிலே புதுச்சேரியிலே திருவாளர் கனகசபைக்கும் திருமதி இலக்குமி அம்மையாருக்கும் மைந்தனாகப் பிறந்தார். இவருக்குச் சுப்பராயன் என்ற தமையனாரும், சிவகாமசுந்தரி என்ற தமக்கையாரும், இராசாம்பாள் என்னும் பெயரிய தங்கையும் உடன்பிறந்தோராவர். தொடக்கக் கல்வியை இவர் திருப்புளிசாமி என்பாரிடம் கற்றுத் தேர்ந்தார். இவர்தம் இளம்பருவத்திலேயே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார். ஓதாதுணர்ந்த கல்வி என்பதுபோல் கனக.சுப்புரத்தினம் அந்த இளம்வயதிலேயே கவிதை புனையும் ஆற்றலிலும் நடிப்பதிலும் திறன்

மிக்கவராக விளங்கினார். ஆமாம்! விளையும் பயிர் வளமானது என்பது முளையிலேயே தெரிந்தது எனலாம்.

கவிதை புனையும் திறன் மட்டும் போதாதென்று சுப்புரத்தினம் புதுச்சேரிக்கு அருகிலே அமைந்துள்ள சாரம் என்ற ஊரில் முதுபெரும் புலவராய்த் திகழ்ந்த பு.அ.பெரியசாமியிட்டும், பெரும்புலவர் பங்காரு பத்தரிடமும் தமிழ் இலக்கண - இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்; மேலும் சித்தாந்த, வேதாந்த நுட்பங்களையும் ஆழமாகக் கற்றார். அதனால் இவர் மாநிலத்திலேயே முதல் மாணவராகத் திகழ்ந்தார்.

## பாரதியாருடன் தொடர்பு

புலமை வீறு பெற்ற சுப்புரத்தினம் எட்டயபுரத்துக் கவிவேந்தர் சுப்பிரமணிய பாரதியாரை, வேணுநாயகர் வீட்டுத் திருமணத்தில் கண்டு மகிழும் வாய்ப்பைப் பெற்றார். பாரதியாரின் உள்ளத்தில் ஓர் உயர்ந்த இடத்தைப் பாரதிதாசன் பிடித்த ஆண்டு 1908 ஆகும்.

பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றுறிந்தாலும் தமிழ்ப் பள்ளியிலேயே மிகுந்த நாள் பாரதிதாசன் பயின்று வந்துள்ளார். இவருடைய பதினெட்டு வயதிலேயே அரசியல் கல்லூரித் தமிழாசிரியர் ஆயினார். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்த்திறமும் சுப்புரத்தினம் பெற்றிருந்தமையினால், அவர் முத்தமிழ் வித்தகராகத் துலங்கினார். இளம்பருவத்திலேயே இவர் சிறுசிறு பாடல்களை இயற்றித் தம் நண்பர்களிடம் இசையோடு பாடிக்காட்டுவாராம். பாரதியார் இவரை நேரிற் கண்டபொழுதிலேயே பாட்டியற்றும் பாங்கினை அறிந்து கொண்டார். "ஓர் நாள் பல நண்பர்களிடையே தெரிவிக்க விழைந்த பாரதியார் 'சுப்புரத்தினம் கவி இயற்ற வல்லவன்' என்று கூற, 'எங்கே எழுதச் சொல்லுங்கள் பார்ப்போம்' என்று நண்பர்கள் கேட்கப் 'பாடு' என்று பாரதியார் சொன்னார். அப்படிச் சொன்னவுடனே சுப்புரத்தினம் பாடிய பாட்டே,

*"எங்கெங்குக் காணினும் சக்தியடா! – தம்பி*
*ஏழுகடல் அவள் வண்ணமடா! – அங்குத்*

*தங்கும் வெளியினிற் கோடியண்டம் - அந்தத்*
*தாயின் கைப்பந்தென ஓடுமடா — ஒரு*
*கங்குலின் ஏழு முகிலினமும் - வந்து*
*கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? — எனில்*
*மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்*
*மந்த நகையங்கு மின்னு தடா!...”*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி)*

என்பதாகும். எட்டடி கொண்ட இப்பாடலின் இரண்டு அடிகளை இசையுடன் பாடினாராம். வேறு எக்கவிஞரும் பெறாத உயர்மதிப்பை — தகுந்த பாராட்டைப் பாரதிதாசன் பாரதியாரிடம் பெற்றார். இச்சிறப்பினால் பாரதிப் புலவரால்,

*“ஸ்ரீசுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச்*
*சேர்ந்த கனகசுப்புரத்தினம் எழுதியது”*

என்று எழுதப்பட்டுச் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பப்பட்டதாம். இவர், பாரதியாருடன் ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கும் மேல் நெருங்கிப் பழகிய கேண்மைக்குரியவர். இதன் விளைவாகக் கனக.சுப்புரத்தினம் என்ற கவிஞர் ‘பாரதிதாசன்’ எனத் தமிழ்ஞாலத்திற்கு அறிமுகம் ஆனார்.

பாரதியாரின் ‘பாஞ்சாலி சபதம்’ முப்பெரும் பாடல்களில் ஒன்று. அதன் முகவுரையில் பாரதியார்,

“எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவிய மொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்.”

(பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், 313)

என்று கூறியதற்கு ஒப்பப் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள் மிகவும் எளிமையாக அமைந்து தமிழ்மக்களின் உள்ளத்தைக்

கொள்ளைகொண்டன. அவர், பாரதியாருடன் பத்தாண்டுகள் பழகிய நட்புடையவர் என்பதால், பாவேந்தர் பாரதியாரின் பன்முக ஆற்றலை நன்குணர்ந்திருந்தார். அதனால் *'புதுநெறி காட்டிய புலவன்'* என்னும் தலைப்பில் திருச்சி வானொலி நிலையக் கவியரங்கில் 1946-ஆண்டு பாவேந்தர் ஆற்றிய தலைமையுரையில், அவையடக்கமாய்ப் பாடியபாடல் இவண் எண்ணத்தகும்.

*"இங்குத் தலைமை ஏற்ற நானும்*
*திங்களைக் கணணிலான் சிறப்புறுத் தல்போல்*
*பாரதிப் புலவனைப் பற்றிச் சிற்சில*
*கூறுவேன்..."*

*(பாரதிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப.72)*

அத்தலைமைக் கவிதையில் பாவேந்தர், பாரதியாரின் கொள்கைகளை எல்லாம் எளிய தமிழில் பிழிந்து தந்துள்ளார். பாரதிக்குப் புகழ்மாலை சூட்டிப் பாவேந்தர் கவிதை மதிப்பீடு செய்து அவரை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றார். அம் மாலையின் சில மலர்கள் இதோ:

*"தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்*
*இமைதிற வாமல் இருந்த நிலையில்*
*தமிழகம், தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்*
*தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில்*
*இலகு பாரதிப் புலவன் தோன்றினான்;*
*பைந்த மிழ்த்தேர்ப் பாகன், அவனொரு*
*செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!*
*குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்*
*கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு*
*நீடுதுயில் நீக்கப் பாடி வந்தநிலா*
*காடுகமழும் கற்பூரச் சொற்கோ!*
*கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்*
*திறம்பாட வந்த மறவன், புதிய*
*அறம்பாட வந்த அறிஞன். நாட்டிற்*

*படரும் சாதிப் படைக்கு மருந்து*
*மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்*
*அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்*
*என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்*
*தமிழால், பாரதி தகுதி பெற்றதும்*
*தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்*
*எவ்வா றென்பதை எடுத்துரைக் கின்றேன்"(மேலது, ப.73)*

பாரதியாரின் பாடல்களிலே மனத்தைப் பறிகொடுத்த பாவேந்தர், ஆனந்தவிகடன் இதழில் கல்கி 'பாரதி உலக கவியல்ல என்றும் அவர் பாடலில் வெறுக்கத் தக்கன உள்ளன என்றும எழுதியமையினைக் கண்டு கொதித்தெழுந்தார். அக்கொதிப்பில் வெளிவந்த கவிதையே 'மகாகவி' என்பதாகும். ஞாலக்கவிஞர் பாரதியார் என்பதனைப் பாவேந்தர்,

*"பழையநடை பழங்கவிதை பழந்த மிழ்நூல்*
*பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தா ரில்லை;*
*பொழிந்திடுசெவ் வியஉள்ளம் கவிதை யுள்ளம்*
*பூண்டிருந்த பாரதியா ராலே இந்நூல்*
*அழுந்திருயிருந் திட்டதமிழ் எழுந்த தென்றே*
*ஆணையிட்டுச் சொல்லிவிடுவோம் அன்னை மீதில்*
*அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை*
*அறிந்திலதே புவிஎன்றால் புவிமேற் குற்றம்!*
*(மேலது, ப.83)*

என்றும்,

*"உய்யும்வழி கெடாதிருக்க மெதுவாய் இந்நாள்*
*உலககவி அல்லஅவர் எனத் தொடங்கி*
*ஐயர்கவி தைக்கிழுக்கும் கற்பிக் கின்றார்*
*அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டோ?*
*(மேலது, ப.84)*

என்றும் கூறுவனவற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. பாரதியாரின் எண்ணங்களை முழுவதனையும் உணர்ந்தவர் பாவேந்தர். பாரதிதாசன்.

இத்தொகுதியில் 'பாரதி உள்ளம்' என்னும் தலைப்பில் ஒருபாடல் புனைந்துள்ளார்.

பாரதியாருக்கு மொழியும் நாடும் சிறந்தோங்கி விளங்குதல் வேண்டும். சமுதாய ஏற்றத்தாழ்வுகள் அகலுதல் வேண்டும் என்று பாரதி விரும்பினார். இவை அவருடைய எழுத்துக்களில் ஏற்றம் பெற்றிருக்கும். இப்படி உயிர் மூச்செனப் பாரதியார் கருதிய கொள்கைகளை உடனிருந்து உற்றுணர்ந்த பாவேந்தர் 'பாரதி உள்ளம்' என்ற பாடலிலே பதிவு செய்துள்ளார். அப்பாடலில் இருந்து சில அடிகளைக் காண்போம்:

*"சாதி ஒழித்திடல் ஒன்று – நல்ல*
*தமிழ் வளர்த்தல்மற் றொன்று*
*பாதியை நாடு மறந்தால் - மற்றப்*
*பாதி துலங்குவதில்லை*

என்றும்,

*"செந்தமிழ் நாட்டினிற் பற்றும் - அதன்*
*சீருக்கு நல்லதோர் தொண்டும்*
*நிந்தை இலாதவை அன்றோ! எந்த*
*நேரமும் பாரதி நெஞ்சம்*
*கந்தையை எண்ணுவ தில்லை – கையிற்*
*காசை நினைப்பதும் இல்லை.*
*செந்தமிழ் வாழிய! வாழி – நல்ல*
*செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்".*

*(மேலது, பக்.80-81)*

பாரதிப் புலவருக்கும் பாவேந்தருக்கும் இடையே மிக நெருக்கமான உறவு செழித்தோங்கி இருந்தமையினாலேதான் பாவேந்தர் பாரதியாரைத் தம்முடைய குருவாக ஏற்றுக்கொண்டார்.

"இவன், பாரதியின் அரசியல் கொள்கைகளையோ சமுதாயக் கருத்துக்களையோ, ஆன்மீக, சமயச் சிந்தனைகளையோ ஒரு போதும் ஏற்றதில்லை. ஆயினும் பாரதியின் தாசனாகத் தம்மைப் பறைசாற்றி நின்றான். பாரதியை வழிபாட்டிற்குரியவராய்க் கொள்வோர் பலர், பாரதிக்குச் சூட்டாத புகழ் அஞ்சலியைப் புரட்சிக் கவிஞன் செய்திருக்கின்றான்.

கடவுளுக்குக் கூடத் தன்னை அடிமை எனச் சொல்லாத அவன் பாரதிக்குத் தன்னை அடிமை என்றதன் மூலம் மகத்தான குரு வணக்கத்தைச் செய்திருக்கிறான்........

குருவோடு – ஆசிரியனோடு – வழிகாட்டியோடு – அரசியல் கருத்தில் முரண்பட்டு – ஆன்மீகச் சிந்தனையில் மாறுபட்டுச் சமுதாயக் கோட்பாடுகளில்கூட மனம் ஒன்றுபடாத பாரதிதாசன் அவருக்கு மரியாதை செய்வதில் முன் நின்றான். பாரதியின் புகழுக்குப் பங்கமென்றால் சண்டையிட்டான்; சல்லடம் கட்டினான்.

தான் வாழ்ந்த காலம் வரை, பாரதியைப் பற்றித்தவறான வரலாற்றுக் குறிப்பை யார் சொன்னாலும், தான் சார்ந்திருந்த இயக்கச் சூழலைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் கொதித்தெழுந்தான் பாவேந்தன்" (புரட்சிக்கவிஞரின் கவிதைக் கோட்பாடுகள், பக்.13-14) என்று சொல்வேந்தர் செல்வேந்திரன் ஆணித்தரமாக எடுத்துரைப்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் நாட்டு விடுதலை வேட்கையால் கனிந்திருந்த பாரதியார், வ.வே.சு. டாக்டர் வரதராஜிலு, அரவிந்தர் போன்ற விடுதலை வேள்விக்கு வித்திட்ட பெருமக்களுக்குப் பிரஞ்சு ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரியில் பாரதிதாசன் புகலிடம் அளித்துள்ளார். மேலும் பாரதிதாசன் தம்முடைய பெற்றோருக்குத் தெரியாமல் மேல் துண்டில், வடித்த சோறு கொண்டு கொடுத்த தகைமை போற்றத்தகும். சில நேரங்களில் அவர்களின் செலவுக்குப் பணம்கூடத் தந்துதவிய ஈரநெஞ்சினர் பாரதிதாசன். பாரதியாரின் 'இந்தியா' இதழை மறைமுகமாகப் பதிப்பித்து வெளிவரப் பாரதிதாசன் உதவிய தறுகண்மையாளர். ஏன்? மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் மாவட்ட ஆட்சியாளர் ஆஷ் என்ற ஆங்கிலேயரை வாஞ்சிநாதன் சுட்டுவிட்டுத் தானும் சுட்டுக்கொண்ட செய்தி நாம் அனைவரும் அறிந்த ஒன்றே! ஆனால் அந்தத் துப்பாக்கி பாரதிதாசன் அனுப்பியது தானாம். இவை பாவேந்தர் வரலாற்றில் பதிவான தகவல்கள்.

பாரதியாருடன் நெருங்கிப் பழகியதன் விளைவாகப் பாரதிதாசன் சாதி, மதம் கருதாத உறுதியான கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். புலமைச்

செருக்கும், மிடுக்கும் செறிந்த நடையில் எழுதும் தேசிய மற்றும் தெய்வப்பாடல்களை எல்லோரும் படித்துணரும் பான்மையில் எழுதினார். பாரதி வழியில் அவர்,

*"தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ"*

என்று உரத்த குரல் கொடுத்தார். இதனை வழிமொழிந்து பாடுகின்றார் கவிஞர் புலமைப்பித்தன். அது இதோ:

*"... மேலான புதுவைநகர் நூலோ டினிக்கவரும்*
*ஏந்தல் தமிழ்த்தொண் டினைச்*
*செய்வோர்கள் சாவதிலை என்றுநிலை நாட்டியவன்*
*செங்கீரை ஆடி யருளே!"*
*(பாவேந்தர் பிள்ளைத்தமிழ், செங்கீரைப்பருவம், 16)*

## நாட்டுப்பற்றில் தோய்ந்த நாட்டம்

தேசியக் கவிஞரெனப் போற்றப்படும் பாரதியாரின் எண்ணங்களின் தாக்கத்தை பாவேந்தரிடம் 1930-இல் அவர் இயற்றிய பாடல்களில் இருந்து நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. பாரதிதாசனின் எண்ணம் நம் நாட்டு விடுதலையாகவும், அண்ணல் காந்தியடிகளைப் போற்றுவதாகவும் விளங்கிற்று. சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட புரட்சியாளர் என்று பாரதிதாசனைப் பற்றி நாம் அறிந்து வைத்துள்ளோம். ஆனால் தொடக்ககாலக் கவிதைகளையும் அவற்றுள், பொதிந்து வைத்துள்ள கருத்துக்களையும் ஆய்கின்ற போது அவருடைய நாட்டுப்பற்றும், இறையுணர்வும் இனிதே நமக்குப் புலப்படும்.

"சமூகநீதியை நிலைநாட்டவும், சாதி சமய ஆதிக்கங்களை எதிர்த்துப் போராடவும் தம் கவித்திறனைக் காணிக்கையாக்கிய பாவேந்தர் பாரதிதாசனை நாடு நன்கறியும். தொடக்க கட்டத்தில அவர் தேசியப்பாடல்களையும் கதர்ப்பாட்டுகளையும் புனைந்தார் என்பதை, ஆவேசக் கவிஞரென அவருக்கு அஞ்சலி செலுத்துவோர் பெரும்பாலும் அறிந்திருக்க மாட்டார்கள்; அறிந்திருந்தாலும், புரட்சிக்கவி பற்றித் தாங்கள்

கொண்டுள்ள எண்ணத்துக்கு அது ஒத்துவரவில்லை என்று ஒதுக்கி மறந்து விடுகிறார்கள்" (தேசியம் வளர்த்த தமிழ், ப.29) எனக் கா.திரவியம் கோடிட்டுக் காட்டுவது இவண் இணைத்துக் காணத்தகும்.

1920-ஆம் ஆண்டு பாரதிதாசன் இந்திய விடுதலைப் போரில் கலந்து கொண்டவர் என்பது இவண் அடிறியத் தக்க செய்தியாகும். தேசிய இயக்கப்பாடல்கள் பாடுவதனைப் பாவேந்தர் 1920-30-க்களில் தம்முடைய கொள்கை எனக் கொண்டிருந்தார். அவர் "பாரத புத்திரன்" என்று தன்னைச் சொல்லிக்கொள்வதில் பெருமையடைந்துள்ளார். விடுதலை வேள்வியின் வெளிப்பாடாக இவர் பாடிய பாடல்தான் "கதர் இராட்டினப்பாட்டு" ஆகும். இந்த நூல் 1930-ஆம் ஆண்டு குயில் வெளியிடாக வெளியிடப்பட்டது. இதுவே முதற்பதிப்பும் ஆகும். 1955-இல் இரண்டாம் பதிப்பு; 1997-இல் இந்நூல் இந்திய விடுதலைத் திருநாள் பொன்விழா வெளியீடாகவும் வெளிவந்துள்ளது. இந்நூலில் 'பாரததேவி' குறித்த பாவேந்தரின் வெண்பாதான் முதற்பாடல், அப்பாடல்:

*"விண்கொள் இமயமா வெற்பே திருமுடியாய்ப்*
*பண்கொள் குமரி பணிதாளாய் - மண்கொள்*
*வளமேதன் மேனியாய் வாய்ந்த'தாய்' வீரர்*
*உளமேதன் மேனிக் குவப்பு."*

இவ்வெண்பாவில் பாரதிப்புலவர் பாடிய பாரததேவியின் திருத்தசாங்கப்பாடலின் சாயலைக் கண்டுணர முடிகின்றது.

*"தேனார் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த*
*மானாள்பொன் நாட்டை அறிவிப்பாய்! — வானாடு*
*பேரிமய வெற்புமுதல் பெண்குமரி ஈறாகும்*
*ஆரியநா டென்றே அறி" (தேசியகீதங்கள், ப.33)*

என்பதே அப்பாடல்.

கதர்இராட்டினப்பாட்டில் ஜன்மபூமியின் சிறப்பு, காந்தியடிகளும் கதரும், சுதந்தரதேவியும் கதரும், பிரதான வேலை, இராட்டினச் சிறப்பு, அன்னைக்கு ஆடை வளர்க, 'பாரததேவி வாழ்த்து எனப் பல்வேறு

தலைப்புகளின் பாடல் தொகுப்பாக இந்நூல்' என்று தலைப்பிட்டு மன்னர்மன்னன் குறிப்பு வரைந்துள்ளார். அதிற்காணப்பெறும் கருத்துக்களைக் காண்பது இவண் தேவையான ஒன்றாகும். அப்பகுதி வருமாறு: "1922, 23 ஆண்டுகளில் இப்பாடல்களும் அதற்கடுத்து வெளியிடப்பட்ட காந்திய இயக்கப் பாடல்களும் வீதிதோறும் பாடப்பட்டன. கனக.சுப்புரத்தினம் என்ற பாரதிதாசன்.... அண்ணல் காந்தியைப் பற்றியும் கதரைப் பற்றியும் பிரசாரம் செய்வது அரசுக்கு எதிரானவை என்று பிரஞ்சு ஆட்சியாளர் கருதவில்லை என்றாலும், உடன் பிறந்தே கொல்லும் வியாதி, ஊரில் உண்டல்லவா! அரசாங்கப் பள்ளிக்கூட ஆசிரியர், காந்தியைப் பற்றிப் பாடுவதும் கதர்ச்சட்டையும் கதர்வேட்டியும் கதர்க்குல்லாவும் அணிந்து கொள்வதும் குற்றம்அல்லவோ என்று பக்குவமாய்ச் சிலர் பற்ற வைக்க அதிகாரிகளின் நெஞ்சில் தீ மூண்டது.

பாரதிதாசன் இருந்த வீடுதான் தம்பு நாயக்கர் தெரு வீடு. காவலர்கள் கடிதோடி வந்தனர்! கதர் இராட்டினப்பாட்டு நூல் தடைசெய்யப்பட்டிருப்பதால் கட்டுக்கட்டாய் இருந்தவை பறிமுதலாயின. பாரதிதாசன் வீட்டிற்கு அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருந்த மாணவர் வ. பொன்னம்பலம் வீட்டுத் தகரப் பெட்டியில் ஒளிந்திருந்த சில படிகள் மட்டும் தப்பிப் பிழைத்தன. அவை பிற்காலத்தில் நமக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது."

(மன்னர் மன்னன், கதர் இராட்டினப்பாட்டு, இறுதியில்)

பாவேந்தருடைய இளமைக்கால எழுத்துக்களைப் பற்றியும் எண்ணங்களைக் குறித்தும் நாம் அறிந்து கொள்ள பாவேந்தரின் மகன் மன்னர் மன்னனின் குறிப்பு நமக்குப் பெருந்துணையாக அமைகின்றது.

அண்ணல் காந்தியடிகளைப் பற்றியும், கதராடையைப் பற்றியும் பாவேந்தர் எடுத்துக் கூறியுள்ள எழுத்துக்களின் வழி அவருடைய இளமைக்கால எண்ணங்களை நாம் தெரிந்து கொள்ள இயலும்.

*"வாழ்க நீ! எம்மான் இந்த வையத்து நாட்டி லெல்லாம்*
*தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்*

*பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை*
*வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!"*
*(பாரதியார், தேசிய கீதங்கள்)*

என்ற காந்தியடிகளை 'வாழ்க நி எம்மான்' என்னும் கவிதையில் போற்றிய பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பாரதிதாசன்,

*"இன்னல் செய்தார்க்கும் இடர்செய்திடாமல்*
*இராட்டினம் சுற்றென்று சொல்லும் - எங்கள்*
*ஏதமில் காந்தியடிகள் அறச்செயல்*
*வெல்லும் - வெல்லும் - வெல்லும்*
*கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்*
*கழறுகின்றேன் அதைக் கேளே - 'நீவிர்*
*கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்*
*தூளே – தூளே – தூளே*
*பால்நுரை போலப் பருத்தியுண்டு சொந்தப்*
*பாரத தேசத்தில் எங்கும் - எனில்*
*பண்டை முதல் இழை நூற்பதிலேயாம்*
*சிங்கம் - சிங்கம் - சிங்கம்*
*வானம்புனல் சுடர் நாணும்படி உடை*
*வர்ணமும் சொர்னமும் கொண்டு – பெரும்*
*வையம் களித்திட நெய்யும் திறம் எமக்*
*குண்டு – உண்டு – உண்டு"*
*(கதர் இராட்டினப்பாட்டு)*

என்று நெஞ்சுறுதியுடனும் எடுப்பான சொற்களில் கூறுவதிலிருந்து பாவேந்தரின் தேசியஉணர்வின் வலிமையும் வளமும் நன்கு புலப்படும்.

'சுதந்தரதேவியும் கதரும்' என்ற தலைப்பில் அமைந்துள்ள பாவேந்தரின் பாடலில் இறைப்பற்றோடு இணைந்துவரும் நாட்டுப்பற்றைக் கண்டின்புற முடிகின்றது. இதன் குறிப்பில் பாரதியாரைப் போன்றே இவரும் 'இராகம் - பியாக்; தாளம் - சாப்பு' என்றும் குறிப்பிட்டுவிட்டு,

*"ஆளை மயக்கிடும் மாதொருத்தி — உடல்*
*அத்தனையும் பொன்னை ஒத்திருந்தாள் - அவள்*
*பாளை பிளந்த சிரிப்பினிலே — என்னைப்*
*பார்த்துரைத்தாள் 'எந்த நாளையிலே — உனறன்*
*தோளைத் தழுவிடக் கூடும்' என்றே - 'அடி'*
*சுந்தரி உன்பெயர் ஊர் ஏதென்றேன் - அவள்*
*'காளியனுப்பிய கன்னி' யென்றாள் - என்றன்*
*காதற் சுதந்தர மங்கையன்றோ அவள்"* *(மேலது)*

என்று பாடியதிலிருந்து இவருள் பொங்கித் ததும்பிப் பூரணமாய் நின்ற தேசியப்பற்றையும் சுதந்தர வேட்கையையும் அறிய ஒண்ணும்!

தேசத்தாரின் 'பிரதானவேலை' என்ற பாடலில் பாவேந்தர் 'கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு' என்று பாடுவதுண்டு அந்தக் குறத்திப் பாட்டின் மெட்டு' என்ற குறிப்புடன்,

*"பால்நுரை போல் பாரதத்தில்*
*பஞ்சுவிளைப் பீரே — நல்ல*
*பஞ்சுவிளைப் பீரே — அந்தப்*
*பஞ்சுதனைச் சுத்திசெய்வீர்*
*பனிமலைபோல் நீரே..........*
*............ ............. .......*
*கதரணிவீர் என்றுரைத்த*
*காந்தியண்ணல் ஆணை — எழிற்*
*காந்தியண்ணல் ஆணை — அதைக்*
*கருதிடுவீர் அது உமக்கு*
*நாரதனார் வீணை"* *(மேலது)*

என்று வேண்டுகோள் விடுப்பார். அம்மட்டோ! இறுதியில் ஆங்கில ஆட்சி நம்மைப் பிடித்த கலி' தொலையும் என்பதோடு தம் குருநாதர் பாரதியார் கூறிய 'கிருதயுகம்' என்ற சொல்லையும் பாவேந்தர் எடுத்தாண்டுள்ளார். இதனால் பாரதியாரிடமும் அவர் படைப்பின் மீதும் பாவேந்தருக்கு இருந்த

உறவும் உணர்வும் தெற்றெனப் புலப்படும். இதோ அந்த உறவும் உணர்வும்:

*"கதரணிவோம் ஒன்றுகூடிக்*
*கலிதொலைக்க நாமே – தீக்*
*கலிதொலைக்க நாமே – தீக்*
*கலிதொலைத்துக் கிருதயுகம்*
*காணப் பெறுவோமே"* *(மேலது)*

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' இந்திய உரிமைப் போரையே உள்ளீடாக வைத்துப் பாடப்பெற்றது என்பர். அவர் வழியில் பாவேந்தர் 'அன்னைக்கு ஆடை வளர்க' என்றொரு பாடலைப் பாடிச் சுதந்தரதேவியின் புகழைப் போற்றியுள்ளார்.

சுதந்தரதேவியாகப் பாஞ்சாலியையும் கண்ணனாகக் காந்தியையும் துச்சாதனனாக ஆங்கில ஆட்சியையும் உருவகம் செய்து பாவேந்தர் இப்பாடலை வடித்துள்ளார். அவர் வடித்துச் சொன்னபடி காண்போம் சில அடிகளை இங்கே:

*"ஆவி இழக்கலாம்"*
*"ஆடை இலக்கலாம்"*
*"கூவிக் குரல் இழக்கும்"*
*"கோதைதுயர் கண்டிருந்தும்"*
*"வீரர்களும் மன்னர்களும்"*
*"மீட்கக் கருதீரோ!"*
*"காரிகை என் மானமுங்கள்*
*"கண்முன் இழப்பதுண்டோ?*
*என்று துடித்த மூதாள்*
*அன்றந்தப் பாஞ்சாலி*
*சென்று துர்ச்சாதனன் தான்*
*சேலை பறித்திடுங் கால்*
*................ .....................*
*மாயா மலர்க் கண்ணா*
*வந்து துயர்த்திடுவாய்*

*என்று ரைத்திட்டாள்*
*இதனைச் செவியுற்றுச்*
*சென்று கண்ணக்காந்தி*
*சித்திரஞ் சேர் ஆடை*
*வளர்ந்திடுக என்றான்*
*அறம் வளர்க்க வந்தோன்*
*வளர்க வளர்க நம் வாழ்வு" (மேலது)*

இப்பாடலிலும் பாரதியார் பயன்படுத்திய சொற்களை ஆங்காங்கே பாவேந்தர் பயன்படுத்திக் குருவை மதித்ததோடு அவர் கருத்தினையும் ஏற்றுப் போற்றிய பாங்கு தெளிவாகின்றது.

மணிவாசகர் பதிப்பகம் 1994-ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டுள்ள 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூலில் பாவேந்தரின் வெளிவராத பாடல்கள் சிலவற்றையும் சேர்த்துப் புதிய பாடல்கள் என்று தலைப்பிட்டு வெளியிட்டுள்ளனர். கதர் இராட்டினப்பாட்டையும் அதில் சேர்த்துள்ளனர். இது மட்டுமல்லாமல் தேசியம் என்று தலைப்பிட்டுச் சில பாடல்களையும் வெளியிட்டுள்ளனர். இந்தப் பாடல்களிலும் பாவேந்தரின் தேசிய உணர்வு வெளிப்படுகின்றது.

*"சொல்வாய்ந்த பாரதத்தைத் தோளில் அறங்காக்க*
*வில்லாய்ந்த என்றன் விறல்நாட்டைக் - கல்லாய்ந்த*
*மண்ணிலும்அமர்ந் தாளென்று வாழ்த்து"*
*(பாரதிதாசன் கவிதைகள், ப.579)*

என்று பாவேந்தர் நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் பாடவேண்டிப் பதிவு செய்துள்ளார். 'சக்தி பாட்டு' என்னும் பெயரிய மற்றொரு பாடலில் பாவேந்தர்,

*"பாரத நாட்டுக்குத் தாயடிநீ – உன்*
*பாரதத்தை நம்பிய சேயடி யான்;*
*பாரத நாட்டுக்கு வந்தகதி – தனைப்*
*பார்த்திருந்தும் அதைத் தீர்த்த தில்லைஅடி!"*
*(மேலது, ப.580)*

என்று தம்முடைய மனம் படும்பாட்டினை — ஏக்கத்தை வெளிப்படுத்துவார். அடுத்து வரும் பாடல் 'தேசிய உபாத்தியாயர்' என்பதாகும். இப்பாடலை அவர் 'பிள்ளைகளே கேளீர்' என்று தொடங்கி, வாணிகம் செய்யவந்த ஆங்கிலேயர், ஆட்சியைப் பிடித்து அடிமையாக்கிய தந்திரச் செயலை உங்கள் பெற்றோரிடம் சொல்லுங்கள் என்பார். சின்னக் குழந்தைகளின் உள்ளத்திலே விடுதலை உணர்வை விதைத்துப் பிஞ்சுமணங்களில் உரமூட்டுவார்.

*"சொத்தெமக்கு வைப்பதாய்ச் சொல்லுவது சொத்தன்று*
*சொத்தெமக்கு நல்ல சுதந்தரந்தான் என்றுரைப்பீர்.*
*பிள்ளைகளே வீரர்க்குப் போர்களே 'உம் உரிமை'*
*நொள்ளைகள் போல் விட்டுவிட்டு நோயால் வருந்துவது*
*தந்தைமார் செய்கின்ற தப்பன்றோ? ஆதலால்*
*வெந்துயரைத் தீருங்கள் வெற்றிபெறப் பாரதத்தை*
*மீட்டுக் கொடுங்கள் எனத்தினமும் தந்தையரைக்*
*கேட்டுக் கொள்ளுங்கள் இனி" (மேலது, ப.591)*

எனச் சிறுவர்க்குச் சொல்வதிலும் பாரதி வழியைப் போற்றியுள்ளார்.

மெத்தை வீட்டு வெள்ளை நாயும் தெருவில் திரியும் கறுப்புநாயும் பேசிக் கொள்வதாக வரும் பாடல் 'சுதந்தரம் உயிரின் இயற்கை' என்பதாகும். வெள்ளை நாயிடம் கறுப்புநாய்,

*"அடிமையாய்நீ இருப்பதேன்!*
*கதிதான் கெட்டுநீ நடப்பதா?*
*கட்டுப் பட்டுக் கிடப்பதா?*
*சதிராய் உன்னிடம் அண்டேனே*
*சதையில் ரத்தம் கண்டேனே!*
*இதனால் அஞ்சி ஓடுதுபார்!*
*இன்னும் ஓடுது ஓடுதுபார்.' (மேலது, பக்.581-582)*

எனக்கேட்டதாம். இதன் வாயிலாகவும், இந்திய தேசிய உணர்வைப் பாவேந்தர் வலியுறுத்தக் காண்கின்றோம். 'நாடு பிடிக்கும் விளையாட்டு'

என்னும் பாடலின் வழி உரிமைப்போருக்கு உரமூட்டுவார். இப்பாட்டின் முன்னுரையில் "விசாலமான நான்கு மூலைக்கோடு கிழிக்க வேண்டும். ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொருவர் நிற்கவேண்டும். அப்படி நிற்பவர்கள் பாரத நாட்டார். ஒருவன் நடுவின் நிற்பான் அவன்தான் அயலானாகிய கோட்டான்" என்ற முன்னுரையுடன் தொடங்கி உரையாடல் போக்கில் அமைகின்றது.

பாரதிதாசன் இரண்டு தாலாட்டுகள் பாடியுள்ளார். ஆண் குழந்தையைத் தாலாட்டுவதாகவும், பெண் குழந்தையைத் தாலாட்டுவதாகவும் அவை அமைகின்றன.

*"நல்ல இமயமலை நாடிவரும் கங்கைநதி*
*வெல்லத் தமிழ் பிறந்த மேன்மைப் பொதியமலை,*
*வைகை, யமுனை, வளங்கொழிக்கும் பெண்ணைநதி*
*பொய்கை, மலர்ச்சோலை பூணுகின்ற பாரதனே*
*வில்மறவர், வெல்மறவர். வெற்பொத்ததோள் மறவர்*
*பண்டுதமிழ் நாட்டுப் பலவீரர் பார்த்திருக்கச்*
*செல்வம் பறிபோதல் எண்ணிச் சிரித்தாயோ!*

*(மேலது, ப.585)*

என்று பாரதிதாசன் தாலாட்டுவதில் தாய்நாட்டுப்பற்றுப் பொங்கி வருவதனை காணமுடிகின்றது. இன்னும் தாலாட்டுத் தொடர்கிறது.

*"தீராத ஆசையெல்லாம் தீர்க்கவந்த பெண்ணரசி!*
*வாராத செல்வமெல்லாம் வந்துதரும் தெய்வீகமே!*
*தாமரையின் வாய்திறந்தால் சாதிசனம் வாய்திறக்கும்*
*சாமத்திலும் பிரியாத் தாய்நாடு வாய் திறக்கும்*
*ஒத்திருக்கும் உன்சமூகம் ஊமையரென் றெண்ணாதே!*
*மொய்த்திருக்கும் உன்சமூகம் முப்பத்து முக்கோடி..."*

*(மேலது, ப.585)*

பாரதியார்,

*"மாரத வீரர் மலிந்த நன் னாடு*
*மாமுனிவோர்பலர் வாழ்ந்த பொன்னாடு*

*நாரத கான நலந்திகழ் நாடு*
*நல்லன யாவையும் நாடுறு நாடு*
*பூரண ஞானம் பொலிந்தநன் னாடு*
*புத்தர் பிரானருள் பொங்கிய நாடு*
*பாரத நாடு பழம்பெரும் நாடே*
*பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே"*

*(தேசியகீதங்கள், ப.23)*

எனப் பழம்பெருமை, மரபு, பண்பாடு, தொன்மைச் சிறப்புப் போன்ற பல சிறப்புகளையும் கூறி நாட்டுப்பற்றைப் பாரதநாட்டில் எல்லோரும் பெறவைத்தார். அதே போன்று பாவேந்தரும் தாம் படைத்துள்ள தேசியப் பாடல்களில் பழம் பெருமைகளைக் கூறி நாட்டுப்பற்றைச் சிறுகுழந்தைகளின் உள்ளத்தில் பதிய வைத்துள்ளார்.

பாவேந்தரின் 'தேசிய விடுகவிகள்' என்ற பாடல் நாட்டார் இலக்கிய வடிவமைப்பில் வருவதாகும். ஏழு செய்திகளைக் குறித்தமைவது இப்பாடல். அதில் ஒன்றைக் காண்போம் இங்கே:

*"கங்கைநதி தலையில் உண்டு சிவனார்அல்ல*
*காலடியிற் குமரி யுண்டு ராமன் அல்ல*
*சங்கை யற்ற வயதுண்டு கிழவியல்ல*
*சாத்திரத்தின் ஊற்றனையாள் கலைமாதல்ல*
*எங்குலத்தைப் பெற்றதுண்டு பிரமன்அல்ல*
*ஏற்றுண்ணும் எண்ணமில்லை இறுமாப் பல்ல*
*மங்கை என்று பாடிடுவர் புலவரெல்லாம்*
*மற்றிதனை இன்னதென வழுத்து வீரே"*

*(பாரதிதாசன் கவிதைகள், பக்.599-600)*

இவ்வாறு பாரதிதாசன் புதுப்புது இலக்கிய வடிவங்களில் நாட்டுப்பற்றினையும், இந்திய நாட்டையும், இந்திய விடுதலையையும் குறித்துப் பாடி நம் தமிழ் மக்கள் உள்ளங்களில் உரிமை வேட்கையைத் தூண்டியுள்ளார். இவ்வுணர்வுகள் யாவும் தம் குருவின் உறவால் வந்த உணர்வாகும் என்பதில் ஐயமில்லை!

இந்திய உரிமைப்போர் முழக்கம் குறித்தும் ஆங்கில அரசின் வெங்கொடுமைகளைத் தங்களின் பாடலடிகளின் வழி எதிர்த்த புலவர் பெருமக்கள் பலர். பாரதிக்கு முன்னும் பின்னும் ஆங்கிலேயரை எதிர்த்த புலவர்கள் தங்களின் வெறுப்பைக் கடும் சொற்களால் கூறியுள்ளனர். சிலரின் வெறுப்புணர்வை இங்கே ஒப்பிட்டுக்காண்போம்:

*"மிக்க துயர்செய்யும் ஈனப்புலையர்"*
*"உதிரங் குடித்து நிணந்தின்னு மூடர்"*
*(வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள்)*

*"கருணையிலா ஆட்சி"*
*"நச்சரவம்,*
*ஆதிக்கொடியவுயிர் அத்தனையும் போய் ஒழிக"*
*(வள்ளலார்)*

*"இந்நாட்டினைச் சந்தை என்றாக்கிய அந்நியர்"*
*(பாரதிதாசன்)*

*"கலிப்பகை"*
*"பேயின் கூத்து"* - *நாமக்கல் கவிஞர்*

*"நீதியற்ற கொடியரின் வஞ்சனை"*
*"ஈனங்கொண்ட ஆட்சி"* - *சுத்தானந்த பாரதி*
*"பாதகர்"*
*"ஈனங்கொண்ட ஆட்சி"* - *ராய. சொக்கலிங்கன்.*

பிற தமிழ்க்கவிஞர்களின் உணர்வைப் போலவே பாரதிதாசனின் விடுதலையுணர்வும் சுடுநெருப்பாய் விளங்கிற்று என்பதில் ஐயமில்லை!

## இறையுணர்வில் ஏற்றம்

பாவேந்தர் பாரதிதாசன் தொடக்ககாலத்தில் பக்தியுணர்வு பெருக்கெடுக்கும் பாடல்களைப் பாடித் தமிழுக்கு அணிசெய்துள்ளார். 'சக்தியை வியந்து பாடிய முதல் பாடலை நாம் நன்கு அறிவோம். ஆயினும் அவர் பாடியுள்ள இரண்டு இறையுணர்வுப் பாடல்கள் இவண் காணத்தக்கவை.

1. மயிலம் ஸ்ரீசுப்பிரமணியர் துதியமுது
2. ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம்

சுப்பிரமணியர் துதியமுது நூல் "ஆசிரியர் கனக.சுப்புரத்தின முதலியார் இயற்றி 'வேல்நிலையம்' காசி.லக்ஷ்மணப் பிரசாதால் மயிலம் ஸ்ரீசுப்பிரமணியர் எழுந்தருளியபோது பிரசுரித்து வழங்கப்பட்டது" என்ற முகப்புரையுடன் வெளியிடப் பெற்றுள்ளது. பாவேந்தர் காப்பு வெண்பாவாக மணக்குள விநாயகரைப் பாடியுள்ளார். பாரதியார் மணக்குள விநாயகரை மையமாய் வைத்து 'விநாயகர் நான்மணிமாலை' இயற்றியுள்ளார். பாரதியின் சீடர் பாரதிதாசன் விநாயகரைக் காப்புச் செய்யுளில் பாடிவிட்டு மயிலம் முருகப் பெருமானை மனமுருகிப் பாடியுள்ளார்.

*"சீர்மணக்குந் தென்மயில வெற்பிற் றிருமுருகன்*
*பேர்மணக்கும் பாட்டிற் பிழையகல — ஓர்மணக்கு*
*ளத்தனப்பன் நற்களிற்றி ணைப்பதத்தி னைத்துதிப்பன்*
*எத்தனப்ப டிக்குவெற்றி எற்கு"*

*(பாரதிதாசன் கவிதை, ப.564)*

நூலின் தொடக்கத்தில் இவர் "குகமயம்" எனக் குறிப்பிடுவதும், "ஸ்ரீ ஷன்முகன் வண்ணப்பாட்டு" என்று கூறிக் காப்பு வெண்பா ஒன்றும் பாடியுள்ளமையால், இவருடைய இறையுணர்வும் மரபைப் போற்றும் மாண்பும் இனிதே பெறப்படும். இந்நூல் பாரதியார் மறைவுக்குப்பின் (1921), 1926-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதாகும். இவர் 'புதுவைமுரசு' இதழாசிரியராகப் பொறுப்பேற்றமை 1930 ஆகும். 1933-இல் நாத்திகனாக மாறிவிட்டார். ஆக 1933-க்கு முன்பு பாவேந்தர் இறையுணர்வு நிரம்பப் பெற்ற கவிஞராகவே திகழ்ந்து வந்துள்ளமை எண்ணத்தகும். இப்பாடல்கள் பாரதியாரின் புதுவை வருகைக்கு முன்னும் பின்னும் பாடப்பட்டவையாகும்.

*"உலகுக்கு நற்பாட் டுரைக்கவெனக் காதை*
*நிலைசெயல் அழித்தல் நினது — வலியாகும்*
*தும்பிமுகா காப்பாற்று சொல்வண்ண மெல்லாமுன்*
*தம்பிகுகன் ஷண்முகன்மேல் தான்"*

என்பது அடுத்துவரும் காப்பு வெண்பாவாகும். காப்பு வெண்பாவைத் தொடர்ந்து நாட்டுச் சிறப்பையும், நகரச் சிறப்பையும் மயிலை மலையின் சிறப்பையும் விரிவாகவே பாடிப் போற்றியுள்ளார். தேசிகதோடி இராகத்தில் வரும் பாடலின் தொடக்கம் இதோ:

*"சீர்கொண்ட தென்மயி லாசல நாடென்று*
*பேர்கொண்டு நாழ்ப் பெருங்கடல் நீர்மொண்டு*
*கார்கொண்டல் விண்ணடுத்து உல*
*கோரஞ்ச மின்விடுத்து அதி*
*ராக இடிஇடித்து – மிக்க*
*மழைமுத்து மாலை*
*விழவைத்த தாலே*
*வழியுற்று ஞாலம்*
*குழிவுற்று மேலே"*
*வருநதியின் காட்சிசொலும் வகையறியேனே..."*
*(மேலது, பக்.564-565)*

இம் முதற்பாட்டின் இறுதியில் இவர்,

*"சுப்புரத்தினம் ஓதும்*
*நற்கவிப் பொருள் போலும்*
*மலைபோல்நெல் வீடுவர இனிதின்நுகர் நாடே"*
*(மேலது, ப.566)*

என்ற தம் பெயரைக் குறிப்பிட்டுப் போவது சங்கரதாசு சுவாமிகள் போற்றிய மரபாகும். நகரச் சிறப்புரைக்கும் அடுத்த பாடலிலும் பாவேந்தர்,

*"சித்திரங்கொள் ஆலயத்தில் உற்றமுரு கேசனுக்கு*
*நற்றிருவிழாவைப்பவ முற்றுபயில கீதமுழக்கம்*
*அதிக வேதமுழக்கம்*
*பூரண கும்பங்கள் வைத்துத் தோரணம் அலங்கரித்து*
*நாரின்விளக் கும்கொளுத்து வாரிலக்கி முத்தியர்க்கு*
*நாரணன் கொள்ளுந்திருவை ஒப்பு ரைத்தனன்*
*கனகசுப்புரத்தினம்"*
*(மேலது, ப.567)*

என்று தம் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.

மயிலை மலைச் சிறப்பை யுரைக்கின்ற அடுத்த பாடலில் பாவேந்தர் முருகப் பெருமான் வேல்வாங்கிப் போர் செய்த வெற்றியைச் சுவைபடக் கூறித் தொடங்குகின்றார்.

*"அறுபொறியின் வடிவாகி அங்கையிலே பரைதந்த*
*சத்தி வாங்கி*
*அமரர்படுந் துயர்நீங்கச் சயமோங்க அரரர்குல*
*மூலந் தன்னை*
*அடிகொண்டு களைகின்ற இளமைந்த னமர்கின்ற*
*அசலங்கொள் புகழ்தன்னை அறைகின்ற இதுவண்ணம்..."*

*(மேலது, ப.567)*

என்று தொடங்கி முருகன் திருக்கோவிலில் விழாக்காலக் கோலாகலங்களைப் பின்வருமாறு பேசுகின்றார்: முருகன் அடியவர்களின் வருகையைப் பற்றியும் முருகனின் திருக்கருணை பற்றியும் பாவேந்தர் கூறுவன அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்துப் பாடல்களை நினைவுறுத்தும் போக்கில் அமைந்துள்ளன எனலாம்.

*"தொழுபக்தர் முருகாஎன்*
*றழுகைக்கண் ணெழுமோசைச்*
*சுரமொத்த கரதாளம்*
*நிரையொத்த திடிமேளம்*
*குஞ்சரியோர் பாகம் குறவள்ளி யோர்பாகம் கொஞ்*
*சக்கைவேல் கொட்டொலியும் தழைத்தொளிரும்*
*கருணை நோக்கும் குளிர்வதன மீராறும் நளிர்பாதமும்*
*கொண்டகோயில் .............*
*சுப்புரத்தினம் சொற்றமிழ்ப் பாவாக்கிற்*
*சூழத்தென்மயிலாசலமே நோக்கிற்*
*சுராதிபனை வாழ்த்திநலம் துய்ப்பரதி சோபிதமே".*

*(மேலது, ப.568)*

திருஞானசம்பந்தர் பாடியுள்ள திருக்கடைக் காப்பு இங்கே ஒப்பு நோக்கத்தகும்.

*"ஒருநெறிய மனம் வைத்து ணர்ஞான சம்பந்தன்*
*தன்னுரைசெய்த*
*திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை*
*தீர்தல் எளிதாமே" (தேவாரம், 11)*

என்ற பதிகப்பயன் போலப் பாரதிதாசனின் பாடல் அடிகள் விளங்கும் திறம் மரபுவழி வரும் ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை!

*"சீரார் நாவலர்கோன் ஆருரன் உரைத்தமிழ்*
*பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பரே"*
*(தேவாரம், 7472)*

என வரும் சுந்தரர் வாக்கும் இங்கே ஒப்பிட்டு எண்ணத்தகும்.

இப்பாடல்களை அடுத்து வருவதே பாவேந்தரின் மயிலம் சுப்பிரமணியர் துதியமுது நூலாகும். செஞ்சுருட்டி ராகத்தில் அமையும் இப்பாடல்,

*"சூரர்குலம் வேரறுக்க ஒருவேலும் - நான்*
*துணைஎனப் பிடித்திட இருகாலும் - எண்ணும்*
*காரியத்தை முன்னிட்டுவிற் கோலெடுத்து வேடர்புனம்*
*மானைவிட்டுன் மெய்யுருவம் வேறுபட்டு நீமணந்த*
*ஏர்குறத்தி அணைத்திட அறுதோளும் - தெய்வ*
*யானையுமணைத்திட மற்றறுதோளும் - எண்ண*
*எந்நாளும் என்*
*துயர்மாளும்...."(பாரதிதாசன் கவிதைகள், ப.569)*

என்று அமைகின்றது. இவற்றை எல்லாம்நாம் ஆழமாக எண்ணும் போது பாவேந்தரின் பக்தியுணர்வின் ஆழ அகலங்களும் திருத்தொண்டின் உறைப்பும் நன்கு புலப்படும். கடவுள் மறுப்பு இயக்கத்திற்கு இவர் மாறாமல் இருந்திருப்பாரேல் இறையுணர்வுப் பாடல்களைப் பாடிமகிழ்ந்தவர் இவர் போலும் வேறொருவர் இல்லை என்ற முடிவிற்கு நாம் வருவோம்.

'சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம்' என்ற தலைப்பிட்ட பாடலில் பாரதிதாசன் தம் வாழ்வையும் நம்நாட்டு அடிமை வாழ்வையும் எண்ணி

எண்ணி வருந்திய மனக்குமுறலை வடித்துக்காட்டுவார். அருணகிரிநாதரின் திருப்புகழின் சிறப்பை *"அன்பிலுரை அருணகிரியின் தமிழின் நவநீதம்"* என்பார்,

*"ஐம்பெரும் பூதங்கள் என்னையர சாளவும்*
*அவர்சொல்லில் நானாடவும்*
*ஐங்குரவர் சொன்னெறிகள் திரணமாய் எண்ணியிங்கு*
*அல்லனபுரிந்து நெஞ்சம்*
*வெம்புகடல் வாய்ப்படு துரும்பாய் அலைந்துபல*
*வெறுமனிதர் காணிலச்சம்*
*மேலாக, நாலாவி தத்திலுமிவ் வாபத்தில்*
*மீளநான் வாடுநேரம்..........*

என்று தன்னைப் பற்றிக் கூறிய பாரதிதாசன்,

*"மனிதர்மனி தர்க்சடிமை ஆகுமொரு தீக்கனவு*
*மண்ணிடை யிருப்பதில்லா*
*வகைக்கெனது நாட்டினர் அறப்போர் நடத்திடுவர்*
*வாய்மையிற் பண்டைநாளில்;*
*எனினுமென தன்பான 'நாடின்று மற்றோர்*
*இனத்தவர்க் கடிமையாதல்*
*என்னுமிக் கோலத்தை எண்ணியென் தோள்பார்த்து*
*நான்பார்த் திருக்குநேரம் ..........*
*கதியிதென உலகெலாம் வதியுமெழில் மயிலம்வாழ்*
*கந்தா குழந்தைவேலா" (மேலது, பக்.578-579)*

என்று இவர் பாடித் தேசிய உணர்வையும் இணைத்துப் பாடியதில் பாரதியாரின் தாக்கத்தை எளிதில் காணஇயலுமன்றோ! இதன் இறுதியில் இவர் 'வாழி வெண்பா' ஒன்றும் பாடியுள்ளார்.

*"வாழ்கமுரு கன்பாத மாமலர்கள் வேல்மயில்நற்*
*கோழிஅறம் வான்உலகு கோதில்மறை – வாழியவே*
*எல்லா உயிரும் இனிதாக எங்கள்தமிழ்ச்*
*சொல்லமுதாய் ஓங்குபுகழ் சூழ்ந்து" (மேலது, ப.579)*

என வரும் பாரதிதாசன் பாடலில்,

*"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே*
*சூழ்க வையகமும் துயர்தீர்கவே" (தேவாரம், 3372)*

எனப் பாடிய திருஞானசம்பந்தருடைய வாக்கின் பதிவினை ஓரளவு காணமுடிகின்றது.

ஆம்! பாரதிதாசனின் ஊனிலும் உயிரிலும் இறையுணர்வும் தேசவுணர்வும் இணைந்து செல்லும் போக்கினை நன்கு உணரமுடிகின்றது. அம்மட்டோ! பாரதியார் வழியில் பாவேந்தர் பழந்தமிழ்ப் புலமை மரபில் இருந்து சற்றும் விலாகாதவர் என்பது மயிலம் சுப்பிரமணியர் துதியமுதிலிருந்தும், சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்தனத்திலிருந்தும் உறுதியாகின்றது.

## மனமாற்றம்

பாரதிதாசனின் எண்ணமும் எழுத்தும் ஆன்மீகமாக இருந்த நிலையிலிருந்து மனமாற்றம் தன்மதிப்பு இயக்க (சுயமரியாதை இயக்கம்) உணர்வாக மாறியது. ஆமாம்! 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்று வியக்கும் வண்ணம் அவர்தம் மனவுணர்வில் பெருத்த மாற்றம் நிகழ்ந்தது. பாவேந்தரின் தேசியப்பற்றும் இறையுணர்வும் 1930 வரையிலும் நீடித்து நிலைகொண்டிருந்தது. ஆனால் 1931-ஆம் ஆண்டு 'புதுவை முரசு' என்ற ஏட்டில் பாவேந்தர் 'சுயமரியாதைச் சுடர்' என்ற தலைப்பில் பத்துப் பாடல்களைக் கொண்ட நூலை எழுதியுள்ளார். 'கிண்டல்காரன்' என்ற பெயரில் அதனை அவர் வெளியிட்டுள்ளார்.

1933-ஆம் ஆண்டு சிங்காரவேலர் தலைமையிலே சென்னை ஒயிட்சு நினைவுக்கூடத்தில் நாத்திகர் மாநாடு நாடைபெற்றது. அம் மாநாட்டிற்குப் பாரதிதாசனும் சென்றிருந்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த பதிவேட்டில் பாவேந்தர், "நான் ஒரு நிரந்தரமான நாத்தீகன்' என்று எழுதிக்

கையெழுத்திட்டு வந்தாராம். இவ்வாறு பாரதிதாசன் தம்முடைய எண்ணத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் பதிவுசெய்துள்ளார். 1936-ஆம் ஆண்டில் பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி செந்தமிழ் நிலையவெளியீடாக வெளிவந்தது. சஞ்சீவிபர்வதத்தின் சாரலிலே இந்தியர்களைப் பற்றி வெளிநாட்டார் பேசுவதாக இவர் கருத்தை எடுத்துரைப்பார். பகுத்தறிவு முழக்கத்தின் ஆணிவேராக வரும் சூடான சொற்களை இப்போது காண்போம்:

*"தேகம் அழிந்துவிடும்; சுற்றத்தார் செத்திடுவார்;*
*போகங்கள் வேண்டாம்; பொருள் வேண்டாம் மற்றுமிந்தப்*
*பாழுலகம் பொய்யே பரமபதம்போ' என்னும்*
*தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்*
*சாதிப் பிரிவு சமயப் பிரிவுகளும்*
*நீதிப் பிழைகளும் நியமப் பிழைகளும்*
*மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சி செய்தே*
*ஓடச் செய்தால் நமமையும் ஓடச்செய்வார் என்பேன்"*
*(பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப.7)*

அவருடைய எண்ணத்தில் ஏற்பட்ட மனமாற்றம் அவர்தம் எழுத்திலும் வெளிப்பட்டு வெடிக்கின்றன. மேலும் அவர்,

*"உள்ள பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்*
*எள்ளை அசைக்க இயலாது" (மேலது, ப.14)*

என்றும்,

*"நல்ல இமயம் நலங்கொழிக்கும் கங்கைநதி*
*வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை*
*செந்நெல் வாயல்கள் செழுங்கரும்புத் தோட்டங்கள்*
*தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன்மரங்கள்,*
*இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்*
*முப்பத்து முக்கோடி மாந்தர்கள் செறிந்தென்ன?*
*மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்*
*ஓடுவதென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்"*
*(மேலது, ப.15)*

என்றும் கூறி நம் சிந்தனைக்கே விட்டுவிடுகின்றார். பாரதியார் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருப்பால் பாரதிதாசனும் அவர் வழியிலே நாட்டுப்பற்றையும் இறைப்பற்றையும் ஊட்டி வளர்க்கும் பலபாடல்களை மிகுதியாகப் படைத்தளித்திருப்பார் என்பது என் கருத்து. தமிழியக்கப் பாடல் வழிப் பாவேந்தர் எடுத்துமொழியும் கருத்தையும் இங்கே எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

*"ஆசை பற்றிய தமிழின் தொண்டில்*
*ஒட்டிய என்உளம் வெட்டினும் பிரியாது*
*வெண்பா முதலிய எழுதும் என்கை;*
*வண்ணம் பாடிக் கொண்டிருக் கும்வாய்!*
*முப்பதாண்டு முடியும் வரைக்கும் நான்*
*எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?*
*கடவுள் இதோஎன்று மக்கட்குக் காட்டிச்*
*சுடச்சுட அவன்அருள் துய்ப்பீர் என்னும்!*
*ஆயினும் கடவுளுருவம் அனைத்தையும்*
*தடவிக் கொண்டுதான் இருந்ததென் நெஞ்சம்"*
*(தமிழியக்கம், ப.x)*

என்பது அவருடைய கூற்றாகும்.

பாரதியார் தாலாட்டுப் பாடல் பாடவில்லை. காரணம் தமிழ் மக்கள் உறங்கிய காரணத்தில் நம்மை நாம் ஆளாமல் ஆங்கிலேயர் ஆள்வதற்கு இடம் கொடுத்தோம்; அடிமைப்பட்டோம்! எல்லா வகையிலும் நாம் அடிமையாய் அடங்கிப் போனோம். நாட்டை ஆள்வது தொடங்கி வீட்டைப் பேணுவது உட்பட எல்லா நிலைகளிலும் நாம் ஆங்கிலேயர்களுக்கு அடிமையாகி முடங்கிப் போனோம். பாரதிதாசன் அடிமைப்பட்ட நாளிலும் வாழ்ந்தவர்; உரிமை பெற்ற நாளிலும் வாழ்ந்தவர். இக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையைப் படம் பிடித்துக் காட்டும் வகையிலே பாரதிதாசன் தாம் பாடியுள்ள ஆண்குழந்தைத் தாலாட்டிலும், பெண்குழந்தைத் தாலாட்டிலும் எடுத்துரைக்கத் தவறினாரிலர்.

*"வாடப்பல புரிந்து வாழ்வை விழலாக்கும்*
*மூடப்பழக்கத்தைத் தீதென்றால் முட்ட வரும்*

*மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த*
*ஈடற்ற தோளா, இளந்தோளா, கண்ணுறங்கு!*
*'எல்லாம் அவன்செயலே' என்று பிறர்பொருளை*
*வெல்லம் போல் அள்ளிவிழுங்கும் மனிதருக்கும்,*
*காப்பார் கடவுள் உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்,*
*வேர்ப்பீர், உழைப்பீர், என உரைக்கும் வீணருக்கும்*
*மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த*
*தேனின் பெருக்கே, என்செந்தமிழே கண்ணுறங்கு"*

*(பா.கவி.முதல் தொகுதி, ப.126)*

என்பது ஆண்குழந்தைத் தாலாட்டு, ஆணுக்குச் சொல்வதோடு பெண்ணிடம் சொன்னால் பகுத்தறிவுக் கருத்துக்கள் பரவிப்பயன் விளைவிக்கும் என்று கருதிய பாவேந்தர்,

*"மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற*
*காடுமணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!*
*வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்*
*தூண்டா விளக்காய்த் துலக்கும் பெருமாட்டி*
*புண்ணிற் சரம்விடுக்கும் பொய்மதத்தின் கூட்டத்தைக்*
*கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே!*
*தெய்வீகத்தை நம்பும் திருந்தாத பெண்குலத்தை*
*உய்விக்கவந்த உவப்பே! பகுத்தறிவே!*
*எல்லாம் கடவுள் செயல் என்று துடைநடுங்கும்*
*பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே!*
*வாயில் இட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கை*
*கோயிலென்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே!*
*சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிஎன்பார் செய்கைக்கு*
*நாணி உறங்கு, நகைத்துநீ கண்ணுறங்கு"*

*(மேலது, பக்.127-128)*

என்று மிகுந்த நம்பிக்கையுடன் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பெண்குழந்தைத் தாலாட்டின் வழி வெளிப்படுத்துவதனால் அவருடைய எண்ணத்தின் ஆழம் எழுத்தில் துள்ளிப் பார்ய்ந்து வருதனைக் காணமுடிகின்றது.

ஊர் தோறும், ஊரில் உள்ள தெருக்கள்தோறும் கடவுளை நம்பியவர் கைவிடப்படார் என்று கோயிலை எழுப்பினராம்; வயிற்றுப் பிழைப்பை வாயிலில் வயிற்றுப் பிழைப்புக்குப் பார்ப்பான், கல் தச்சுக்கேற்ற சொல்தச்சு செய்கிறானாம். ஒரு நாள் ஓர் உந்து வண்டி கடவுட் கோயிலில் வந்து மோதியது; உயிரிழப்புகள் ஏற்பட்டதாம்; பலருக்குக் கைகால் மண்டையிலே அடியாம். இதன் முடிவில் பாவேந்தர் பகுத்தறிவுப் பரப்புரை செய்வார்.

*"தன்னைக் காக்கத் தெரியாக் கடவுள்*
*தன்னை நம்பிய மக்களைக் காத்ததா?*
*இன்றைய அரசியல் எத்தர்களைப் போல*
*அன்றைய ஆரிய எத்தர்கள் தந்த*
*பிணக்கேற் படுத்தும் கடவுளைக்*
*கணக்குத் தீர்த்தல் மனிதர்தம் கடமையே"*

*(நாள் மலர்கள், ப.121)*

என்பது 'சீர்திருத்தம்' இதழில் வெளிவந்த பாடலாகும். பாரதிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதியில் வரும் சமத்துவப்பாட்டு இங்கு நம் கருத்திற்குரியதாக அமைகின்றது. அப்பாடல் 110 கண்ணிகளால் ஆகியது; மிகநீண்டது. அதில் வரும் பாவேந்தர் எண்ணத்தைக் காண்போம்.

பாரதியார்,

*"சாதிகள் இல்லயடி பாப்பா! – குலத்*
*தாழ்ச்சி உயர்ச்சி சொலல்பாவம்"* (பாப்பாப்பாட்டு)

என்று பிஞ்சு உள்ளத்தில் பதியவைத்தார். அவர் கருத்தை ஏற்றுக் கொண்ட பாரதிதாசன்,

*"எஞ்சாதிக் கிவர்சாதி*
*இழிவென்று சண்டையிட்டுப்*
*பஞ்சாகிப் போனாரடி – சகியே*
*பஞ்சாகிப் போனாரடி....*
*மனிதரில் தீட்டுமுண்டோ?*
*மண்ணில் சிலர்க்கிழைக்கும்*

*அநீதத்தை என்சொல்வதோ – சகியே*
*அநீதத்தை என்சொல்வதோ?....*
*சூழ்கின்ற பேதமெல்லாம்*
*துடைத்தே சமத்துவத்தில்*
*வாழ்கின்றார் வாழ்வின்பமாம் - சகியே*
*வாழ்கின்றார் வாழ்வின்பமாம்*
*(நாள் மலர்கள், பக்.193, 194, 196)*

என்று சாதிச்சழக்குகளைகத் தகர்க்கும் எண்ணங்களை எழுத்தில் அள்ளி அள்ளிக் கொட்டியுள்ளார்.

1938-இல் பாரதிதாசனுடைய முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி வெயிட்டனர். தமிழ் இலக்கியத்தில் இத்தொகுதி பெரும் புரட்சியை உண்டாக்கியமையால் பெரியார், "தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்" என்று பாவேந்தரைப் பாராட்டினாராம்.

1947-இலே நம் இந்தியநாடு விடுதலை பெற்றது. விடுதலை பெற்றபின்னும் மேலோர் கீழோர் என்ற வேறுபாடுகள் தீர்ந்தபாடில்லை. இதனை எண்ணிய பாரதிதாசன் 1948-இல் 'குயில்' இதழில் 'கொடிய ஆட்சி' என்ற தலைப்பில் வெளியிட்ட கவிதையில் அவருடைய மனக்குமுறலைக் கொட்டித் தீர்த்துள்ளார்.

*"என்ன உரிமை இது யாருக்குரிமை?*
*ஏதும் விளங்கவில்லை நாட்டு மக்களே*
*சின்ன நினைவுகளும் தீய செயலும்*
*தீர்ந்திடக் கண்டதில்லை நாட்டு மக்களே!...*
*கொடுமைப் படுத்திவந்த வெள்ளையர்சட்டம் - இங்கு*
*அகன்றிடக் கண்டதில்லை நாட்டுமக்களே*
*அடிமைப்படுத்தி இந்த நாட்டினரையே - இங்*
*கழித்திடக் கருத்தினர் ஓரினத்தவர்........*
*விடுதலை என்றனர் நாட்டு மக்களே – அவ்*
*விடுதலை யாருக்கு நாட்டு மக்களே?*

*கெடுதலை உங்கட்கு நாட்டு மக்களே — ஒரு*
*கீழ்நிலை உங்கட்கு நாட்டு மக்களே"*

*(நாள்மலர்கள், ப.95)*

ஆதிக்க சக்திகள் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கும் மேலே சென்று கொடிகட்டிப் பறக்கின்றதனைக் கண்டு பாவேந்தர் வெகுண்டெழுவதனை இப்பாடல் வெளிப்படுகின்றது.

## சீர்திருத்தச் சிந்தனை

பாவேந்தர் இயல்பாகச் சமூகச் சீர்திருத்தச் சிந்தனை நிறைந்தவர் ஆவார். மன்பதையில் தாம் நேரிற்கண்ட பட்டறிவைத் (அனுபவத்தைத்) தம்முடைய எண்ணத்தில் பதிய வைத்துக் கொண்டவர்; அவற்றைத் தம் எழுத்துக்கள் வாயிலாகவும் வெளிக்காட்டி அவருணர்வைப் பதிவு செய்துள்ளார். பெண்கள் கல்வியறிவு பெறாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்த இழிநிலை கண்டு வருந்திக் குரல் கொடுத்தார்.

பாரதியார் பெண்விடுதலை பற்றிப் பேசியுள்ளார். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று வீட்டிற்குள்ளேயே பூட்டி வைத்த கொடுமையை உடைத்தெறிந்தவர் பாரதியார். இவருக்கும் முன்னே நெல்லையில் தோன்றிய வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் (1839-1898) மகளிர் கல்வி பற்றியும், விதவை மறுமணம் குறித்தும், கலப்புத்திருமணம் பற்றியும் பேசியுள்ளார் என்பதனை நாம் அறிந்து கொள்ளவேண்டும். கௌமார சமய நெறியைப் பரப்பிய வண்ணச்சரபர் பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் முன்னரே மேற்கண்ட சீர்திருத்த எண்ணங்களைக் கூறியுள்ளமை இவண் அறியத்தகும். இருபாலாரும் கல்வியிற் சிறந்து விளங்குதல் வேண்டும் என்ற கருத்துடன்,

*"கல்வி அழகமையாக் காளையரும் கன்னியரும்*
*வல்விருகத் தாண்பெண் வகை"*

*(மனுநெறித்திருநூல், 16:10)*

*"கடக மதியனையாள் கண்ணருஞ்சீர்க் கல்வி*
*மடமை அகற்றும் மருந்து" (மேலது, 26:8)*

எனவும் கூறியுள்ள குறட்பாக்களை ஒப்பிடடுப் பார்த்தால் உண்மை வெளியாகும். மாநிலம் பயனுறவும், மேன்மை பெற்று முன்னேறவும் வேண்டுமானால் மகளிர் கல்வி வளர வேண்டும். இதனை வலியுறுத்த எண்ணிய பாரதிதாசன் முன்னோர் வழியில்,

*"இற்றைநாள் பெண்கல்வி யாலே - முன்*
*னேறவேண்டும் வையம் மேலே"*
*(இசையமுது, பெண்கல்வி)*

என்றும்,

*"கல்வியில்லை உரிமையில்லை பெண்க ளுக்கக்*
*கடைத்தேற வழியின்றி விழிக்கின் றார்கள்!*
*புல்லென்றே நினைக்கின்றீர் மனைவி மாரைப்*
*புருஷர்களின் உபயோகம் பெரிதென்கின்றீர்!*
*வல்லவன்பே ரறிஞன்ஷா வார்த்தை கேட்பீர்*
*மனோபாவம் இனியேனும் திருந்த வேண்டும்*
*இல்லையெனில் எதுசெயலாம்! பெண்ஆண் என்ற*
*இரண்டுருளை யால்நடக்கும் இன்ப வாழ்க்கை"*
*(பாரதிதாசன் கவிதைகள், முதல்தொகுதி,ப.105)*

என்றும் கூறுவனவற்றிலிருந்து பெண்கல்வியின் தேவையும் இன்றியமையாமையும் வெளிப்படுத்தியமை பெறப்படும். பாரதியார், புதுமைப்பெண் குறித்துப் பேசுவார்; அப்பாடலில்,

*"சாத்திர ங்கள் பற்பல கற்பராம்*
*சவுரியங்கள் பலபல செய்வாராம்*
*மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பாராம்*
*மூடக்கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்"*
*(பாரதியார் கவிதைகள், ப.174)*

என்று பல்துறைக் கல்விக்கு வித்திட்டுள்ளார். பல்துறைக் கல்வியை மகளிர் பெற்றுவிட்டால் விளையும் நன்மை பற்றிப் பாரதியார் கூறுவன இங்கே அறியத்தகுவனவாகும்.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி"*
*(மேலது, ப.176)*

என்பது பெண்மக்கள் பெற்ற கல்வியினால் விளைந்த பயன்கள்; நன்மைகளாகும்.

## மகளிர் மறுவாழ்வு

"பாரதி ஏழுவயதுடைய இளம்பெண்ணை விரும்பாமல் மணமுடித்துக் கொண்டாராம், பிற்காலத்தில் அவருடைய குடும்பத்தார் எவ்வளவு வற்புறுத்திய போதும், தன்மூத்தமகள் தங்கம்மாளை இளைய வயதில் மணம்முடித்துக் கொடுக்க மறுத்தார். அதற்காக மனைவி, கொழுந்தி, மைத்துனர் ஆகியோருடன் சண்டை இட்டுக் கொண்டாராம், எனினும் அவரது கவிதைகளில் இளமை மண எதிர்ப்புப் பற்றிய குறிப்புக் காணப்படவில்லை. பாரதிதாசன் பாடல்களில் பாடு பொருளாக இளமை மணமறுப்பு இடம் பெற்றிருக்கிறது" (கவிதையின் உயிர் உள்ளம் உடல், ப.308) என்று பேரா. க.ப. அறவாணன் கூறும் கருத்து இங்கே ஒப்புநோக்கத்தகுவது.

இளம் வயதுத் திருமணத்தைப் பாரதிதாசன் கடிந்து கூறுவதோடு, கைம்பெண்டிர் மறுவாழ்வு – மறுமணம் குறித்தும் சமூகச் சீர்திருந்த உணர்வுடன் மிகுந்த அழுத்தம் தந்து எடுத்துரைப்பார்.

*"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்;*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல*
*மாத ரறிவைக் கெடுத்தார்*

*கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ?*
*பெண்களறிவை வளர்த்தால் - வையம்*
*பேதைமை யற்றிடுங் காணீர்"*

என அடிப்படை மாற்றம் வேண்டும் என்று விரும்பிய பாவேந்தர் பெண்ணடிமையைத் தகர்த்தெறிய வேண்டுகின்றார்.

*"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு*
*மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே*
*ஊமைஎன்று பெண்ணை உரைக்கு மட்டும் உள்ளடங்கும்*
*ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு*
*புலனற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால்அந்*
*நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே!*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.3)*

பெண்கள் பெறும் கல்வியறிவே அவர்கள் முன்னேறவும், நாட்டை முன்னேற்றவும் அடித்தளமாகும் என்பது பாவேந்தரின் எண்ணமாகும்.

நம் தமிழ்ச் சமுதாயத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கம் - கொடுமை பெரிய அளவில் நிகழவில்லை என்றாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழாமல் இல்லை. கைம்பெண்டிர் மறுவாழ்வு, மறுமணம் போன்ற சீர்திருத்த எண்ணங்கள் பாவேந்தருக்கு முன்பே சொல்லப்பட்டு வந்துள்ளன. வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் சமுதாய ஒழுக்கம் சிதைந்து சீரழிந்துவிடக் கூடாது என்று எண்ணித் தாம் இயற்றிய 'கௌமார முறைமை' என்ற நூலில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே வலியுறுத்திப் பேசியுள்ளமை இங்கே எண்ணிப் பார்ப்பதற்கு உரியதாகும். சுவாமிகளின் எண்ணம் இதோ:

*"மகப்பேறு மணம்சாவு முதல வாய*
*வகைகளுக்கும் விதிகள்பல வகுத்தார் முன்னோர்*
*அகத்தேங்கும் பொருளளவிற் செயலே நன்றாம்*
*அதுகிடக்க; நூலிழந்திட்டு அனங்கன் அம்பால்*

*மிகச்சோரு மடநல்லாள் கல்வி வேட்டு*
*மேவுகருப் பம்கெடுக்கும் வினையை எண்ணில்*
*சகத்தோர்கள் அறியமற்றோர் கொழுநன் தன்னைச்*
*சார்ந்திருக்கச் சொன்னமுறை தவறா காதே".*
*(கௌமாரமுறைமை, கருமகாண்டம், 23)*

கணவனை இழந்த இளம்பெண் மன்மதன் அம்பால்விளையும் காமவுணர்வு தூண்டக் கருவுற்றாள் எனில் அது பெரிய சமுதாயச் சீரழிவுக்கு வழிவகுப்பதோடு ஒழுக்கக் கேடும் நிகழ வழி வகுத்துவிடும். இதனால் கைம்பெண் மறுமணம் குறித்துத் தண்டபாணிசுவாமிகள் வலியுறுத்தினார்.

*"நூலிழந்தும் கேள்இச்சை நூறாதாள் - மற்றுமொரு*
*தாலிகட்டிக் கொள்ளத் தகும்"*
*(வருக்கக்குறள், 121)*

என்று வண்ணச்சரபர் பெண்மைக்குச் சிறப்பளித்து கைம்பெண் மறுமணத்தை வரவேற்கின்றார். இவருக்குப்பின் 20-ஆம் நூற்றாண்டில் சீர்திருத்தக்கவிஞர் பாரதிதாசன்,

*"காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட*
*கைம்மையைத் தூர்க்காதீர் – ஒரு*
*கட்டழகன் திருத்தோளினைச் சேர்த்திடச்*
*சாத்திரம் பார்க்கா தீர்"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.107)*

*"கூண்டிற் கிளிவளர்ப்பார் - இல்லத்தில்*
*குக்கல் வளர்த்திடுவார்,*
*வேண்டியது தருவார் – அவற்றின்*
*விருப்பத்தை யறிந்தே*
*மாண்டவன் மாண்டபின்னர் – அவனின்*
*மனைவியின் உளத்தை*
*ஆண்டையர் காண்பதிலல்ல – ஐயகோ*
*அடிமைப் பெண்கதியே! (மேலது, ப.109)*

என்றும் கூறுவன அவருடைய புரட்சி எண்ணங்களை எடுத்துக்கூறும் எழுத்துக்களாக மலர்ந்தன. இதேபோன்று பாரதிதாசன் மற்றுமொரு கவிதையில் 'கைம்பெண்நிலை' என்னும் தலைப்பில் தம் வருத்தத்தை வெளிப்படுத்தக் காண்கின்றோம்.

*"தரையில் படுத்தல் வேண்டும்*
*சாதம் குறைத்தல் வேண்டும்*
*தாலியற்றவள் - மேலழுத்திடும்*
*வேலின் அக்ரமம் - ஞாலம் ஒப்புமோ? (கண்)*
*வருந்தாமற் கைம்பெண் முகம்*
*திருந்துமோ இச் சமூகம்?*
*மறுமணம் புரிவது – சிறுமைஎன் றறைவது*
*குறுகிய மதியென – அறிஞர்கள் மொழிகுவர் (கண்)"*
*(மேலது, ப.119)*

என்று கைம்பெண்டிர் எதிர்நோக்கும் துன்பங்களை எண்ணி அவர் ஏக்கப் பெருமூச்சு விடுவார்.

வண்ணச்சரபர் கூறியது போலப் பாவேந்தரும் கைம்மைத் துயரை எடுத்துச் சொல்லிக் கைம்பெண் மறுமணத்தை வலியுறுத்தியுள்ளார்.

*"மாலையிட்ட மணவாளன் இறந்துவிட்டால்*
*மங்கை நல்லாள் என்ன செய்வாள்?அவளை நீங்கள்*
*ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்*
*அணுவளவும் அடையாமல் சாகச் செய்தீர்!*
*பெண்டிழந்த குமரன்மனம்*
*பெண்டுகொள்ளச் செய்யும் எத்தனம்*
*கண்டிருந்தும் கைம்பெண் என்ற கதை சொல்லலாமோ?*
*கதைசொல்லலாமோ? பெண்கள்*
*வதைகெள்ளலாமோ?"*
*(மேலது, ப.120)*

என்ற ஆண் பெண் ஆகிய இருவர் நிலையையும் 'எடுத்துச் சொல்லி மறுமணத்தைப் பாவேந்தர் வலியுறுத்துவார். இன்னும் ஒருபடி மேலே

சென்று பாவேந்தர் 'கைம்மை' என்ற சொல்லையே நீக்கவேண்டும் என்று எண்ணியவராவார். அவ்வெண்ணத்தின் எழுத்து வடிவமே கீழ்வரும் பாடல்:

*"நீ எனக்கும், உனக்கு நானும் - இனி*
*நேருக்கு நேர் தித்திக்கும் பாலும், தேனும் (நீ)*
*தூய வாழ்வில் இதுமுதல் நமதுளம்*
*நேயமாக அமைவுற உறுதிசொல்! அடி!*
*கைம்பெண் என்றெண்ணங் கொண்டே*
*கலங்கினாயோகற் கண்டோ?*
*காடு வேகுவதை ஒரு மொழியினில்*
*மூடி போட முடியுமோ உரையடி? இத்ததி*
*பைந்தமி ழைச்சீ ராக்கக்*
*கைம்மைஎன் னுஞ்சொல் நீக்கப்*
*பறந்துவாடி அழகிய மயிலே!*
*இறந்தகால நடைமுறை தொலையவே,*
*பகுத்தறிவான மன்று*
*பாவைநீஏறி நின்று*
*பாரடீ உன் எதிரினிற் பழஞ்செயல்*
*கோரமாக அழிந்தொழுகுவதையே*
*கருத்தொரு மித்த போது*
*கட்டுக்கள் என்ப தேது?*
*கைம்மை கூறும் அதிசய மனிதர்கள்*
*செம்மை யாகும் படிசெய மனதுவை! அடி!"*

*(மேலது, ப.121)*

பேரா.க.ப. அறவாணன் இளமைமணம் குறித்தும், அதனால் வரும் சமுதாயச் சிக்கல் குறித்தும் பேசுகின்றார். அது இதோ:

"இளமை மணம் வடஇந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் பிராமணரிடையேயும் மட்டுமே இருந்த பழக்கம். இராசாராம்மோகன்ராய், ஈஸ்வரசந்திர வித்தியசாகர் ஆகிய வட இந்தியர் இவற்றை எதிர்த்துப் பேரியக்கியமே நடத்திவெற்றி கொண்டனர். சில சமயங்களில் நான்கு

ஐந்து வயதில் திருமணமாகும் சின்னப் பெண் வயது வந்து வாழப்போகும் முன்னே கணவனைப் பறிகொடுக்க நேரிடும். அத்தகு சமயங்களில் கணவனின் மேனி தீண்டுதலே படாத இவ்விளம் பெண்கள் கடைசிவரை மணம் முடிக்காமல் வாழ்வது/வாடுவது சமுதாயச் சிக்கலாக இருந்தது." (கவிதை உயிர் உள்ளம் உடல், ப.309). இச்சிக்கல்களை எண்ணிய பாவேந்தர் இளமைத் திருமணங்களைச் சாடினார்; விதவை மறுமணங்களை வரவேற்று வாழ்த்துக் கூறினார்.

திருமணங்களிலும் சீதிருத்தம் வேண்டும் என்று எண்ணியவர் பாரதிதாசன், 'பணமும் மணமும்' என்ற தலைப்பில் வரும் பாரதிதாசனின் பாடலில் சாதிக்கட்டுப்பாடு, விதவைப் பெண் திருமணம் இவற்றை மையமாகக் கெண்டு சாடுகின்றார்.

*"அத்தைமகன் முத்தனும் ஆளிமகள் தத்தையும்*
*ஒத்த உள்ளத்தால் ஒருமித்து – நித்தநித்தம்*
*பேசிப் பிரிவார்; பிறரறியா மற்கடி*
*தாசி எழுதியே தாம் மகிழ்வார்..."*

இவர்தம் காதல் வளரும் பருவத்தில் மஞ்சினி என்பான் தன் மகன்பெருமாளைக் காட்டி ஆளியிடம் பெண்கேட்டான்; அப்போது, தத்தை விதவை என ஆளி பொய் சொன்னான். மேலும் சாதியிலே நான் மட்டம் என்றான்! இவற்றை மஞ்சினி பொருட்படுத்த மாட்டேன் என்றான். அந்நேரம் தந்தி வந்தது. 'கந்தவேள் வங்கியில் பணம் இல்லை! வங்கி முறிந்து விட்டது' என்பதே தந்தி. ஆளி ஆடுகளை விற்றுவரும் பணத்தை வைத்துத் திருமணம் நடத்துவோம் என்றான். ஆனால் பச்சோந்தி மஞ்சினி திருமணத்தை இந்த வருடத்தில் நல்ல நாள் இல்லாமையால் பின்பு வைத்துக் கொள்வோம் என்றான். இவ்வாறு பணத்தை முதன்மைப் படுத்திய திருமணம் ஆகையால் மஞ்சினி மகனுக்குத் தத்தையைத் திருமணம் செய்வதனை ஆளி மறுத்துவிட்டான். ஆயின் முத்தனுக்கும் தத்தைக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது எனப் பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதியில் (பக்.62-63) அவர் கூறும் எண்ணங்கள் அவருடைய சீர்திருத்த உணர்வை வெளிப்படுத்துவனவாகும் (பாரதிதாசன் கவிதைகள் 2-ஆம் தொகுதி, பக்.62-68).

மக்களினத்தின் இயல்பான வேட்கையை இன்பநுகர்ச்சியை யாரும் தடுக்கமுடியாது. இதனைக் கருத்தில் வைத்துப் பாவேந்தர் காதலைத் தீய்த்த கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசும் பாடலில்,

*"ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்*
*அடைகின்ற காதலுக்கும் மாற்றமுண்டோ?*
*பேடகன்ற அன்றிலைப்போல், மனைவி செத்தால்*
*பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்!*
*வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்*
*மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?*
*பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்*
*பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல்தொகுதி,ப.82)*

என்று கேட்பது நம் செவிகளில் விழுகின்றது.

மகளிர் கல்வி மற்றும் கைம்பெண் மறுமணம் குறித்தும் பேசியுள்ள பாரதிதாசன் குடும்பவாழ்விற்குத் தேவையான நெறிமுறைகளையும் வகுத்துரைக்கத் தவறிவில்லை!

*"காதல் அடைதல் உயிரியற்கை! – அது*
*கட்டில் அகப்படும் தன்மை யதோ? (மேலது, ப.69)*

என்று அவர் இயற்கையான மனிதவுணர்வைக் குறித்துப் பேசுவது இவண் அறியத்தகும். ஒரு குழந்தையைப் பெற்றபின் மனைவிதான் மற்றுமொரு கருப்ப முற்றாள். ஆண்குழந்தை ஒன்று பிறக்குமா என்றிருந்தான்; அவ்வாறே பெற்றாள். சில ஆண்டுகளில் அவள் மேலும் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். மனைவியின் உடல் நலிந்து போயிற்று. நான்கு குழந்தைகளை எண்ணி அவன் பெரிதும் உழைத்தான். வரும்படியை நினைக்கும் போதெல்லாம் அவனுடைய மனம் நோகுமாம். உழைத்துழைத்து ஓடாய்ப்போனான். 'நோயில் ஒரு பத்து நாள் படுத்துவிட்டால் என்ன செய்வேன்' என எண்ணி மனம் குமுறுவான்.

இந்நிலையில் அவனுக்குக் கனவு வேறு! கனவு கலைந்த பின்பு, கணவனும் மனைவியும் 'தடுக்கி விழுந்தனர் காதல் வெள்ளத்தில்'. என்ன நிகழ்ந்தது என்பதைப் பாவேந்தர் மொழியிலேயே காண்போம்:

*"பத்துமாதம் செல்லப் பகற்பொழுதில் ஓர்நாள்*
*பட்டகடன் காரர்வந்து படுத்துகின்ற நேரம்,*
*சித்தமெலாம் மூத்தபெண் சுரநோயை எண்ணித்*
*திடுக்கிடுங்கால், ஒருகிழவி என்னிடத்தில் வந்து*
*முத்தாலம்மை வைத்த கிருபையினால் நல்ல*
*முகூர்த்தத்தில் உன்மனைவி பிள்ளைபெற்றாள்*
*என்றாள்;*
*தொத்துநோய், ஏழ்மை, பணக்காரர் தொல்லை*
*தொடர்ந்தடிக்கும் சூறையிலே பிள்ளையோ*
*பிள்ளை!*
*காதலுக்கு வழிவகுத்துக் கருப்பாதை சாத்தக்*
*கதவொன்று கண்டறிவோம். இதிலென்ன குற்றம்?*
*சாதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை*
*சந்தானமுறை நன்று? தவிர்க்கு முறை தீதோ?"*
*(மேலது, பக்.123-124)*

என்று குடும்பக்கட்டுப்பாட்டைக் குறித்து 1930-க்களிலேயே கூறிவிட்ட பாவேந்தரின் எதிர்காலவியலை நாம் வியக்காமல் இருக்க முடியாது!

1826-1889 வரை வாழ்ந்த மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை, பெண்கல்வி, பெண்மானம் பற்றிப் பேசியுள்ளமையும் இங்கே ஒப்புநோக்கத்தகும். 'பெண்மதி மாலை' என்ற கவிதை நூலையும், 'பெண்கல்வி' என்ற உரைநடைநூலையும் இணைத்து 1869-ஆம் ஆண்டில் இவர் வெளியிட்டுள்ளார். பெண்கள் முன்னேற்றம் பற்றி அக்காலத்தில் எழுதியவர் வேதநாயகராவார். பெண்களை அடிமைகளாக நடத்தியது இவர் காலத்துச் சமுதாயம். கணவனை இழந்த பெண்களின் முதக்தில் விழிப்பது பாவம் என்று அன்று கருதப்பட்டது. இந்த இழிநிலை

மாறவேண்டும் என்று குரல் கொடுத்தவர் வேதநாயகம்பிள்ளை ஆவார். அவர் கூறும் கருத்து:

"இந்தத் தேசத்தில் பெண்களை அடிமைகளைப் போலவும், மிருகங்களைப் போலவும், நடத்துவது மகிவும் பரிதபிக்கத்தக்க விஷயமாயிருக்கின்றது. ஜாதியும், செல்வமும் எவ்வளவு உயர்வோ அவ்வளவும் ஸ்திரீகளுடய நிர்ப்பாக்கியம் பெரிதாகின்றது. உயர்ந்த குலத்தாராகிய பிராமணர் முதலானவர்கள், ஸ்திரீகளை விலைக்கு வாங்குவது போல் வாங்கி நிஷ்டூரமாக நடத்துகிறார்கள்" (பெண்மதிமாலை, 150)

இந்தப் பெண்ணடிமையைப் போக்கக் குரல் கொடுத்தமை போலவே வேதநாயகம்பிள்ளை, 'கல்லாத பெண்கள் விவேகம் உடையவர்களாக இருக்கமுடியாது என்கின்றார். விருப்பமிலலாத பெண்ணை வலிந்து பற்றிக் கொண்டு திருமணம் செய்யும் பண்டைய இந்திய மணமுறைகளான இராக்கதம், பைசாசம் ஆகியவற்றையும் சுகுண சுந்தரி மூலம் கண்டிக்கின்றார்.

ஓர் உயர்ந்த குடும்பத்தலைவியைக் குடும்பவிளக்கில் படைத்துக்காட்டும் பாரதிதாசனுக்கு முன்னோடியாக வேதநாயகம்பிள்ளை தம்முடைய சர்வசமயக் கீர்த்தனை ஒன்றிலே சுட்டிக்காட்டியுள்ளமை இங்கே இணைத்துக் காணத்தகும்.

*"காரியம் பார்ப்பள் கணக்கு எழுதுவள்*
*காய்கறி யாக்கவும் கெட்டி – அவள்*
*கைபட்டால் வேம்பும் கரும்பல்லவோ – ருசி*
*கண்டுநீர் மண்டுவீர் சட்டி – அவள்*
*ஊரிலே மாமியார் நாத்திமார் எல்லாம்*
*உவந்திடு கற்கண்டுக் கட்டி – தினம்*
*ஓயா விருந்து வந்தாலும் சலியாமல்*
*உண்ணச் சொல்வாள் அன்னங்கொட்டி"*

*(சர்வசமயக் கீர்த்தனை, 181)*

வேதநாயகர் 'கணவனை இழந்தது அவள் குற்றமா' என்று கேட்பார். விதவைகளை இரக்கத்தோடும் மதிப்போடும் நடத்துமாறு மக்களை மன்றாடிக் கேட்டுக் கொள்வார். மேலும் கைம்பெண்டிரின் மறுவாழ்விற்கு அவர்களுக்குத் திருமணம் ஆகும்போதே ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று வேதநாயகர் கூறுவது இங்கே நினையத்தகும். "விதவைப் பெண்களுக்குச் சீதனம் கொடுக்கப்பட வேண்டும்" என்று வாதாடும் வேதநாயகம்பிள்ளை, அவர்களுடைய மறுமணம் குறித்துத் தீவிரமாகச் சிந்தித்தாகத் தெரியவில்லை. விதவைகள் திருமணம் பற்றிய சட்டம் ஒன்று 1856-ஆம் ஆண்டில் ஆங்கில அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது. விதவையின் மறுமணத்தை ஆதரித்துப் பிரமசாமாஜம் தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது. அது தமிழ் நாட்டிலும் எதிரொலித்துள்ளது" (வேதநாயகம் பிள்ளை, பேரா.அ. பாண்டுரங்கன், ப.128)

மேலே சுட்டிப் பேசிய கருத்துக்களின் அடிப்படையில் பாரதிதாசனின் குடும்பவிளக்கில் வரும் குடும்பத்தலைவியின் செயற்பாடுகளை இப்போது காண்போம்:

*"கொண்டவர்க் கெது பிடிக்கும்*
*குழந்தைகள் எதைவி ரும்பும்,*
*தண்டூன்றி நடக்கும் மாமன்*
*மாமிக்குத் தக்க தென்ன*
*உண்பதில் எவரு டம்புக்கு*
*எதுவுத வாதென் றெல்லாம்*
*கண்டனள், கறிகள் தோறும்*
*உண்பவர் தம்மைக் கண்டாள்*
*(குடும்பவிளக்கு, ப.20)*

*"கிழங்கினை அளியச் செய்வாள்,*
*கீரையைக் கடைந்து வைப்பாள்*
*கொழுங்காய்ப் பச்சடியே வைப்பாள்*
*கொல்லையின் முருங்கைக் காயை*

*ஒழுங்காத் தோலைச் சீவிப்*
*பல்லில்லார் உதட்டால் மென்று*
*விழுங்கிடும் வகைமு டித்து*
*வேண்டிய எல்லாம் முடித்தே" (மேலது, ப.22)*

இவ்வாறு பாவேந்தர் குடும்பத்தலைவியை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துவார்.

## தொழிலாளர் நலன் பேணுதல்

'பாட்டுக்களில் புரட்சி என்றால் வெறும் சொற்களில் மட்டுமோ, எதுகை மோனைத் தொடைகளில் மட்டுமோ, உவமைத் திறங்களில் மட்டுமோ, இவை யனைத்தும் புரட்சிகள் ஆகலாம்; ஆயினும் இவைபுதிய பயன்தாரா! மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத கருத்துக்களை எழுப்பிச் செம்மை செய்வதே புரட்சி. அதனைப் பாரதிதாசன் ஒருவரே செய்தார்" என்று அறிஞர் மு. வரதராசனார் (தமிழ் இலக்கிய வரலாறு) கூறுவது பாவேந்தரின் எண்ணத்தின் எழுச்சியாக விளங்கும் எற்றம் மிக்க கவிதைகளுக்குச் சூட்டப்பட்ட மகுடம் ஆகக் கருதலாம். அவருடைய அருந்தமிழ்ப் பாக்களில் மறுமலர்ச்சி எண்ணம் பெருவெள்ளமெனவும் பொங்குமாங்கடல் எனவும் பீறிட்டு வருவதனைக் காணலாம்.

*"மாசற்றதொண் டிழைப்பீர் சமுதாயச்சீர்*
*மறுமலர்ச்சி கண்டதென்று முழக்கஞ் செய்வீர்"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.171)*

என்பதனால் தொழிலாளர் நலனில் மிகுந்த ஆர்வம் காட்டியவர் பாரதிதாசன் ஆவார் என்பது தெளிவு.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பகுத்தறிவுக் கருத்துக்கள் வேகமாய்ப் பரவத் தொடங்கின. அதனால் அடிமைத்தனத்தின் ஆணிவேர் ஆட்டங்கண்டது. அதன் ஆட்டத்தைப் பாவேந்தர் நம் கண்முன்னால் 'உலகப்பன் பாட்டின்' வாயிலாகவும், 'சாய்ந்த தராசு'

வாயிலாகவும் துலக்கிக் காட்டியுள்ளார். இன்னும் பல பாடல்களில் தொழிலாளர்கள் படும் துயரைக் கூறி அவர்களின் துயர்துடைக்க வழிகாட்டுவார். ஏழைமக்களின் இதயக்குமுறல் பாவேந்தரின் செவிகளில் விழ்ந்தது; அப்படி வீழ்ந்ததின் வெளிப்பாடு,

*"கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்*
*கொள்ளை யடிப்பதும் நீதியோ? – புவி*
*வாழ்வதுதான் எந்தத் தேதியோ?"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.151)*

என்று கேட்கின்றது அவருடைய உள்ளம். அன்று நிலவிய ஆட்சியும் முதலாளிகளை ஆதரித்தே செயற்பட்டது. அதனையும் பாரதிதாசன்,

*"மக்களெல்லாம் சமமாக அடைந்திட*
*மாநிலம் தந்ததில் வஞ்சமோ – பசி*
*மீக்கவரின் தொகை கொஞ்சமோ?" (மேலது. ப.152)*

உலகப்பன் பாட்டிலே பாவேந்தர் இன்னும் ஒருபடி மேலே சென்று பழைய முதலாளியைப் பகுத்தறிவு மன்றத்தில் நிற்கவைத்துக் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்.

*"மிகுந்திருந்த உன்நன்செய் புன்செய்யாவும்*
*வெகுகாலத்தின் முன்னே, மக்கள் யாரும்*
*சுகித்திருக்கக் குத்தகைக்கு விட்ட துண்டோ?*
*சொல்! என்றேன்; உலகப்பன் ஆம்! ஆம்! என்றான்"*
*(மேலது, ப.147)*

இதனை அடுத்து அவர் கேட்கும் வினா முதலாளிகளின் முகத்திரையைக் கிழித்து எறிவதாகவுள்ளது.

*"வகுத்தஅந்தக் குத்தகைக்குச் சீட்டு முண்டோ?*
*வாய்ச்சொல்லோ என்றுரைத்தேன் வாய்ச்சொல் என்றான்"*
*(மேலது, ப.147)*

இவ்வாறு வழக்குமன்றங்களில் வழக்குரைஞர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திக் கேள்விக் கணைகளை அடுக்குவது போன்று இப்பாட்டில் பாவேந்தர் அடுக்குகின்றார். குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லைகள் நாளடைவில் மாற்றியமைக்கப் பெற்றதாம். ஏழைகளின் நிலங்களைப் பழைய முதலாளிகள் பறித்துக் கொண்டு ஏப்பமிட்டுவிட்டனர். இவ்விடத்தில் பாவேந்தர் பயன்படுத்தியுள்ள சொற்கள் ஆழமான பொருள் கொண்ட சொற்களாகும். "கொத்திக் கொண்டு ஏப்பமிட்டு வந்ததாலே" என்பதே அத்தொடர். நம் வீட்டுச் சின்னக் குழந்தையின் கையிலிருக்கும் முறுக்கைக் கன்னங்கரிய காக்கை கொத்திச் செல்வது நம்நினைவிற்கு வருகின்றது. இத்தகைய இரக்கமற்ற மறச்செயல்கள் இன்றும் மண்ணகத்தில் நடைபெறத்தான் செய்கின்றன. பாவேந்தரின் எண்ணத்தின் எழுச்சியாக,

*"குத்தகைக்கா ர்ர்தமக்குக் குறித்த எல்லை*
*குறித்தபடி உள்ளதுவா என்று கேட்டேன்;*
*கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்*
*கண்மூடி மக்களது நிலத்தை எல்லாம்*
*கொத்திக் கொண் டேப்பமிட்டு வந்த தாலே*
*கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்*
*(மேலது, 147)*

என நெஞ்சக் குமுறலாக வெளிப்பட்டது. ஏழைமக்கள் மிகுந்தனர்; அவர்தம் வாழ்வு நலிவுற்றது; வலிமையற்ற உடலும் தேய்ந்து போயிற்று, அவர்களின் நிலையை இப்படிப் பாவேந்தர் சொல்லோவியமாக்கிக் காட்டியுள்ளார்.

*"பொத்தல் இலைக் கலமானார் ஏழை மக்கள்*
*புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்"*
*(மேலது, ப.148)*

பொருள் நிறைந்த ஆலை அரசர்களும், பழைய பட்டக்காரர்களும், முதலாளிகளும் பொருளை ஏழைகளின் விளை நிலங்களை — தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிச் சேர்ப்பதனால் ஏற்படும் விளைவுகளையும் பாவேந்தர் கூறத் தவறவில்லை. இதோ அவர் எழுத்து:

*"பொருளாளி திருடர்களை விளைவிக் கின்றான்;*
*பொதுவுடைமை யோன் திருட்டைக் களைவிக் கின்றான்"*
*(மேலது, ப.149)*

உழைத்துழைத்து ஓடாய்த்தேய்ந்த ஏழை எளியவர் - பாட்டாளி மக்களின் வயிற்றில் மண்ணைப் போட்டு வதைத்தனர் பழைய முதலாளிகள். சோற்றுக்கும் வழியின்றி ஏழைமக்கள் வாடினர்.

*"தொழிலறிந்த ஏழைமக்கள் தொழில் புரிந்து செல்வர்பால்*
*அழிவிலாமு தல்கொடுக்க அம்முதற் பொருளினால்*
*பழிமிகுந்த அரசமைத்துப் படைகள்தம் மைஏவியே*
*தொழில்புரிந்த ஏழைமக்கள் சோற்றிலே மண்போடுவார்."*
*(மேலது. ப.134)*

தாம் ஏமாற்றப்பட்டதனை அறிந்து தொழிலாளர்கள் எழுச்சி பெற்று ஏமாற்றுபவர்களின் முகமூடியைத் தகர்த்தெறிய முற்பட்டனராம். அப்படி முற்பட்டால்தான் தொழிலாளர் வாழ்வு சிறக்கும்; இன்பம் பிறக்கும். ஆகையினால் பாரதிதாசன் தம் எண்ணத்தை எழுத்தாக்கிச்,

*"செப்புதல் கேட்பீர்! இந்தச்*
*செகத் தொழிலாளர் மிகப்பலர் ஆதலின்*
*கப்பல்களாக - இனித்*
*தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்!*
*இப்பொழுதேநீர் – பொது*
*இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை*
*ஒப்படைப்பீரே – எங்கள்*
*உடலில் இரத்தம் கொதிப் பேறுமுன்பே"*
*(மேலது, ப.138)*

என்று உரத்த குரல்கொடுக்குமாறு ஒன்றுதிரட்டுவார். எளியோரை வதைத்து வளமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் வலியோரை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டுமெனத் துணை நிற்பார் பாவேந்தர். பாவேந்தர் ஏழைமக்களின் சார்பில் குரல்கொடுத்தமை போன்று, 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த இராமலிங்கசுவாமிகள்,

*"எளியரை வலியா ரடித்தபோ தையோ*
*என்மனங் கலங்கிய கலக்கம்*
*தெளியநா னுரைக்க வல்லவ னல்லேன்*
*திருவுள மறியும் எந்தாய்*
*களியரைக் கண்டு பயந்தவென் பயந்தான்*
*கடலினும் பெரியது கண்டாய்*
*அளியர்பாற் கொடியர்செய்தவெங் கொடுமை*
*அறிந்தவென் னடுக்கம்ஆ ரறிவார்"*
*(திருவருட்பா ஆறாம்திருமுறை, பிள்ளைப்பெருவிண்ணப்பம்)*

என்று இறைவனிடம் விண்ணப்பம் செய்து வேண்டுவது ஒப்புநோக்குதற்குரியது. அமைதியான முறையில் அருட்பிரகாச வள்ளலாரைப் போல் ஆண்டவனை வேண்டுவது போலப் பாவேந்தர் பாரதிதாசன் வேண்டவில்லை. ஆனால் தொழிலாளர்களிடம் அவர்களின் உரிமையை விளக்கி அவர்களை ஒன்றுபடுமாறு உணர்த்தி எழுச்சியூட்டினார். இப்படி எழுச்சியூட்டுமளவிற்குப் பாவேந்தருக்கு,

*"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை*
*செய்வோம்? வீணில்*
*உண்டுகளித்திருப் போரை நிந்தனை செய்வோம்"*
*(பாரதியார் கவிதைகள், சுந்திரப்பள்ளு)*

என்ற பாரதியாரின் கவிதையே ஊட்டம் தந்தது; உணர்வூட்டிக் கவிதை புனையுமாறு செய்தது எனலாம். இன்னும் சொல்லப்போனால் பாரதிப்புலவரின்,

*"உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை*
*பிணிகள் பலவுண்டு; பொய்யைத்*
*தொழுதடிமை செய்வாருக்குச் செல்வங்க*
*ளுண்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்*
*எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு*
*தூக்குண்டே யிறப்ப துண்டு"*
*(மேலது, புதியருசியா)*

என்னும் கவிதையின் ஆற்றல் பாவேந்தரைச் சுண்டியிழுந்திருக்க வேண்டும். அவர் வழி வந்த பாரதிதாசன் அவரையும் விஞ்சும் நெஞ்சுரம் கொண்டு உலகப்பனை நோக்கி,

*"இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா நீ!*
*புதுக்கணக்குப் போட்டுவிடு பொருளைஎல்லாம்*
*பொதுவாக எல்லார்க்கும் குத்தகைசெய்"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.125)*

என்று ஆணையிடுகின்றார். பாவேந்தர் உலகப்பனுக்கு நாட்டுநிலைமையை எடுத்துக் கூறினார்; அதன்பின் உலகப்பன் 'ஆழமப்பா உன் வார்த்தை;' என்றானாம். தாழ்வுயர்வு நீங்கிவிடுமென்று தகதகென ஆடினான். அவன் ஆட்டத்தினைக் கண்ட பாவேநதர்,

*'ஆடுகின்றாய் உலகப்பா! யோசித் துப்பார்!*
*ஆர்ப்பாட்டக் காரர்இதை ஒப்பா ரப்பா!*
*தேடப்பா ஒருவழியை என்று சொன்னேன்*
*செகத்தப்பன் யோசித்துச் சித்தம் சேர்ந்தான்.*
*ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்*
*உதையப்பர் ஆகிவிட்டால்? ஓர்நொ டிக்குள்*
*ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி*
*ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ!"*
*(மேலது, ப.148)*

என்று துணிவு பெறவைப்பார். இது பாவேந்தர் போட்ட புதுக்கணக்கு; தனியமைமையத் தகர்க்க வேண்டும்; பொதுவுடைமை மன்பதையில் பூத்துக் குலுங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பாவேந்தர், கவிதைச் சொற்களால் மக்களின் கவனத்தை ஈர்த்தவர், பாரதியார்,

*"முப்பதுகோடி சனங்களின் சங்கம்*
*முழுமைக்கும் பொதுவுடைமை*
*ஒப்பில்லாத சமுதாயம்*
*உலகத்திற் கொருபுதுமை!"*
*(பாரதியார் கவிதைகள், பாரத சமுதாயம்)*

என்று பாடிக் கோடுகிழித்தார்; அக்கோட்டிலிருந்து தொடங்கிய பாரதிதாசன் புதுவடிவில் துடிப்பான சொற்களில் புத்துலகைப் படைப்பார்,

*"உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்*
*புகல்வேன்; 'உடைமை மக்களுக்குப் பொது'*
*புவியைப் நடத்து பொதுவில் நடத்து"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல்தொகுதி, ப.150)*

என்பது அவருடைய எழுச்சிப்பாட்டு,. புதிய உலகைப் படைப்பதற்கு உலகத் தொழிலாளர்களை அறைகூவி அழைக்கின்றார். அவர் எண்ணத்தின் சூடு எழுத்திலும் சூடாக இருக்கவே செய்கிறது. இதோ அவர் எண்ணத்தில் தோன்றிய 'புதிய உலகம்':

*"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட*
*போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் (புதிய)*
*பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும சேர்ப்போம்*
*புனிதமோ டதைம் எங்கள் உயிரென்று காப்போம்*
*(புதிய)*
*இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்*
*'இது எனதெ'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்*
*(புதிய)*
*உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்*
*'ஒருபொருள் தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்!*
*(புதிய)*

*இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்*
*ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்"*
*(புதிய).*
*(மேலது, ப.158)*

சமுதாயத்தில் ஒப்புரவு நெறி எங்கும் பரவுதல் வேண்டும். வள்ளுவப் பேராசான்,

*"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"* (குறள், 322)

என்று ஒப்புரவின் உயர்வைப் பேசுவார். பாரதியார்,

*"தனியொருவனுக்கு ணவில்லை எனில் செகத்தினை*
*அழித்திடுவோம்"*

என்று வெகுண்டெழுவார். பாரதிதாசன்,

*"ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்*
*உண்டென்றால் இத்தேசம் ஒழிதல் நன்றாம்"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.33)*

என்று ஆணித்தரமாகவும் மிகுந்த அழுத்தத்தோடும் கூறித் தம் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். சமுதருமக் கொள்கையைப் பரப்புவதே பாவேந்தரின் எண்ணம். அக்கொள்கை வெற்றி பெற்றால்,

*"இழுப்பவன் வறியவன்! ஏறினோன் செல்வன்*
*இருவரும் ஒருநிலை எய்தும் நாளில்*
*ஆளைஆள் இழுத்தல் அகலும்" (மேலது)*

என்னும் பொதுமைநலம் மலரும். ஒப்புரவு நெறி மன்பதையில் வெற்றிபெறுமானால், பாரதிதாசன் எண்ணமும் அது எழுத்தாகியதற்கு நல்ல பயன் கிடைக்கும் என்பதுறுதி!

அரசவைக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை தொழிலாளர் நிலையைக் குறித்துக் கூறுவது நம் கருத்தைக் கவர்கின்றது.

*"பாட்டாளி மக்களின் பசிதீர வேண்டும்*
*பணமென்ற மோகத்தின் விசைமாற வேண்டும்*
*கூட்டாளி வர்க்கங்களின் குணம்மாற வேண்டும்*
*குற்றேவல் தொழிலென்ற மனம்மாற வேண்டும்*
*கடலொத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்*
*கஞ்சிக்கு வழியின்றிக் கண்ணீரைக் கொட்டும்*
*மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானால்*
*மனிதர்க்கு அறிவுள்ள ஏற்றங்கள் ஏனோ?*
*(தமிழ்மணம், ப.39)*

என வினா எழுப்புவார். தொழிலாளர் உலகம் விழித்துக் கொண்டது; அவர்கள் புதுக்கணக்குப் போடத் தொடங்கிவிட்டனர். புதிய உலகம் சமைக்கப் புதுநெறி காட்டிய பாரதிதாசன் தனியுடைமை நீங்கவும் 'பொதுவுடைமை' ஓங்கவும் தம் கவிதைகள் வழி நெறிப்படுத்தியுள்ளார்.

*"எல்லார்க்கும் எல்லாம் என்றிருப் பதான*
*இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்"*
*(பாரதிதாசன் கவிதைகள், முதல்தொகுதி)*

*"உறுதி உறுதி உறுதி*
*ஒன்றே சமூகம் என்றெண்ணார்க்கே இறுதி (உறுதி)*
*உறவினர் ஆவார் ஒருநாட்டார் — எனல் (உறுதி)*
*பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை - இந்தப்*
*பிழைநீங்குவதே உயிருள்ளாரின் கடமை — நம்மிற்*
*குறைசொல வேண்டாம் உறவினர் பகைநீங்குங்கள்*
*குகையினை விட்டே வருவீர்சிங் கங்காள் உறுதி"*
*(மேலது, ப.161)*

எனப் பாவேந்தர் ஒப்புரவுக் கொள்கையை வலியுறுத்தித் தொழிலாளர் நலம் பேணியுள்ளார். மன்பதையில் நடைமுறையில் இருந்துவந்த ஏழைபணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகளை வேரோடும் வேரடி மண்ணோடும் களைந்தெறிய எண்ணிப் பாடுபட்டவர் பாரதிதாசன்.

பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதியில் வரும் 'சமத்துவப் பாட்டு' நம் கருத்தை மிகுதியும் ஈர்ப்பதாகவுள்ளது. அப்பாட்டின் இறுதியில், அவர்

*"தாழ்வில்லை உயர்வில்லை*
*சமமென்ற நிலைவந்தால்*
*வாழ்வெல்லை காண்போமடி — சகியே*
*வாழ்வெல்லை காண்போமடி!*
*சூழ்கின்ற பேதமெல்லாம்*
*துடைத்தே சமத்துவத்தில்*

*வாழ்கின்றார் வாழ்வின்பமாம் - சகியே*
*வாழ்கின்றார் வாழ்வின்பமாம்"*
*(பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, ப.196)*

என்று மகிழ்ந்து பாடுகின்றார். மக்கட் சமுதாயத்திற்கு அறிவுரை கூறி, அதிர்ந்தெழுமாறும் செய்கின்றார்.

*"சாதிமத பேதங்கள் மூடவழக் கங்கள்*
*தாங்கிநடை பெற்றுவரும் சண்டையுல கிதனை*
*ஊதையினில துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்*
*ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!"*
*(மேலது, ப.146)*

இப்படி உழைப்பவர்கள் சார்பில் எழுச்சிதரும் ஏற்றம் நிறைந்த கவிதைகளைத் தமிழில் குவித்தமையால் பாவேந்தரைப் புலமைப்பித்தன்,

*"உறங்கிக் கிடந்த தமிழினந்தான்*
*உறக்கம் கலைந்து கடைத்தேற*
*உதிர மனைத்தும் கொதிப்பேற்றிக்*
*கறங்கிக் கலிக்கும் கவிமுரசே!*
*காலப் புயலே!.................*
*மறங்கொண் டெழுந்து போராட*
*வளரும் மைந்தா தாலேலோ!*
*மாலைப் பொழுதின் இளந்தென்றல்*
*மணமே தாலோ தாலேலோ!*
*(புலமைப்பித்தன், பாவேந்தர் பிள்ளைத்தமிழ், ப.24)*

எனப் பாராட்டிப் போற்றுவது மிகப் பொருத்தம்தான்! பாவேந்தர் வாழ்ந்த காலச் சூழலையும் நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். "நாமோ உள்ளத்தில் வேற்றுமையின் செவிலித்தாய்கள். வெளியில் ஒற்றுமைக்கு தவும் ஒப்பாரிக் கூட்டத்தில் ஓசை மணிகள்" (உலகம் ஒரு குடும்பம், ப.113) என்று பேரா. சாலை. இளந்திரையன் கூறுவது அன்றையத்

தமிழ்மக்களின் மனநிலையைத் தெளிவாகக் காட்டும். இந்நிலையை உணர்ந்த பாவேந்தர் பாரதிதாசன்; உலக ஒற்றுமை குறித்தும் எண்ணியுள்ளார். தான் வாழவேண்டும் தன் குடும்பம் வாழவேண்டும் என எண்ணுபவன் உள்ளம் சின்னஞ்சிறிய 'கடுகுள்ளம்' என்பார். என்சிற்றூர் எனக்கு உவப்பானது என்று நினைப்பவன் உள்ளம் 'கடுகுக்கு நேர்மூத்த துவ்வரை யுள்ளம்' ஆகும். நம் நாட்டின் சுதந்தரம் நிலைக்க வேண்டிப் பிறநாட்டைத் துன்புறுத்துவார் சிலர். அவர்களின் உள்ளம் தொன்னையுள்ளம் 'அளவினது'. அடுத்தது 'மாம்பிஞ்சு' அளவு சிறிது பெருத்த உள்ளம். ஆனாலும் அது ஆயுதங்களைப் பரிகரித்து, அமைதிகாக்க வேண்டி வாயடியும் கையடியும் வளரச் செய்பவர் உள்ளம்தான்! இருப்பினும் உலகம் நலமாய் வாழவேண்டும்! உலக மக்கள் யாவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாவர் என்று எண்ணும் பரந்துவிரிந்த உள்ளம் உலகமெங்கும் பரவ வேண்டும் என்று எண்ணிப் பாவேந்தர் கூறுவது எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் மாசற்ற அன்புள்ளம்; பெரிய உள்ளமன்றோ! அது 'தாயுள்ளம்' என்பார்.

*"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரியஉள்ளம்*
*தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்*
*தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே*
*சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.131)*

இப்படி ஐந்து வகை உள்ளங்களையும் கூறித் தாயுள்ளம் ஒன்றினாலே மட்டும் உலக ஒற்றுமை தளிர்க்கும்; நிலைக்கும் என்று எண்ணியுரைத்த பாவேந்தரின் பரந்த உள்ளம் போற்றத் தக்கது; உலக நாடுகள் யாவும் பின்பற்ற வேண்டிய ஒப்பற்ற உள்ளம் என்பதில் ஐயமில்லை!

*"பெருநிலத்தார் எல்லோரும் ஒருதாயின் மக்கள்*
*பிறர்தமர் என்றெண்ணுவது பேதை மையே"*
*(பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, ப.109)*

என்பது இங்கே எண்ணத்தகும்.

*"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு*
*பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு" (திருமுரு. 1-2)*

என்பது நக்கீரரின் பார்வை.

*"உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்*
*நிலவு லாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்*
*மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"*
*(பெரியபு. பாயிரம், 1)*

எனப்து சேக்கிழார் திருவாக்கு.

*"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்*
*நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட் டுடையார் அவர்*
*தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே"*
*(கம்ப.பாயிரம், ப.1)*

என்று கம்பர் தம் இராமாயணக் காப்பியப்பாயிரத்தில் கூறுவார். இப்படித் தொன்று தொட்டு வருகின்ற 'ஞாலப்பார்வை' நம் பாரதிதாசனுக்கும் இருந்தது என்பதனை எண்ணும் போது நமக்குப் பெருமிதம் ஏற்படுகிறது.

## காதலுணர்வு

"சங்ககாலப் பாக்கள் பெதுவான தலைவன் - தலைவியரைக் கொண்டு காதல் உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் தனிப்பாக்களாக உள்ளன. இடைக்காலத்திய சிற்றிலக்கியங்களில், சுவைமிக்க காதற்பாக்கள் இடம் பெற்றுள்ளனவாயினும், அவை கதையிடையே தனிப்பாக்களாக இல்லை. இலக்கிய வரலாற்றில் காதற்பாடல்களைத் தனிப்பாடல்களாகப் பெருமளவில் அமுதூரப் பாடியுள்ளவர் பாரதிதாசனாரே ஆவார். நூல்களில் பெருந்தலைப்புகள் பிரிக்கப்படும் பொழுது ஒரு தலைப்பாக்கி, அதன் கீழ்க் காதல் கவிதைகள் இடம் பெறத்தொடங்கியது முதன் முதலில் பாரதிதாசனாரின் நூல்களில்தான் என்று கூறலாம். அவரைத் தொடர்ந்து அதே போக்கில், கவிதைகளை யாத்தமையால் 'பாரதிதாசன் பரம்பரை' உருவான செய்தியைத் தமிழகம் நன்கு அறியும்.

*"என்நடை தம்நடை; என்யாப்பு தம்யாப்பென்று*
*இந்நாள் எழுந்துள பாவலர் தம்மை*
*எண்ணினால் இருப்பவர்தம்மில் நூற்றுக்குத்*
*தொண்ணூற் றொன்பது பேர்எனச் சொல்லுவர்"*

என்று பாரதிதாசன் அவர்களே இதைக் குறிப்பிடக்காண்கிறோம். (காதல் பாடல்கள், அணிந்துரை, ப.6) என்று சிலம்பொலி சு. செல்லப்பன் மதிப்பிட்டுச் சொல்வது சாலவும் பொருந்தும்.

135 தலைப்புகளில் 'காதல் பாடல்கள்' என்ற பாவேந்தரின் நூல் 1977-ஆம் ஆண்டு பூம்புகார் பிரசுரத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. "பன்மணித்திரள்' எனும் தலைப்பில் வெளிவந்த நூல்களின்று காதல் துறை பற்றிய சில பாடல்களும் இதுவரை நூல் வடிவில் வராத பல பாடல்களும் இந்தத் திரட்டில் இடம் பெற்றுள்ளன." என்பது திரு. மன்னர் மன்னனின் கூற்று. இவையே அல்லாமல் பாரதிதாசன் கவிதைகள் நான்கு தொகுதிகளிலும், குடும்ப விளக்கு, தமிழச்சியின் கத்தி, இசையமுது இனைய பிற நூல்களிலும் காதல் குறித்த பாவேந்தரின் பாடல்கள் நிரம்பவுள.

*"அன்பே உடலுயிர் ஆக்கும் போலும்*
*அன்பே காதல் ஆகும் போலும்*
*கழறும் அக்காதல் வலியது போலும்"*

*(காதல் பாடல்கள், ப.132)*

என்று பாவேந்தர் கூறுவது இங்கே எண்ணிப்பார்ப்பதற்கு உரியது. சொர்ணம் என்பாள் அன்புக் காதலன் சுதந்திரத்தை அவன் தாய் வெளியில் சென்றிருந்தபோது வீட்டில் கண்டு பேசவந்தாள். அப்போது நிகழ்ந்ததனைச் சுவைபடப் பாவேந்தர் கூறுவதனைப் பாருங்கள்.

*"கூடத்திலே மனப்பாடத்திலே — விழி*
*கூடிக் கிடந்திடும் ஆணழகை*
*ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால் - அவள்*
*உணத்தலைப்படு நேரத்திலே,*

*பாடம் படித்து நிமிர்ந்த விழி — தனிற்*
*பட்டுத் தெரித்தது மானின்விழி!*
*ஆடைதிருத்தி நின்றாள் அவள்தான் - இவன்*
*ஆயிரம் ஏடு திருப்பு கின்றான்"*

*(பா.கவி. முதல் தொகுதி, ப.72)*

என்று அவர் கூறி நம் கற்பனைக்கு வழிவிட்டு விடுகின்றார்.

காதலை இவ்வுலகில் எதிர்ப்பவர் பெற்றவர்கள் மட்டுமல்லர்; உற்றார் உறவினர்களா? இல்லை! சுற்றியிருப்பவர்கள் ஆண்பெண் காதலை ஊதிப் பெரிதாக்கி விடுவர். பேனைப் பெருச்சாளி ஆக்குவது சமுதாய நிலை, ஆயின் மனம் ஒருமித்த காதலை அகனைந்திணையாகப் போற்றியது சங்க காலம். காதலுக்குக் குறுக்கே நிற்கும் ஆற்றல்களைப் பாவேந்தர் தம் கவிதைச் சவுக்கால் சாட்டையடி கொடுத்துத் திருத்த முனைவார்.

*"ஓட்டும் இரண்டுளத்தைத் தம்மில் ஓங்கிய காதலினைப்*
*பிட்டுப் பிட்டுப் புகன்றார் — அதைப்பெற்றவர்*
*கேட்கவில்லை.*
*குட்டை மனத்தாலே — அவர் கோபப் பெருக்காலே*
*வெட்டிப் பிரிக்க வந்தார் — அந்த*
*வீணையை நாதத்தினை!"*

இப்படித் தொடங்கிய காதல் பல்வேறு இடையூறுகளால் - எதிர்ப்புகளால் அவ்விருவரும் தற்கொலை செய்து கொள்வதிலே போய் முடிந்தது. இப்போது பாரதிதாசன் பேசுகிறார் இதோ:

*"தூயநற் காதலர்க்கே பெருந்*
*தொல்லைதரும் புவியில்*
*மாய்க நமமடல்கள்! விஷம்*
*மாந்துக நம்மலர்வாய்கள்*
*போய் நுகர்வோம் சலியா - இன்பம்*
*பூமியின் கர்ப்பத்திலே'*
*என்று விஷம் குடித்தார் — அவர்*
*இறப்பென்னும நிலையில்*

*ஒன்றுபட்டுச் சிறந்தார் - இணை*
*ஓதரும் காதலர்கள்*
*இன்றுதொட்டுப் புவியே - இரண்*
*டெண்ணம் ஒருமித்தபின்*
*நின்று தடைபுரிந்தால் - நீ*
*நிச்சயம் தோல்வி கொள்வாய்"*
*(பா.கவி.முதல் தொகுதி, ப.79)*

கருத்தொருமித்த காதலர்களைப் பிரித்தால் அவ்விருவரும் சாவதுறுதி! அதனால் காதலுக்கு வெற்றி! பிரித்தவர்க்குத் தோல்வியாகும்.

காதல் பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாத தலைவி பிரிவுத் துன்பத்தில் துவண்டு போகும் துன்ப நிலையைத் திருவள்ளுவர்,

*"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற*
*நாளொற்றித் தேய்ந்த விரல்" (குறள், 1261)*

எனத் தலைவி கூற்றாகக் கூறுவார். பிரிவால் வரும் பசலைநோய் அவளைப் பாடாய்ப்படுத்துகின்றது. அவன் ஒரு நாள்தான் என்று கூறிச் சென்றான். ஆனால் அவளுக்கோ,

*"ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்*
*வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு" (குறள், 1270)*

என்றமைந்ததாம். இன்னும் ஒருபடி மேலே செல்கின்றது தலைவியின் மனநிலை. தலைவன் கார்காலத் தொடக்கத்தில் வருவேன் என்று தலைவியிடம் சொல்லிப் போனான். ஆனால் கார்காலம் வந்தும் அவன் வரவில்லை. ஏக்கப் பெருமூச்சு விட்ட அவள் நெஞ்சம் வாளா இருக்கவில்லை! தலைவன் வருகின்ற வழியைப் பார்க்க அவள் வீட்டுத் தோட்டத்திலே வளர்ந்திருக்கும் உயரமான மரத்தின் கிளைகளில் ஏறி உச்சிக்குச் சென்று 'அவன் வருகின்றானா?' என்று வழிமேல் விழிவைத்துப் பார்க்கிறது அவளுடைய தவித்துக் கிடக்கும் நெஞ்சு. இதோ அந்தக்குறள்.

**"கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்**
**கோடுகொ டேறும்என் நெஞ்சு" (குறள், 1264)**

குறுந்தொகைத் தலைவியின் மனநிலையோ இதனினும் வேறுபட அமைகின்றது. தலைவனைப் பிரிந்தமையால் பசலை பற்றியது; அவளைத் துன்புறுத்தி வருத்துகின்றது. ஊராரும் உற்றாரும் மனஅமைதியுடன் உறங்குகின்றனர். ஆனால் அவளுக்கோ உறக்கம் இல்லை! பிறரெல்லாம் எவ்வித மனச்சஞ்சலமும் இல்லாமல் அயர்ந்து தூங்குகின்றனர். இவளோ மனத்தில் பிரிவுத்துன்பம் நிரம்பவும் வருத்துகின்றமையால் தூங்காமல் தவிக்கின்றாள். அத்தவிப்பின் வெளிப்பாடு,

***"முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்***
***ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு***
***ஆஅ ஒல்லெனக் கூறு வேன்கொல்***
***அலமரல் அசைவளி அலைப்பஎன்***
***உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே!"***
***(குறுந்.28)***

என்று அமைகின்றது. இது ஔவையாரின் அகப்பாடல். ஆம்! காதல் படுத்தும் பாடும் பிரிவுத்துயரம் ஏற்படுத்தும் துன்பமும் எல்லை கடந்து போவதனை நாம் தமிழ் இலக்கியங்களில் நிறையக் கண்டுணர இயலும்! அதே வழியில் வந்த பாரதிதாசனும் காதலைப் பற்றித் தாம் படைத்துள்ள காவியப் பாத்திரங்கள் வாயிலாகவும், தனிப்பாடல்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

கலிங்கத்துப்பரணியில் போர்க்களத்திற்குச் சென்று வெற்றிப் பெருமிதத்துடன் நாடு திரும்பிய வீரர்கள், தங்கள் இல்லங்களில் தனித்துத் தவித்துறங்கும் தங்கள் துணைவியரை வீட்டுக் கதவைத்திறக்குமாறு வேண்டுவதாகச் செயங்கொண்டார் பல காட்சிகளைக் காட்டுகின்றார். இது 'கடைதிறப்பு' என்னும் பகுதியில் வருவது. தலைவன் வருகைக்காக இரவுப்பொழுது முழுக்கத் தம் இல்லக் கதவுகளைத் திறந்து, மூடிப் பின், திறந்து மூடினராம். இதனைச் செயங்கொண்டார் சொல்நயம் தோன்றக் கூறியுள்ளார் இதோ:

*"வருவார் கொழுநர் எனத்திறந்தும்*
*வாரார் கொழுநர் எனவடைத்தும்*
*திருகும் குடுமி விடியளவும்*
*தேயும் கபாடம் திறமினோ"*
*(கலிங்கத்துப்பரணி, கடைதிறப்பு, 41)*

பாரதிதாசன் காட்டும் பெண்ணின் மனநிலையோ இதனின்றும் வேறு வகையாக அமைகின்றது. தன் கணவன் வருவான் என்று எதிர்பார்த்த அவன் மனைவியைப் பாவேந்தர் நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்திவிடுகின்றார்.

*"காதல் துரத்தக் கடிதுவந்த வேல்முருகன்*
*ஏதும் உரையாமல் இருவிரலை வீட்டுத்*
*தெருக்கதவில் ஊன்றினான் 'திறந்தேன்' என்றோர் சொல்*
*வரக் கேட்டான். ஆஆ மரக்கதவும் பேசுமோ?*

*'என்ன புதுமை' எனஏங்க, மறுநொடியில்*
*சின்னக் கதவு திறந்த ஒலியோடு*
*தன்னருமைக் காதலியின் தாவுமலர்க் கைநுகர்ந்தான்!*
*புன்முருவல் கண்டு பூரித்தான் 'என்னேடி*

*தட்டுமுன்பு தாழ்திறந்து விட்டாயே' என்றுரைத்தான்*
*விட்டுப் பிரியாதார் மேவும் ஒரு பெண்நான்*
*பிரிந்தார் வரும்வரைக்கும் பேதை, தெருவிற்*
*கருமரத்தாற் செய்த கதவு."*
*(பா.கவி. இரண்டாம் தொகுதி, ப.68)*

இவ்வாறு 'மலரினும் மெல்லிய' காமத்தை — காதலின் உச்சகட்ட உணர்வை வெளிப்படுத்த வேண்டி எண்ணிய பாரதிதாசனின் எண்ணம் இப்பாடல் வழி இனிதே புலப்படும்.

கணவன்-மனைவி வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறிய 'குடும்ப விளக்கு' இன்றைய இளந்தலைமுறையில் வாழ்கின்ற

இணையர்கள் போற்றிப் பின்பற்ற வேண்டிய அரிய செயல்முறைகளைப் பாவேந்தர் திருக்குறள் வழியில் எடுத்துக் கூறியுள்ளார்.

*"தமிமில் இருந்து தமதுபாத் துண்டற்றால்*
*அம்மா அரிவை முயக்கு" (குறள், 1107)*

என்று திருவள்ளுவர் புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தில் கூறுவார். இன்னும் கொஞ்சம் அழுத்தம் கொடுத்துக் காதல் உணர்வைப் பேசுமிடம்,

*"அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு" (குறள், 1110)*

என்ற குறளாகும். குறளடிச்சுவட்டைப் பாவேந்தர் பயன்படுத்தியள்ள பாங்கு மிக நயம் உடையதாகவுள்ளது.

*"அன்றிலடி நாமிருவர் பழமும் பாலும்*
*ஆருக்குவேண்டுமடி! என்றன் ஆசைக்*
*குன்றத்திற் படர்ந்தமலர்க் கொடியே! மண்ணில்*
*குவிந்திருக்கும் சுவையுள்ள பொருள்கள் எல்லாம்*
*ஒன்றொன்றும் சிலநாளில் தெவிட்டிப் போகும்....*
*'அன்றன்று புதுமையடி, தெவிட்ட லுண்டோ?*
*ஆருயிரே: நீகொடுக்கும் இன்பம்' என்றான்"*
*(குடும்பவிளக்கு, பக்.48-49)*

நடுத்தர வயதுடையவரின் காதலுணர்வை நயம்பட வெளிப்படுத்திக் காட்டும் பாவேந்தர் பாரதிதாசனின் சதுரப்பாடு எண்ணிமகிழத்தக்கதாகும். குடும்பவிளக்கின் ஐந்தாம் பகுதி 'முதியோர் காதல்' பற்றிச் சிறப்புடன் எடுத்துப் பேசுகிறது. வேடப்பனுடைய தந்தை மணவழர் தாய் தங்கத்தம்மையார் எப்படிப்பட்டவர்கள் என்பதனைப் பாவேந்தர்,

*"ஆடிய பம்ப ரங்கள்*
*அல்லவா அம்மூத் தோர்கள்?" (மேலது, ப.269)*

என்று சொல்லில் வடித்துக் காட்டியுள்ளார். மணவழகர் முதுமையில் பேசுவது,

*"விதைத்திட்டேன் அவளின் நெஞ்சில்*
*என்றனை! நேற்றா? அல்ல;*
*இதற்குமுன் இளமை என்பது*
*என்றைக்கோ அன்றைக் கேநான்!*
*கதையாகிக் கனவாய்ப் போகும்*
*நிகழ்ந்தவை; எனினும் அந்த*
*முதியோளே வாழு கின்றாள்*
*என்நெஞ்சில் ஒன்று போதும்" (மேலது, ப.273)*

என்பதாகும். உலக அமைதிக்கு எளிய வழி கூறுகின்றனர் குடும்பவிளக்கில் வரும் முதியோர்.

*"இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்*
*இலேசுவழி ஒன்றுண்டு; பெண்களை ஆடவர்கள்*
*எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்*
*தாய்மையினை இழித்துரைக்கும் நூலும்ஒரு நூலா?*
*செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம் தேடல்*
*செயற்பால யாவினுமே முதன்மையெனக் கொண்டே*
*அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனை யாளால்*
*அமைதியுல குண்டாகும், என்னஇதில் ஐயம்?"*
*(மேலது, ப.297)*

என்று வழங்கும் அறிவுரையை நம் தமிழ் உலகம் கேட்டு நடந்திருக்குமானால் முதியோர் இல்லங்களும், மணமுறிவுகளும் சமுதாயத்தில் முளை விட்டிருக்குமா? மனம் ஒன்றினால் இல்வாழ்க்கை சிறக்கும். இதுவே குடும்ப வாழ்க்கையின் மேன்மைக்கும் சிறப்பிற்கும் அடிப்படையாகும் என்பதனை முதியோர் காதல் வாயிலாகப் பாவேந்தர் வலியுறுத்தியுள்ளார். அவருடைய எண்ணம் இங்கே எழுத்து வடிவம் பெறுகின்றது.

*"வாய்மூக்குக் கண்காது மெய்வாடி னாலும்*
*மனைவிக்கும் என்றனுக்கும் மனமுண்டு கண்டீர்*
*தாய்மையுறும் அவ்விரண்டு மனங்கொள்ளும் இன்பம்*

*துடுக்குடைய இளையோரும் படைத்திடுதல்*
*இல்லை.” (மேலது, ப.300)*

மணவழகரும் தங்கத்தம்மையும் தங்களின் இறுதிக்கால வாழ்வில் எப்படி வாழ்ந்தனர் என்பதனைப் பாவேந்தர்,

*“அருவியெலாம் தென்பாங்கு பாடுகின்ற பொதிகை*
*அசைதென்றல் குளிர்வீசும் சந்தனச் சோலைக்குள்*
*திரிகின்ற சோடிமயில் யாமிரண்டு பேரும்!*
*தெவிட்டாது காதல்நுகர் செந்தேன்சிட் டுக்கள்*
*பெருந்தென்னங் கீற்றினிலே இருந்தாடும் கிளிகள்*
*பெண்இவளோ ஆண்நானோ எனவேறு வேறாய்ப்*
*பிரித்துணர மாட்டாத பிசைந்தகூட் டமிழ்து!*
*பேசினார் இவ்வாறு, கூசினள்மூ தாட்டி”*
*(மேலது, ப.300)*

எனச் சுவைபட எடுத்துக்கூறி இல்லறத்தைப் போற்றிப் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை நன்கு பெறவைப்பார்.

*‘வினைமுடித்துவரும் தலைவன் தேர்ப்பாகற்குச்*
*சொல்லியது’*

என்று சங்கத்தமிழ் அகப்பாடல்களில் துறைகூறப்பெறும். அத்துறையினைப் போல் பாங்காயினாருக்குச் சொல்வதுவும் ஒருதுறை ஆகும். அப்படிப் பாவேந்தரின் பாடலில் ஒரு தலைவன் தன் தோழனிடம் கூறுவதாய் ஒரு பாடல். தோழன் கேட்கிறான்:

*“புருவம் நெறித்தால் உலகம் பொடியாய்ப் போகும்*
*போஎன்றால் செங்கதிரும் போக்கில் மாறும்*
*பெருமறவா ஏன்நலிந்தாய்?”*

என்ற நண்பனின் வினாவிற்கு இவன் தரும் மறுமொழி:

*"........... பெற்றகரிய தோழனே இதைக்கேட் பாய்நீ*
*ஒருநினைவும் ஒருசெயலும் இலாதொ ழிந்தேன்*
*உயிர்வாழ்கின்றேன் இதுவும் புதுமை யேஆம்!*
*அருந்துணையை அன்னைவந்து கூட்டிச் சென்றார்!*
*அவள்இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!"*
*(காதற்பாடல்கள், பக்.81-82)*

என்பதாகும். தலைவி பிரிந்தமையால் வருத்தமுறும் தலைவன் தன்னுடைய புருவத்தை நெறித்தால் இம்மண்ணுலகம் பொடிப் பொடியாய்ப் போகுமாம், அப்படிப்பட்ட போர் மறவனாகிய இவன் மனம் அவளைப் பிரிந்திருக்க இயலவில்லையாம். ஆமாம்! காதல் அவ்வளவு வலிமையுடையது. பாவேந்தரின் இவ்வடிகளிலே,

*"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்*
*நண்ணாரும் உட்கும்என் பீடு" (குறள், 1088)*

எனவரும் காமத்துப்பாலின் சாயலைக்கண்டு சுவைக்க முடிகின்றதன்றோ! 'காதற்பசி'யின் கடுமையும் கொடுமையும் எப்படி ஒருவனைச் சுடும்: இதோ சுடுநெருப்பாய்ப் பாவேந்தர் பாடலில்:

*"இன்பமான நிலவு – நீ*
*என்னைப் பற்றி உலவு – நான்*
*துன்பப்பட்ட நேரமெல்லாம்*
*தொலைந்தது பார்! கொஞ்சிக் குலவு!*
*நேற்றுவந்தேன் இல்லையே – நீ இல்லையே!"*
*(காதற்பாடல்கள், ப.55)*

தான் விரும்பிய அத்தான் நினைவாகவே அவள் இருந்தாள். ஆமாம்! 'நோக்குவ எல்லாம் அவையே போறல்' என்று தமிழ் இலக்கணம் கூறுமே அது போன்று அவள் நிலை. 'அவர் வருவார்' என்று எதிர்பார்த்த அவளுக்கு, நிலவு வானத்தில் எட்டிப்பாத்துக் கேலிச்சிரிப்பை அள்ளி வீசிற்றாம்.

*"வருவதாயச் சொன்னவர் வந்திருப் பார்என்று*
*தெருக்கதவு திறந்து பார்த்தேன்; தென்னையை*
*'அத்தான்' என்றழைத் திட்டேன். அதற்கு*
*முத்தொளி சிதறிட முழுநிலா என்மேல்*
*கேலிச் சிரிப்பை வீசி*
*நாலுபேர் அறியச் செய்தது நங்கையே! (மேலது, ப.155)*

தென்னையை அவள் 'அத்தான்' என்றாள். ஆனால் கலிங்கத்துப்பரணியில் வரும் பெண்ணோ நிலவைத் துகில் என்று எண்ணிஉடுத்தச் சென்றாளாம். காதல் உணர்விலே கற்பனை துள்ளி விளையாடுகின்றது புலவர்களுக்கு.

*"கலவிக் களியின் மயக்கத்தாற்*
*கலைபோய் அகலக் கலைமதியின்*
*நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்!*
*நீள்பொற் கபாடம் திறமினோ!"*
*(கலிங்கத்துப்பரணி, கடைதிறப்பு, 29)*

காதலுக்குச் சமுதாயத்தில் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கிளம்பும். அவற்றைப் பொருட்படுத்துதல் கூடாது என்பதை வலியுறுத்த எண்ணிய பாவேந்தர்,

*"காதலை அறியாக் கயவர்கூட்டம்*
*கண்டதையெல்லாம் கத்தட்டும்!*
*மோதும் அலையில் உப்பைக் கொட்டும்*
*மூடர்கள் ஏதும் செய்யட்டும்!*
*.............. .......... .............*
*உண்ணும்போதும் உயிர்க்கும் போதும்*
*காதலையன்றி ஒன்றறியேன்*
*பண்ணும் தொழிலில் பாட்டில் காதல்*
*மன்னவனன்றி வேறறியேன்" (மேலது, ப.60)*

என்று கூறுவது காதலின் அழுத்தத்தை உணர்த்துவதாகும். மற்றுமொரு பாடலில் பாவேந்தர் கூறும்,

*"காதல் கள்மயக்கில் துள்ளுவதும் யாம் யாம் யாம்!"*
*(மேலது, ப.61)*

என்னும் தொடரில்,

*"உண்டார்கண் அலலது அடுநறாக் காமம்போல்*
*கண்டார் மகிழ்செய்தல் இன்று"* (குறள், 1090)

என்னும் குறளின் கருத்துப் பதிவினைக் கண்டுணர முடிகின்றது.

நல்ல மனைவி பற்றிப் பாவேந்தர் ஒரு பாடலில் கூறுவது இவண் எண்ணத்தகுவது.

*"மக்கட் குழைப்பவற்கு நான்ஒரு துணைவி*
*மகிழ்ச்சி அளிப்பதில் மகிழ்ந்திடும் மனைவி*
*எக்காலமும் அவன் முரட்டுக்கை அணைப்பு*
*ஏங்கும் என்உளம் உடல் அன்புறும் இணைப்பு"*
*(மேலது, ப.101)*

'பெண்'ணைப்பற்றிப் பேசவந்த திருவள்ளுவர்,

*"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்"* (குறள், 56)

என்று வாழ்க்கைத்துணைநலம் என்ற அதிகாரத்துள் கூறுவார். பாவேந்தர் 'பெண்' என்னும்தலைப்பிலே ஒரு பாடல் படைத்துள்ளார்.

*"பெண்ணென்றால் அவளல்லவோ பெண்? – உலகில்*
*கணவன் மாமியார்க்கே காப்பவள் மாமனார்க்கே!*
*உண்மையில் வாழ்க்யிலே உயிராவாள் கணவனுக்கே!'*
*......................... .............. .....................*
*பெண்டிர்க்குப் பெருமாட்டி பிள்ளைகட்கு வழிகாட்டி!*
*அண்டிடும் ஏழைகளை ஆதரிப்பாள் அமுதூட்டி*
*தொண்டுக்கே அன்புகாட்டித் தொழுவாள்*
*மணமாலை சூட்டி"*
*(காதற்பாடல்கள், ப.103)*

பிற இல்லத்திரசியர்க்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குதல் வேண்டும் என்று பாவேந்தர் எண்ணும் எண்ணம் இப்பாடல்களின் வழி எழுத்தாகின்றது. குடும்பவிளக்கில் வரும் குடும்பத் தலைவியைப் பாவேந்தர் நம்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார்.

*"கடடுக்குள் அடங்கா தாடிக் களித்திடும் தனதுசெல்வச்*
*சிட்டுக்கள், சுவடிக்குள்ளே செந்தமிழ்த் தீனிஉண்ண*
*விட்டுப்,பின் அடுக்களைக்கு அமுதத்தை*
*விளைவுசெய்தாள்*
*எட்டுக்கு மணிஅடிக்க அத்தானை எதிர்பார்க் கின்றாள்"*
*(குடும்பவிளக்கு, ப.39)*

பாவேந்தர் எழுத்தில் குடும்பத்தவர் நலன் மட்டுமா சொல்லப்படுகிறது. இல்லை! இல்லை! பொதுத்தொண்டும் அவரால் வலியுறுத்தப் பெறுகின்றது.

*"மிதிபாகற் காய்கசக்கும்; எனினும் அந்த*
*மேற்கசப்பின் உள்ளேயும் சுவைஇருக்கும்*
*அதுபோல் தானேடி? அதனா லென்ன?*
*அறிவிப்பாய் இளமானே' என்றான் அன்பன்,*
*அதிகாலை தொடங்கி நாமிரவு மட்டும்*
*அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்,*
*இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்ன செய்தோம்?*
*என்பதைநாம் நினைத்துப்பார்ப் பதுவு மில்லை.*
*(மேலது, ப.45)*

இருவருக்கும் இடையில் பொதுநலம் பற்றிய உரையாடல் தொடர்கிறது. இறுதியில் அவள் கணவன் ஒரு குறிக்கோள் வாழ்வைக் குறித்துப் பேசுவது பாவேந்தரின் எண்ணத்தை எதிரொலிப்பதாக அமைந்துள்ளது.

*"இழந்தபழம் புகழ்மீள வேண்டும் நாட்டில்*
*எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்*
*வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்*
*மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்*

*விழுந்ததமிழ் நாடுதலை தூக்க என்றன்*
*உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்"*
*(மேலது, ப.48)*

என்று அவன் வஞ்சினம் கூறுவது நெஞ்சினிக்கும் கொள்கையாகும். இவ்வாறு பாவேந்தர் எண்ணிய எண்ணங்களும் எடுத்துரைத்த எழுத்துக்களும் பெண்களின் முன்னேற்றம் பற்றியும் குடும்பநலத்துடன் பொதுநலமும் இணைந்து செல்வதாக அமைவதனையும் கண்டு தெளிய ஒண்ணும். பெண்ணடிமை தீரவேண்டும் என்னும் பேரவாக் கொண்டிருந்தவர் பாரதிதாசன் என்பது தேற்றம்.

## உயிர்நாடியாய் விளங்கும் தமிழுணர்வு

பாரதிதாசன் வாழ்ந்த நாளில் ஆங்கிலத்தில் பேசுவதும் எழுதுவதும் மேன்மை தரும் என்றும், பிறர் மதிப்பைப் பெற்றுத்தரும் என்றும் பலர் நம்பினார். அதனால் தமிழ் உணர்ச்சியைப் பாரதியார் தமிழ் மக்கள் உள்ளங்களிலே விதைத்துச் சென்றார்.

*"தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதென்று*
*வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே!"*
*(ஆறுவகை இலக்கணம், 705)*

எனப் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் கூறுவது இங்கே இணைத்துக் காணத்தகும். இவர் வழியில் பாரதியார்,

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்"*
*(பாரதியார் கவிதைகள், ப.43)*

என்றும்,

*"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழிய வே' (மேலது, ப.44)*

என்றும்,

*"வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!*
*வாழிய பாரத மணித்திருநாடு" (மேலது, ப.48)*

என்றும் பாடித் தமிழுணர்ச்சியைப் பெறவைத்தார். பாரதியாரின் வழியிலே பாவேந்தர் தமிழையும், தமிழ் நாட்டையும், தமிழின் வளர்ச்சியையும் தம்முடைய உள்ளத்தில் பதிய வைத்திருந்தமையால், தொழிலாளர் நலம் பேசும் போதும், மகளிர் உரிமை பற்றியுரைக்கும் போதும், குறுங்காவியங்களில் குறிக்கோளுடைய பாத்திரங்கள் வாயிலாகவும் தமிழ் பற்றியும், தமிழ்இலக்கியம் குறித்தும் பேசுவன அவரியல்பாக உள்ளது. ஏனென்றால்,

*"தமிழுக்கும் அமுதென்று பேர்! — அந்தத்*
*தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்!*
*தமிழுக்கு நிலவென்றுபேர்! - இன்பத்*
*தமிழெங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!*
*தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்*
*தமிழெங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*
*தமிழுக்கு மதுவென்றுபேர்! இன்பத்*
*தமிழெங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்!"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல்தொகுதி, ப.89)*

என்று அவர் கருதியமையே ஆகும். இனிமையான பொருள் எல்லாம் அவருக்குப் பிடிக்குமாம். ஆனால் தமிழ் ஒன்றை மட்டுமே தம் உயிர் என்று துணிந்து கூறும் பாவேந்தரின் நெஞ்சுரம் வேறு யாருக்கு வரும்?

*"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்*
*பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்*
*நனிபசு பொழியும் பாலும் - தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் - தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்!"*

இப்படி உயிரெனப் போற்றி ஒப்பற்ற கருத்துரைத்த பாவேந்தரை, அவருடைய நெருங்கிய உறவினர்களையும் கூட அயலவராக்கி விடுகிறதாம் எனில் அவருடைய தமிழுணர்வின் - தமிழுறவின் உயர்வும் ஆழமான நெருக்கமும் புலப்படும்.

*"பயிலுறும் அண்ணன் தம்பி — அக்கம்*
*பக்கத் துறவின் முறையார்*
*தயைமிக உடையாள் அன்னை — என்னைச்*
*சந்ததம்மறவாத் தந்தை*
*குயில்போற் பேசிடும் மனையாள் - அன்பைக்*
*கொட்டி வளர்க்கும் பிள்ளை*
*அயலவ ராகும் வண்ணம் - தமிழென்*
*அறிவினில் உறைதல் கண்டீர்"*

இம்மட்டோ! தமிழனுக்குத் தமிழுணர்வை ஊட்டி உயர்த்துவார்:

*"உன்னை வளர்ப்பன தமிழா! — உயிரை*
*உணர்வை வளர்ப்பது தமிழே!*
*(மேலது, பக்.87-88)*

இசைத்தமிழின் ஏற்றம் பறறிப் பாவேந்தர்,

*"………. வண்ணத் தமிழ்ப்பதம் பண்ணிற் கலந்தென்றன்*
*நெஞ்சையும், வானத்தையும் - குளிர்*
*நீரையும், நிலவையும் தமிழர் குலத்தையும்*
*ஒன்றெனச் செய்ததுவே — நல்*
*உவகை பெறச் செய்ததே தமிழ்ப் போசனம்*
*நன்று தமிழ் வளர்க! — கலை*
*நாட்டினில் எங்கனும் பல்குக! பல்குக!*
*என்றும் தமிழ் வளர்க! — கலை*
*யாவும் தமிழ்மொழியில் விளைந்தோங்குக!*
*இன்பம் எனப்படுதல் - தமிழ்*
*இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!'*
*(மேலது, ப.92)*

என்று விளக்குவார். தமிழ்மக்கள் அடைந்த துன்பங்களை எல்லாம் பாவேந்தர் எண்ணி வருந்துவார். அவ்வருத்தம் தீர வழியும் கூறுவார்:

*"இன்னலிலே, தமிழ் நாட்டிலே யுள்ள*
*என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.*
*அன்னதோர் காட்சி இரக்க முண்டாக்கிஎன்*
*ஆவியில் வந்து கலந்ததுவே!*
*இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்*
*என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் -*
*துன்பங்கள் நீங்கும், சுகம் வரும், நெஞ்சினில்*
*தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும்"*

*(மேலது, ப.93)*

என்று தமிழ் கற்பதால் நாம் பெறும் பயன்களை எல்லாம் அடுக்கிச் சொல்லுவார். தமிழ், வீரத்தை மனத்தில் ஏற்படுத்தியமை காரணத்தால் பாவேந்தர்,

*"தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு - இன்பத்*
*தமிழுக்கு நாளும் செய்வோம் நல்லதொண்டு*
*தமிழ்என்று தோள்தட்டி ஆடு — நல்ல*
*தமிழ் வெல்கவெல்க என்றே தினம்பாடு!"*

*(மேலது, ப.94)*

என்று வீரமுழக்கம் செய்து உரக்கச் சொல்வார். நற்றமிழுக்கு நாளும் நாம் எப்படிப்பட்ட தொண்டு செய்ய வேண்டும் என்பதனைப் பாரதிதாசன் வரையறுத்துக் கூறுகின்றார். கீழ்வரும் பாடலில் புதிய இலக்கணநூல்கள், வெளியுலகப் புதுப்புதுத்துறைகள் தக்க படங்களுடன் எளிமையாக விளக்கி, ஏழைமக்களும் படித்துப் பயன் பெறுமாறு தமிழில் சுவடிகள் இயற்ற வேண்டுமாம். இதோ:

*"எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்*
*இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்*
*வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக*
*விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாம்*
*கண்டு*

*தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து*
*செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும்*
*வேண்டும்*
*எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை என்றால்*
*இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்!.*

*உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்*
*ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்*
*சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்.*
*தமிழொளியை மதங்களிலே சாயக்காமை*
*வேண்டும்.*
*இலவச நூற்கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.*
*எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச்*
*சொல்லித்*
*தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்*
*தோமில்லை.*
*தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!"*
*(மேலது, ப.95)*

தமிழ் வளர்ச்சியில் பாரதிதாசன் எவ்வளவு ஆர்வத்துடனும் மிகுந்த ஈடுபாட்டோடும் இருந்தார் என்பதனை மேலே கண்ட பாடல்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள இயலும்!.

தமிழும், தமிழ்மக்களும், தமிழர் கலைகளும் இஞ்ஞாலம் எங்கும் பரவவேண்டும் என்றும் தமிழ் இலக்கியங்களின் சிறப்பினை நன்குணர்ந்து வெளிநாட்டினர் தங்கள் தங்கள் தாய்மொழியில் மொழி பெயர்த்து அவர்களின் மொழியை வளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று எண்ணும் பாவேந்தரின் உணர்வின் எல்லையை – அழுத்தத்தை, உணர்த்தும் ஒரு பாடல் இதோ:

*"தாயெழிற் றமிழை என்றன் தமிழரின்கவிதை தன்னை*
*ஆயிரம் மொழியிற் காண இப்புவி அவாவிற் றென்ற*

*தோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்தென்றன் செவியில் வந்து*
*பாயுநாள் எந்த நாளோ, ஆரிதைப் பகர்வார் இங்கே?*

*........... ............... ...............*

*நாடடும்சீர்த் தமிழன் இந் நானில மாயங்கண்டு*
*காட்டிய வழியிற் சென்று கதிபெற வேண்டும் என்றே*
*ஆட்டும் சுட்டுவிரல் கண்டே அடிற்று வையம் என்று*
*கேட்டுநான் இன்ப ஊற்றுக் கேணியிற் குளிப்ப தெந்நாள்?"*
*(மேலது, பக்.97-99)*

என்ற கவிதை வழியே அவர் இறுமாப்புடன் எடுத்துரைப்பதனைக் காண்கின்றோம். தமிழின் எழுச்சி நாதத்தைச் செவிமடுத்த பகைவர்கள் எங்கோ சென்று மறைந்துவிட்டனர்! ஏன் என்றால் தமிழர்கள் யாவரும் ஒன்றாக இணைந்தமை காரணமாம்!.

*'முடியுடை வேந்தர் மூவரும் கூடி*
*அரசவை யிருந்த தோற்றம் போல'*

என்று ஔவைப் பெருமாட்டி விழைந்தார்; அதுபோன்று, இப்படிச் சங்கநாதமெனவும் சீறிஎழும் சிங்கத்தின் கர்ச்சனையாகவும் பாவேந்தர் முழுங்குகின்றார்.

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!*
*எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்*
*இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!*

*திங்களொடும் செம்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்*
*மங்குல் கடல் இவற்றோடும்பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள் ஆண்மைச்*
*சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம்செய் முழங்கு சங்கே!"* *(மேலது, ப.100)*

என்று அலையோசையால் ஆரப்பரிக்கும் கடல் முழக்கமென முழங்கித் தம் எண்ணத்தைப் பாவேந்தர் எழுத்தில் வடித்துக் காட்டுவார்.

தமிழகம் எப்படி இருக்கவேண்டும் என்று பாவேந்தர் கற்பனை செய்து கூறுவது நம்மனோர் நெஞ்சிலே பேரொளியை ஊட்டிப் பேராற்றலைத் தருவதாக அமைகின்றது. தமிழர் மூதாதை! இராவணனைத் தமிழர் பெருமான்! என்று தறுகண்மையுடன் கூறும் பாவேந்தரின் எழுச்சிப்பாடல் இதோ:

*"இன்னலிலே, தமிழ் நாட்டிலே யுள்ள*
*என்தமிழ் மக்கள் துயின்றி ருந்தார்.*

*"வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!*
*விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!*
*சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்*
*தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூ ளாக்கும்*
*காழ்ச்சிந்தை, மறச்செயல்கள் மிகவும் வேண்டும்!*
*கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்!*
*கீழ்ச்செயல்கள் விடவேண்டும்! ராவ ணன்தன்*
*கீர்த்திசொல்லி அவன்நாமம் வாழ்த்த வேண்டும்!"*

*(மேலது, ப.174)*

என்று சொல்லும் துணிவும் அழுத்தமும் வேறு எக்கவிஞருக்கு வரும்?

'குடும்பவிளக்கு'ச் சிறுகாப்பியத்தில் வரும் குடும்பத்தலைவி கல்வி கற்ற பெண்ணாவாள். குழந்தைகளுக்கு அவள் பாடம் கற்பிக்கின்ற போதும் தமிழ் இலக்கிய நூல்களைக் கற்பித்தாளாம்.

*"பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்*
*அவள் வாத்திச்சி; அறைவீடு கழகம்;*
*தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை; அள்ளி*
*விழுங்கினர் பிள்கைள் வேளை யாயிற்றே"*

*(குடும்ப விளக்கு, ப.7)*

குடும்பவிளக்கிலே வரும் நகைமுத்துவைப் பிரியும் வேடப்பனுடைய உள்ளம் வெந்ததாம்; அதனை விளக்க வந்த பாவேந்தர் இங்கே தமிழ்ச் சுவையையே உவமையாகக் கூறுவது நயமாக உள்ளது.

*"................ ................ ......நெஞ்சைக்*
*கிளிபறித்துப் போனதால் மரம்போல் அங்கே*
*தண்டமிழ்த்தேன் உண்டவர்கள் பொருளை எண்ணித்*
*தனிப்பார்போல் தனித்திருந்தான்" (மேலது, ப.134)*

என்பதே அவ்வுவமைப் பகுதி.

'புரட்சிக்கவி'யில் வருகின்ற உதாரன், இளவரசி அமுதவல்லிக்கு யாப்புமுறை – செய்யுள் இலக்கணம் - கற்பிக்க அமர்த்தப்பட்டான். அவன் அவளுக்கு என்னென்ன பாவிலக்கணங்களை எல்லாம் கற்பித்தான் என்பதைப் பாவேந்தர்,

*"............. ................ .............. ஆசு*
*சித்திரம் நன்மதுரம்*
*சேர்ப்புறு வித்தாரம் - எனும்*
*தீங்கவிதை யனைத்தும்*
*கற்றுவர லானாள்"*
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.19)*

மேலும் அமுதவல்லியும் உதாரனும் காதல் வயப்பட்டனர்; மனம் ஒன்றினர். அரசன் இவர்களின் காதலை அறிந்து சிறையில் அடைப்பானாயின் என்று எண்ணிப் பேசும் போது,

*"பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?*
*பிறர்சூழ்ச்சி செந்தமிழை இழிப்ப துண்டோ?"*
*(மேலது, ப.23)*

என்பான். அவன் பேச்சிலும்கூடப் பாவேந்தருக்குத் தமிழ்க்காப்புணர்ச்சியே தலைதூக்கி நிற்கப் பார்க்கிறோம். இளவரசி அமுதவல்லியைக் காதலித்த குற்றத்திற்காக உதாரனுக்குக் கொலைத் தண்டனை அளித்தான் அரசன். கொலைக்களத்தில் கவிஞன் உதாரன் பொதுமக்களை நோக்கிப் பேசுவது,

*"தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்*
*தமிழ்க்கவியென் றெனை அவளும் காதலித்தாள்!*
*அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ்,என் னாவி*
*அழிவதற்குக் காரணமா யிருந்த தென்று*
*சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்*
*தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?*
*உமைஒன்று வேண்டுகின்றேன். மாசில்லாத*
*உயர்தமிழை உயிர்என்று போற்றுமின்கள்!"*
*(மேலது, ப.34)*

எனப் பேசுவதன் வாயிலாகப் பாவேந்தரின் எழுத்து வன்மை நமக்கு இனிது புலனாகும்.

*"கொழிக்கும் செந்தமிழ் மொழிக்கொரு பேறே*
*கொட்டுக சப்பாணி!*
*குருதி துடிப்புறக்கவிதை வடிப்பவன்*
*கொட்டுக சப்பாணி"*
*(பாவேந்தர் பிள்ளைத்தமிழ், ப.40)*

என்றும்,

*"புயலாய் எழுந்து பகைசாயப்*
*போர்வாட் கவிதைப் படையேந்திப்*
*புறநா னூற்றைப் புதுக்கியதோர்*
*புரட்சிக் குயிலே! இமயத்தில்*
*கயலைப் பொறித்த புகழ்வடிக்*
*கனிவாய் முத்தந் தருகவே!*
*கண்ணாய் விளங்கு தமிழ்க்கு மெழிற்*
*கண்ணே முந்தந் தருகவே! (மேலது, ப.45)*

என்றும் புலவர் புலமைப்பித்தன் பாவேந்தரைப் போற்றுவது நூற்றுக்கு நூறு உண்மை!

குடும்பவிளக்கில் வரும் தலைவி,

*"எப்போது தமிழனுக்குக் கையாலான*
*நமதுழைப்பை ஒரு காசைச் செலவு செய்தோம்?"*

என்று வினாத் தொடுத்தாள். அவ்வினாவிற்கு வீட்டுத்தலைவர்,

*"எப்படிக்கும் முதற்படியாய்த்*
*தமிழ்படிக்க வேண்டும்*
*இழந்தபுகழ் மீள வேண்டும் நாட்டில்*
*எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்...*
*விழுந்த தமிழ்நாடு தலைதூக்க என்றன்*
*உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்"*
*(குடும்பவிளக்கு, பக்.47-48)*

என்று தக்க மறுமொழி கூறித் தமிழ் உணர்வைத் தரணிக்கு எடுத்துரைப்பார். குடும்பவிளக்கின் தமிழ் ஒளியைப் போற்றிய பேராசிரியர் தா.வே..வீராசாமி, "தமிழ் இலக்கியத்தில் இறை மணத்தோடு தமிழ் மணத்தையும் கலந்தவர்கள் திருஞானசம்பந்தரும் குமரகுருபரரும் என்று கூறினால் தற்காலத் தமிழில் அரசியல் மணத்தைப் பாரதியும், சமுதாய மணத்தைப் பாரதிதாசனும் கலந்தனர் எனலாம். பாரதி பாடிய கவிதை அடிகளால் தமிழ் நீலத்திரைக் கடலோரத்திலிருந்து வடமாலவன் குன்றம் வரை வளர்ந்து வானம் அளந்ததெல்லாம் அளக்கத் தொடங்கியது. அந்நெறியில் வந்த பாதிதாசன் இது வரையில் தமிழைப் பற்றி இது போன்று எவரும் பாடியதில்லை என்று கூறும் வண்ணம் பாடினார். உயிரை, உணர்வை வளர்க்கும் தமிழைப் பிறவிக்குத் தாயாகக் கண்டார். தமிழ் என்று தோள்தட்டி ஆடினார். 'நல்ல தமிழ் வெல்க' என்று பாடினார். மங்காத தமிழையே வாழ்வும் வளமுமாகக் கொண்டார். தொட்ட தொட்ட இடமெல்லாம் தமிழின் பெருமையைக் கண்டார். தொட்ட தொட்ட இடமெல்லாம் தமிழின் பெருமையைச் சொல்லிச் சென்றார். இவர் பாடிய எல்லா நூல்களிலும் தமிழின் சீர்மையை நிலைநாட்டினார்" (பட்டறையிலே பாரதிதாசன், ப.29) என்று கூறும் மதிப்பீடு எண்ணி மகிழ்வதற்குரியதாகும்.

பேரா.தா.வே. வீராசாமி கூறுவது போல் பாவேந்தர், காதல் பாடல்கள்'. என்ற நூலில் 'பேசுவதற்குத் தமிழின்றிக் காதலின்பம் செல்லுமோ?' எனத் தலைப்பிட்ட பாடலில்,

*"தமிழினும் இனியதோர் மொழிதேடித்திரிவேனைத்*
*தடுத்தாட் கொண்ட பெருமாட்டி"*

என்றும்,

*"ஒருமொழிவைத் துலகாண்ட தமிழ னைப்போல்*
*ஒருநாவ லந்தீவை வென்றேனுந் தன்*
*பெருவேலான் அசோகனால் நெருங்க ஒண்ணாப்*
*பெருநெருப்பைத் தில்லிஎனும் சிறுதுரும்பா*
*நெருங்கும்? நீ தொடக்கம் செய் என்று சொன்னான்"*
*(காதல் பாடல்கள், பக்.193-195)*

என்றும் கூறுவன கொண்டு உறுதி செய்யலாம். பாவேந்தரின் உயிர் மூச்சுத் தமிழாலே இயங்கிற்று என்பதிலே ஐயமில்லை!

'அமிழ்து எது? 'என்றொரு பாடலில் தலைவன் சொல்வது:

*"பொங்கல் அமிழ்துதான்,*
*பொய்யில்லை, கட்டிக்*
*கரும்பும் அமிழ்து*
*கனிஅமிழ்து தேனமிழ்து*
*அப்பம் அமிழ்து*
*குழந்தை குதலை*
*மொழியமிழ்து, குன்றாப்*
*பழந்தமிழும், பாட்டும்*
*அமிழ்து தமிழ்ப்பண் அமிழ்து"*
*(பா.கவி. மூன்றாம் தொகுதி, ப.93)*

பாவேந்தருடைய எண்ணமும் எழுத்தும் எங்கும் எதிலும் தமிழ் மொழியைப் போற்றல், காத்தல், வளர்த்தல் என்பதாகவே இருந்தது. தமிழ் அவருடைய மூச்சாகவும், பேச்சாகவும், படைப்பாகவும் விளங்கிற்று என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவர் நாடகத்தமிழை வளர்க்க எண்ணிப் பிசிராந்தையார் நாடகத்தை இயற்றினார்: அந்நூலே அவருக்குச் சாகித்திய அகாதெமியின் விருதினைப் பெற்றுத்தந்தது. இயல்பாகவே இசையோடு இனியதமிழ்ப் பாடல்களைப் பாடும் ஆற்றலுடையவர் என்பது நாம் அறிந்ததே! அவ்வகையில் அவர் 'இசையமுது' என இருநூல்களைப் படைத்துள்ளார்.

தன் பிள்ளையிடம் பெற்றோர் இசையோடு பாடலைப் பாடுமாறு வேண்டினர். இது அப்பாடல்:

*"கிட்ட நெருங்கிஎனைப் - பிள்ளாய் என்று*
*கெஞ்சி நறுந்தேனைச்*
*சொட்டுவதைப் போலே — வாய்திறந்து*
*சொல்லொரு பாடல் என்றார்*
*கட்டிக் கரும்பான - இசைத்தமிழ்*
*காதினிற் கேட்டவுடன்*
*எட்டுவகைச் செல்வம் - தாம் பெற்றார்*
*என்னைச் சுமந்து பெற்றார்"*
*(பா.கவி.இரண்டாம் தொகுதி, ப.112)*

பாவேந்தரின் நெஞ்ச ஓட்டத்தை நிலை நிறுத்திக் காட்டும் உயிரோட்டமுள்ள குருதியோட்டமாய் அமைவது அவர்தம் 'தமிழியக்கம்' ஆகும். 24 தலைப்புகளிலே அமைவது இந்நூல். இந்நூலைப் பதிப்பித்துள்ள மணிவாசகர் நூலக உரிமையாளர் பேரா.ச. மெய்யப்பன், "தமிழுக்கு இடையூறு வந்த போதெல்லாம் தமிழ்காக்கும் வீரர்கள் பாடும் போர்ப்பாடல்கள் தமிழியக்கப் பாடல்கள். வீரம் செறிந்த பாடல்கள், மறவர் நாடி நரம்பினை முறுக்கேற்றுவன. தமிழியக்கம் இட்ட விதை இன்று துறைதோறும் வேர்விட்டு விழுது பரப்பி, செங்கோலாட்சி செலுத்தி வருகிறது. இது தமிழ்ப்பகைவர்களும் மறுக்கமுடியாத உண்மை" எனப் பதிப்பு முன்னுரையில் கூறுவது சாலப்பொருந்தும்.

பாவேந்தருடைய நூல்களைப் பலரும் படித்துச் சுவைக்கின்றனர்; பொதுமேடைகளிலே விறுகொள முழங்குகின்றனர். இதனைப் பாரதிதாசன் 1.3.1960-இல் புலவர் இராமநாதர்க்கு வழங்கிய வாழ்த்து மடலில் பதிவு செய்துள்ளார். அவ்வாழ்த்து மடலில் சில அடிகள்:

*"................ தமிழே உயிரென வாழும்*
*தோழர் சிலலோர் வாழ்வின் பயனென*
*என்பாட்டுக்களை என்றன் நூல்களை*

*வீட்டிலும் கூட்டந் தன்னிலும் மிக்க*
*ஒழுங்குறப் பாடு கின்றதும் உண்மையே!"*
*(தமிழியக்கம், பதிப்புரை)*

சமூகத்தில் வாழும் மங்கையர், வணிகர், அரசியல்சீர் வாய்ந்தார், புலவர், குடும்பத்தார், மாணவர், ஏடெழுதுவோர் என இவ்வாறு பலருக்கும் பாவேந்தர் தமிழைப் போற்றுமாறு வேண்டுகோள் விடுக்கின்றார். ஆமாம்! புலவர் புலமைப்பித்தன் கூறுமாறு, 'பழகுதமிழ்க் கவிபாடிப் பறக்கும் புதுவைக் குயிலே" ஆவார் பாவேந்தர்.

*"பண்ணிற் கனிந்த தமிழுக்குப்*
*பழியொன் றிங்கு வருமென்றால்*
*பரிவைக் கலந்து பாலூட்டும்*
*பாசத் தாய்தான் தடுத்தாலும்*
*கண்ணே விடமாட் டேனென்று*
*கழறும் உனது வஞ்சினத்தால்*
*கவலை மறந்து தமிழன்னை*
*கண்கள் வளரக் கண்டோமால்*
*மண்ணில்விளையும் புதுமைக்கோர்*
*மழையே தாலோ தாலேலோ*
*மாலைப் பொழுதின் இளந்தென்றல்*
*மனமே தாலோ தாலேலோ!"*
*(பாவேந்தர் பிள்ளைத்தமிழ், ப.23)*

எனப் புலவர் புலமைப்பித்தன் சாற்றுவது பாவேந்தர் உணர்வையும் எண்ணத்தையும் பிள்ளைத்தமிழ் வாயிலாகப் பெறவைக்கும் சிறந்த மதிப்பீடாகும்.

## தமிழியக்கம் தரும் தறுகண்மை

பாரதிதாசன், தமிழை அழிப்பவரை, சிதைத்துச் சீரழிப்பவரைக் கண்டு கொதித் தெழுகின்றார். இந்தத் துறையில்தான் என்றில்லை;

எல்லாத் துறைகளிலும் தமிழையும் தமிழின் வளத்தையும் அழிக்கத் துணிந்துவிட்டனர். இச்சீர்கேட்டை எண்ணி எண்ணிப் பாவேந்தர்,

*"கரும்புதந்த தீஞ்சாறே கனிதந்த நறுஞ்சுளையே*
*கவின்செய் முல்லை*
*அரும்புதந்த வெண்ணகையே அணிதந்த சொந்தமிழே*
*அன்பே, கட்டி*
*இரும்புதந்த நெஞ்சுடையார் துறைதோறும் நின்னெழிலை*
*ஈட ழித்து*
*வரும்புதுமை நினைக்கையிலே நெஞ்சுபதைக் கும்சொல்ல*
*வாய்ப தைக்கும்"*
*(தமிழியக்கம், ப.1)*

என்று மனம் நொந்து கூறுவது நம் உள்ளத்தையும் நடுங்குமாறு செய்கிறது. தமிழ்ச் சமுதாயத்தில் வாழும் வணிகர், அரசியல் நடத்துவோர், புலவர்கள், இவர்கள் யாவரும் தமிழால் உயர்ந்தனர். ஆனால் தாம் உயர்வதற்குக் காரணமான தமிழைப் பற்றிச் சிறிதும் கவலைகொள்வதில்லை என்று ஏங்கிய பாவேந்தர் இத்தகையோர் இறத்தலே நன்று என்றும் கடிந்து கொள்கின்றார்.

*"வாணிகர்க்கும் தமிழென்றால் வெறுப்புண்டோ?*
*அரசியல்சீர் வாய்க்கப் பெற்றோர்*
*ஆணிகர்த்த பேடிகளோ? அரும்புலவர் ஊமைகளோ?*
*இல்ல றத்தைப்*
*பேணுமற்ற யாவருமே உணர்வற்றுப் போனாரோ?*
*பெருவாழ்வுக்கோர்*
*ஏணிபெற்றும் ஏறாத தமிழர்உயிர் வாழ்வதிலும்*
*இறத்தல் நன்றே!" (மேலது, ப.3)*

என்று பாவேந்தர் கடுமையாகச் சாடுகின்றார். பாரதிதாசன் வாழ்ந்த நாளில் இருந்த மக்களின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாகத் தமிழியக்கப் பாடல்கள் அமைந்துள்ளன. இளைய தலைமுறையினருக்குப்

பாவேந்தர் உயர்தமிழைப் போற்றும் உணர்வை அறிவுறுத்துகின்றார் பின்வரும் படலில்:

*"எதுசெய்ய நட்டுக்கே எனத்துடித்த சிங்கமே!*
*இன்றே, இன்னே,*
*புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய் புத்துணர்வைக்*
*கொணர்வாய் இங்கே*
*அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்*
*அழகு காப்பாய்!*
*இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம்*
*எழுக நன்றே!*
*(மேலது, ப.6)*

இப்படி இளையதலைமுறைக்கு வழிகாட்டிய பாவேந்தர், நம் தமிழகத் தெருக்களில் தமிழைத் தவிரப் பிறமொழிக் கலப்பு நிறைந்த விளம்பரப் பலகைகளைப் பார்த்து நெஞ்சம் குமுறுகின்றார். அவர்தம் நெஞ்சக்குமுறல் இன்னும் தீரவில்லை; தமிழ்க்கொலை செய்வோர் பெருகி விட்டனர் என்பதே இன்றைய உண்மைநிலை! தமிழ்த்தெருக்களில் பாவேந்தர் கண்ட தமிழ்க்கொலை பற்றி அறிந்து கொண்டால் அவருடைய தமிழுணர்வின் ஆழமும் அகலமும் நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

கோவைமாநகர் வீதிகளிலே பேரூரடிகளும் தமிழ்ப்பற்றாளர்களும் தாமாகவே முன்வந்து வணிகநிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை நல்லதமிழில் எழுதுமாறு வேண்டினர். அதன் விளைவாக 1970-க்களில் கோவைத் தெருக்களில் நல்லதமிழில் பெயர்ப்பலகைகள் எழுதப்பட்டிருந்தன. (Backery – அடுமனை; Agency - முகவாண்மையகம்; Bus stop - பேருந்து நிறுத்தம்; Theatre: திரையரங்கு; Hotel: உணவகம்; Sweet Stall: இன்சுவையகம் என...) ஆனால் இன்று முந்தைய கலப்பு நிலையையே காணமுடிகின்றது. இங்கே பாரதிதாசன் தமிழியக்கத்தில் 'வாணிகர்' என்ற தலைப்பில் தம் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

*"உணவுதரு விடுதிதனைக் 'கிளப்'பெனவேண் டும்போலும்1*
*உயர்ந்த பட்டுத்*
*துணிக்கடைக்கு 'சில்க்ஷாப்' எனும் பலகை*
*தொங்குவதால் சிறப்புப் போலும்!*
*மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை தோப்பில்*
*நிழலா இல்லை?*
*தணிப்பரிதாம் துன்பமிது தமிழகத்தின் தமிழ்த்தெருவில்*
*தமிழ்தா னில்லை!*
*'பவன்' 'மண்டல்' முதலியன இனியேனும் தமிழகத்தில்*
*பயிலா வண்ணம்*
*அவண்சென்று முழங்கிடுவீர்! ஆங்கிலச்சொல் இந்திமொழி*
*வடசொல் யாவும்*
*இவண்தமிழிற் கலப்பதுண்டோ?......................."*
*(தமிழியக்கம், ப.9)*

என்று கோடையிடியென முழுங்குகின்றார். இத்தகைய பிழைகளையும் தமிழ்க்கொலைகளையும் தடுக்க ஒரே வழி தமிழியக்கப் பாடல்கள் இளம் வயதுடையோர் பயிலும் கல்வி நிலையங்களில் கட்டாயம் கற்பிக்கப் படல் வேண்டும். தமிழுணர்வுடையாரும் தமிழ்ப்பற்றுடைய ஆசிரியப் பெருமக்களும் தாமே முன்வந்து பாவேந்தர் எண்ணத்தை நடைமுறைப்படுத்தினால் தமிழின் நிலை உயரும்; ஓங்கும்! இதற்குப் பாரதிதாசன் கூறிய வழி இதோ:

*"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய்*
*வருதல் வேண்டும்*
*தமிழ்ப்பகைவன் முதலமைச்சாய்த் தமிழ்நாட்டில் வாராது*
*தடுத்தல் வேண்டும்.*
*நமைவளர்ப்பான் நந்தமிழை வளர்ப்பவனாம்! தமிழல்லால்*
*நம்முன் னேற்றம்*
*அமையாது .............. ............ (மேலது, ப.15)*

என்று மிக ஆணித்தரமாகப் பாரதிதாசன் கூறும் கருத்து இன்னே - இப்போதே செயல் வடிவம் பெறுமானால் தமிழ்நிலை உயரும்! தமிழன் நிலை வளர்ந்தோங்கும்!

சங்க இலக்கியங்களையும் தமிழ்க்காப்பியங்களையும் ஏட்டுச் சுவடிகளிலிந்து அச்சேற்றி நூல்களாகத் தந்த பெருமை தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரையே சாரும். அவர் பல ஏடுகளையும் ஒப்பிட்டுச் சரிபார்த்துப் பிழைஇல்லாச் சிறந்த பதிப்பாக வெளியிட்ட பெருமைக்குரியவராவார். அவர் நன்கு பரிசோதித்துப் பதிப்பித்தார். ஆனால் அவராக ஏதும் பதிப்பித்த ஏடுகளில் திருத்தினாரில்லை! ஆயின் கம்பராமாயணப் பாடல்களைப் பரிசோதித்துப் பல ஆயிரம் பாடல்களை நீக்கிவிட்டுச் சில ஆயிரம் பாடல்களைக் 'கம்பர் தரும் இராமாயணம்' என்று பதிப்பித்தார் இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அக்காலத்தில். இப்பதிப்பைக் கண்ணுற்ற பாரதிதாசன்,

*"கம்பனார் பதினோரா யிரம்பாட்டில் முக்காலும்*
*கழித்துப் போட்டு*
*நம்பினால் நம்புங்கள் இவைதாம் கம்பன்செய்யுள்*
*எனஅச் சிட்டு*
*வெம்புமா றளிக்கையிலும் மேவாத செய்ல்இதனைச்*
*செய்ய இந்தக்*
*கொம்பன் யார்எனக் கேட்க ஆளில்லையா புலவர்*
*கூட்டந் தன்னில்?" (மேலது, ப.19)*

என்று வேகமாகக் கொந்தளித்துக் கொதித்துக் குமுறுவது சொற்களாய் வெளிவருகின்றது. இம்மட்டோ! புலவர் பெருமக்களுக்குப் பாவேந்தர் அறிவுரையும் கூறியுள்ளார். தமிழ்ப்புலவர்கள் வெற்றுச் சொல்லடுக்கிலும், வெறும் சோற்றுக்கும், காசுக்கும் எனத் தம் புலமையை விற்றுப் பிழைக்கும் இழிந்த நிலையை வேருடன் களைந்தெறிய எண்ணிய பாவேந்தர்,

*"புதுநூற்கள் புதுக்கருத்தால் பொதுவகையால்*
*தரவேண்டும் புலவ ரெல்லாம்*
*சோற்றுக் கென்றொருபுலவர் சாஸ்திரமும் தமிழ்என்றே*
*பேசி நிற்பார்!*
*நேற்றுச்சென் றார்நெறியே நாம்செல்வோம் எனஒருவர்*
*நிகழ்த்தா நிற்பார்!*

*காற்றிற்போம் பதராகக் காட்சியளிக் கின்றார்கள்*
*புலவர் சில்லோர்!"*
*(மேலது, ப.18)*

என்ற உண்மைநிலைய எடுத்துக் காட்டித் திருத்த முனைவார். பாவேந்தர் சுயமரியாதை மற்றும் கடவுள் மறுப்புக் கொள்கைவழி நின்றவர்; என்றாலும் தமிழுக்குக் கேடு வருமென்றால் தலையிட்டுக் கிளர்ச்சி செய்வது அவருடைய இயல்பாய் இருந்தது. இதனை மெய்ப்பிக்கும் வகையில் பாவேந்தர்,

*"சொற்கோவின் நற்போற்றித் திருஅகவல் செந்தமிழில்*
*இருக்கும் போது*
*கற்கோயில் உட்புறத்தில் கால்வைத்த தெவ்வாறு*
*சகத்ர நாமம்?*
*தெற்கோதும் தேவாரம், திருவாய்நன் மொழியான*
*தேனிருக்கச்*
*சொக்காடும் இரைச்சலென வேதபாரண யன்மேன்*
*திருக்கோ யில்பால்?"*
*(மேலது, பா.24)*

என்று பரிந்து பேசுவதால் அவரின் சமயம் கடந்த தமிழுணர்வு வெளிப்படும்! மேலும் அவர் கணக்காயர்களுக்கு – ஆசிரியர்களுக்கு - வேண்டுகோள் விடுக்கின்றார் இதோ:

*"தமிழ்ப்புதுநூல் ஆதரிப்பீர்! தமிழ்ப்பாட்டை ஆதிரிப்பீர்!*
*தமிழர்க் கென்றே!*
*(மேலது, ப.30)*

என்று வேண்டுகின்றார். இவ்வாறு குடும்பத்தாரையும், மாணவர்களையும், அறநிலையத்தாரையும், விழா நடத்துவோரையும் வியந்தும் நயந்தும் பாவேந்தர் வேண்டுகின்றார். இன்றைய மாணவர் உலகம் ஆங்கிலவழிக் கல்வியைப் பெரிதும் விரும்புதல் கண்கூடு. பிறமொழியைக் கற்பதனைப் பாரதிதாசன் எதிர்க்கவில்லை! ஆனால் தாய்மொழியாம் தமிழை உயிராய்ப் போற்றும் வண்ணம் மாணவர்களிடம் வேண்டுகின்றார்.

*"ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயல்மொழியைக்*
*கற்கையிலும்*
*தீங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின் பொன்னேட்டை*
*உயிராய்க் கொள்வீர்!"*

................ ................... ............. ..........

*இம்மையளவும் சோம்பின்றி எவனுக்கும் அஞ்சாது*
*தொண்டு செய்வீர்!*
*சுமைஉங்கள் தலைமீதில் துயர்போக்கல் உங்கள்கடன்!*
*தூய்தின் வாழ்க!*
*(மேலது, ப.31)*

என்று எதிர்கால உணர்வுடன் மாணாக்கர்தம் கடமையைத் தெளிவுறுத்துவார். மாணவர்களைப் போலவே, பாடகர்களையும், கூத்தர்களையும், பாட்டியற்றும் பாவலர்களையும் வேண்டுவார். பாடல்கள் என்றால் ஆரியம்தான் தெலங்குதான் என்று அறைவோரை இனம் காணவேண்டும் என்பார்.

*"தமிழிசைப்பாட் டியற்றுபவர் தமிழர்களாய் இருந்தால்தான்*
*தமிழ்த் தென்பாங்கில்*
*அமைவுபெறும்" (மேலது, ப.37)*

என அறிவுறுத்துவார். இன்று தமிழ் ஏடுகள்-அவை நாளேடுகளோ, வாரஏடுகளோ, திங்களேடுகளோ - எதுவாக இருந்தாலும் தமிழை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஒற்றுமிக வேண்டாத இடத்தில் மிகுமாறு எழுதுவதும். (எ.டு) "அமைச்சர் வந்துக் கொண்டிருந்தார், "உயரதிகாரி நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டார்; ஒற்று மிகவேண்டிய இடத்தில் மிகாதவாறும் (எ.டு):"வணிகவளாகத்தை - திறந்து வைத்தார்" என்று எழுதுவதும் ஏடுகளின் வழக்கமாகிவிட்டது. அதுபோல் பன்மையில் தொடங்கி ஒருமையில் தொடரை முடிப்பதும் (எ.டு) சில வாரங்களாக இந்தியக் கப்பல்கள் விபத்துக்கு உள்ளாகிறது" (உள்ளாகின்றன) "பல வாக்குச் சாவடிகள் அடிப்படை வசதிகள் உள்ளதா (உள்ளனவா) என்று சோதித்துப் பார்க்கப்படடது (பட்டன)" இத்தகைய பிழை வழக்குகளையே

ஏடு படிப்போர் பின்பற்றுகின்றனர். இவற்றை எல்லாம் நன்கு கவனித்த பாவேந்தர் இவற்றினால் வரும் கேடுகளைச் சுட்டிப் பேசவும் தவறில்லை!

*"இலக்கணமும் இலக்கியமும் தெரியாதான் ஏடெழுதல்*
*கேடு நல்கும்*
*தலைக்கணையில் நெருப்பிட்டுத் தலைவைத்துத்*
*துயில்வதுபோல் பகைவனைப் போய்*
*நிலைப்புற்ற தமிழ்ஏட்டின் ஆசிரியனாக்குவது*
*நீங்க வேண்டும்" (மேலது, ப.43)*

இப்படி எல்லா நிலைகளிலும் எல்லா இடங்களிலும் தமிழுக்கு முதன்மைதரல் வேண்டும் என்று பாவேந்தர் வலியுறுத்திச் சொல்வார். பாவேந்தரின் தனித்தமிழ்ப்பற்றும் இங்கே கருதத்தகும் ஒன்றாகும்.

"பெரியாரின் தன்மான இயக்கக் கருத்துக்கள் பாரதிதாசனைக் கவர்ந்தது போலவே, மொழித்துறையில் மறைமலையடிகளாரின் 'தனித்தமிழ்' இயக்கம் அவரை ஆட்கொண்டது, தொடக்க காலத்தில் பாரதிதாசன் தனித்தமிழ் நடையில் எழுத வேண்டும் என்று எண்ணியதில்லை. அவருடைய முதற்றொகுதிக் கவிதைகளில் 'பர்வதம்', 'பிரசங்கம்', 'சந்தோஷம்' 'விஸ்வரூபம்', 'கவிராஜன்', 'அர்ப்பப்பணம்', 'வேஷம்', 'கரகோஷம்', 'மானுஷிகம்', 'ராஜங்க பொக்கிஷம்', 'அரசப் பிரதானியார்', அராஜகம்........ போன்ற வடமொழிச் சொற்கள் இருந்திடக் காணலாம். மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கம் கவிஞரைக் கவர்ந்த பின்பு அவருடைய பிற்காலக் கவிதைகள் தூயதமிழில் வெளிவரலாயின. தனித்தமிழில் எழுத வேண்டுமென்பது அவருடைய கொள்கையாகவும் ஆயிற்று"

"குடும்ப விளக்கின் இரண்டாம் பகுதியாகிய 'விருந்தோம்பலை'த் தன்னைத் தனித்தமிழ் வழிக்கு இழுத்த மறைமலையடிகளார்க்குப் படையலாக்கி நன்றியைத் தெரிவிக்கிறார். 'இன்றைக்கு முப்பதாண்டின் முன் தொடங்கியே தனித்தமிழில் நூல் எழுதிக்காட்டியும். தனித்தமிழே வேண்டும் என்னும் கருத்தை ஊட்டியும் வரும் நிறைதமிழ் ஆய்ந்தார்

மறைமலையடிகளின் திருமுன் இதைப் படைக்கிறேன் என்பது அவருடைய படையலுரை. தனித்தமிழில் எழுத வேண்டுமென்ற ஆர்வம் அவர்பால் பொங்கியெழுந்தமையை மேலுள்ளவை காட்டுகின்றன" (தமிழ் இலக்கியக்கொள்கை தொகுதி, 3, பக்.317-318) என்று சிலம்பொலி செல்லப்பன் கூறுவது கருத்தில் கொள்ளத்தகும்.

*"கெடல் எங்கே தமிழின் நலம்*
*அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க"*
*(தமிழியக்கம், ப.52)*

என்று உரத்த குரல் கொடுத்ததும் தமிழ் நலம் கருதியன்றோ! பாவேந்தரின் எண்ணம்,

*"தமிழ், தமிழினம், தமிழிலக்கியம் இவற்றில்*
*ஒன்று போம்எனில், மற்றவும் ஒழியும்"*
*(குறிஞ்சித்திட்டு, ப.312)*

என்று மலர்கின்றது. தமிழ்ப் புலவர் தமிழாக — தமிழ்ப்பற்றுடையார் தமிழாக மட்டும் இருந்தால் போதாது; நம் தமிழ் மக்கள் யாவரும் அறிந்தின்புறும் தமிழாக - பாமரர் தமிழாக - மாறவேண்டும் என்று பாவேந்தர் விழைந்தார். அவ்விருப்பத்தின் வெளிப்பாடு,

*"அரசினரின் மொழியாக அரசியலார் மொழியாக*
*அரசியல்சார்*
*வரிசையுறு சட்டமன்றின் மொழியாக, வையம்அறி*
*மொழியதாகத்*
*திருமலிந்த தமிழ்மொழிதான் ஆகும்வரை நம்புலவர்*
*சேர்ந்து தொண்டு*
*புரிகஎன வேண்டுகிறோம்........."* *(தமிழியக்கம், ப.24)*

என வரும் பாடலாகும். எளியதமிழில் எல்லோராலும் எளிதில் எவ்விதமான உரையும் இல்லாமல் விளங்கிக் கொள்ளுமாறு பாடல்கள் அமைதல் வேண்டும் என்று பாவேந்தர் எண்ணினார்; அவ்வாறே பாடல்களையும் அவர் இயற்றினார். கவிஞர் சுரதாவின் குறிப்பு ஒன்று இங்கே இணைத்துக் காண்பதற்கு உரியதாகும்.

"அது (பாஞ்சாலி சபதம்) எழுதப்பட்டிருந்தமுறை எனக்கு வியப்பைத் தந்தது. அதன் எளிமையைக் கண்டு திகைத்தேன். அன்றுமுதல் பாரதியின் எளிமையான நடையைப் பின்பற்ற முடிவு செய்தேன். அந்தக் கவிதைகளைப் படித்திருக்காவிட்டால், நான் இவ்வளவு எளிமையாகக் கவிதைகளை எழுத நினைத்திருக்க மாட்டேன் என்று, பின்னர் இந்த நிகழ்ச்சியைப் பற்றித் தன்னிடம் பாரதிதாசன் சொன்னதாகக் குறிப்பிட்டார் கவிஞர் சுரதா" (ஆனந்த விகடன், ப.63, 7.1.1968, துணுக்குச் செய்தி).

செந்தமிழைச் செழுந்தமிழாய் ஆக்க வேண்டும் என்று கருதிய பாவேந்தரின் தமிழ்க்கொள்கை விளக்கமாக — அடித்தளமாக அமைவது,

*"கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்*
*கண்டதைமேற் கொண்டெழுதிக் கட்டுரையாக் குங்கால்*
*தெருத்தூற்றும்; ஊர்தூற்றும்; தம்முளமே தம்மேற்*
*சிரிப்பள்ளித் தூற்றும்!நலம் செந்தமிழ்க்கும் என்னாம்?*
*தரத்தம்மால் முடிந்தமட்டும் தரவேண்டும் பின்னால்*
*சரசரெனக் கருத்தூறும் மனப்பழக் கத்தாலே!*
*இருக்கும்நிலை மாற்றஒரு புரட்சிமனப் பான்மை*
*ஏற்படுத்தல், பிறர்க்குழைத்தல் எழுத்தாளர் கடனாம்'*
*(பா.கவி. இரண்டாம் தொகுதி, ப.109)*

என வரும் பாடலே ஆகும்.

பாரதியையும், பாரதிதாசனையும் ஒப்பிட்டுக்காட்ட முனைந்த கவிரசர் கண்ணதாசன்,

*"செந்தமிழ் மலரின் தேனுண்ண வாசலைத்*
*திறந்து விட்ட தலைவன் பாரதி!*
*திறந்த வாசலின் வழிப்புறம் மாடுகள்*
*செல்லாது காத்தவர் பாரதி தாசன்!*
*வகுத்தவன் முன்னோன்; காத்தவன் பின்னோன்*
*வாழும் தமிழின் காவலர் இவர்கள்"*
*(கண்ணதாசன் கவிதைகள்-1, ப.150)*

எனப்போற்றுவார். ஆம்! பாரதிதமிழ் உணர்ச்சியை ஊட்டினார்; பாரதிதாசன் தமிழ்க் காப்புணர்ச்சியை ஊட்டினார் என்பதில் ஐயமில்லை! இவ்வுணர்வு

*"தாய்மொழித் தமிழைத் தனித்தமிழாக்கித்*
*தாயகம் முடிதர வேண்டும்"*
*(கண்ணதாசன் கவிதைகள்-1, ப.302)*

என்று கவியரசு கண்ணதாசனிடமும் தாக்கத்தை ஏற்படுத்திற்று.

*"பாரதி பாரதிதாசன் - இரு*
*மைந்தமிழ்ப் பாவலர் தம்மிடை யேயும்*
*பாரதி பல்லவி சொன்னான் - தாசன்*
*பாக்கியைப் பாடித்தன் பாட்டை முடித்தான்"*
*(மேலது, தொகுப்பு-2, ப.153)*

பாரதிதாசனின் உணர்வை "பாரதிதாசனார் கவிச்சாறு, சாற்றின் இனிமையினைச் சொல்லுதற்கும் வெல்லுதற்கும் சொல்இல்லை. ஆம்! இருபதாம் நூற்றாண்டின் தனிப் பாவலன்; தறுகண்மைப் படைதன்னைச் செலுத்தும் ஏவலன்; பாவலனின் தனித்தலைமைக் காவலன் பாவேந்தன்! சுவை அவன் வடிவம்; உணர்ச்சி அவன் வடிவம்; காதல் அவன் வடிவம்; முடிவாகச் சொன்னால் சுவைமிக்க செந்தேனாம் நந்தமிழே அவன் வடிவம், ஆண்மை கொண்டு அவன் வடிவில் தமிழ் பிறந்தது; தமிழ் அவன்; அவன்தமிழ்!" (பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும், ப.3) என்று என்னுடைய நூலில் 1968-இல் சொன்னதனை மீண்டும் சொல்லி மகிழ்கின்றேன்.

பாவேந்தர் பாரதிதாசன் தமிழின் ஆழத்தைக் கவிதையில் காட்டியவர்! கவிதைச் சிறையிலே விலங்கிட்டுப் பூட்டியவர்! இளைஞர்களுக்கும் இனிய தமிழ் மக்களுக்கும் தமிழின் பெருமையை உணர்த்தித் தமிழ்க் காப்புணர்ச்சியை ஊட்டியவர்; தமிழுக்குக் கேடு செய்வாரை ஒடுக்கப் பாடல்கள் பல தீட்டியவர்! தமிழியக்கம் படைத்துத் தமிழன்னைக்கு மகுடம் சூட்டியவர்!.

மொழி நம் விழி என்பதால் மொழிக்காப்புணர்ச்சியைச் சமகாலக் கவிஞர்களுக்குப் பெரிதும் வலியுறுத்தினார். தமிழ் வளர்ந்தால்; தமிழன் வளர்வான், வாழ்வான். எனவே இந்த நம்பிக்கையைப் பாவேந்தர் தம் கவிதைகளின் வாயிலாக வலியுறுத்தினார்.

*"தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி*
*தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ் மக்கள்,*
*தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே*
*தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!*
*தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழ னுக்குத்*
*தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!*
*தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை*
*தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?"*

என்று கேட்டுவிட்ட பாவேந்தர், பாழந்தமிழில் புதுமைகளைப் புகுத்திக் கன்னித் தமிழாகப் பேணிக்காத்தல் அறிஞர் கடனாகும் என்கின்றார்.

*"அந்நாளின் இலக்கியத்தை ஆய்தல் ஒன்றே*
*அரும்புலமை எனும்மடமை அகன்றதிங்கே!*
*இந்நாளிற் பழந்தமிழிற் புலமை ஏற்றி*
*எழுத்தெழுத்துக் கினிப்பேற்றிக் கவிதை தோறும்*
*தென்நாட்டின் தேவைக்குச் சுடரை யேற்றிக்*
*காவியத்தில் சிறப்பேற்றி, இந்த நாடு*
*பொன்னான கலைப்பேழை என்று சொல்லும்*
*புகழேற்றி வருகின்றார் – அறிஞர் வாழ்க!"*
*(பா.கவி. இரண்டாம் தொகுதி, பக்.103-104)*

என்னும் எதிர்காலவியல் பார்வை ஏற்றம்மிக்க பார்வையாக அமைகிறது. இங்குள்ள தமிழர் யாவரும் ஒன்றாயினராம். அதன் விளைவாக நடந்தவற்றைக் குயிலிடம் கூவுமாறு அவர் வேண்டுகின்றார். இதோ கூவுகிறது குயில்

*"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க*
*நந்தமிழர் உள்ளத்தில், வையம் நடுநடுங்கும்*
*வெந்தணல் ஒன்று விரைந் துவளர்ந்த தென்று*
*குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே."*
*(மேலது, ப.107)*

பாவேந்தர் காலத்தில் இருந்த நிலைமை இன்று மாறி, வேறுவேறு வகையான கேடுகள் - நிலைமைகள் தமிழுக்கு நேர்ந்து வருகின்றன. இவற்றை எண்ணும்போது, நம் நெஞ்சம் பதைபதைக்கின்றது; கண்களில் குருதி கொட்டுகின்றது. இன்றையச் சீர்கேட்டை எல்லாம் நேர்படுத்தப் பாவேந்தர் பாரதிதாசன் மீண்டும் பிறந்து வருமாறு நாம் வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை!

பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் இறுதியாக வரும் பாடல் 'தமிழ்' என்பதாகும்.

*"பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்*
*வையகம் போர்த்த வயங்கொலிநீர் – கையகலக்*
*கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு*
*முன்தோன்றி மூத்த குடி"*
*(புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தை, 14)*

என்று தமிழரின் தொன்மையை விளக்கவெண்பா வழி ஐயனாரிதனார் தெளிவுறுத்தியுள்ளார். பரிமேலழகரும் திருக்குறள் உரையில் பழங்குடி என்பதற்குத் தகுந்த விளக்கம் தருகிறார். பாவேந்தர் இவற்றை எல்லாம் உள்ளத்துள் நினைந்து அழகின் சிரிப்பு என்ற நூலின் இறுதியில் தமிழ், தமிழ்நாடு, தமிழர் இசை இவற்றின் தொன்மையைப் பின்வருமாறு கூறுகிறார்:

*"புனல்சூழ்ந்து வடிந்து போன நிலத்திலே 'புதிய நாளை'*
*மனிதப் பைங் கூழ்முளைத்தே வகுத்தது! மனித வாழ்வை,*
*இனிய நற்றமிழே நீதான் எழுப்பினை! தமிழன் கண்ட*

*கனவுான், இந்நாள் வையக் கவின்வாழ்வாய்*
*மலர்ந்த தன்றோ?" (அழகின் சிரிப்பு, ப.61)*

என்ற பாடி உறுதிப்படுத்துவார். இவர் வழிவந்த கவியரசு கண்ணதாசன்,

*"எங்கள் சமுதாயம் ஏழாயிர மாண்டு*
*திங்கள் போல்வாழ்ந்து செங்கதிர் போல் ஒளிவீசும்*
*மங்காத போர்க்களத்தும் மாளாத வீரர்படை*
*கங்குல் அகமென்றும் காலைப் புரமென்றம்*
*பொங்கி விளையாடிப் புக்ழேட்டிற் குடியேறித்*
*தங்கிநிலைத்துத் தழைத்திருக்கும் காட்சியினைக்*
*கண்காண வந்த கலைவடிவே நித்திலமே*
*பொங்கற்பால் பொங்கிப் பூவுதிர்ப்பாப் தைப்பாவாய்"*
*(தைப்பாவை, 17)*

என்று பழந்தமிழர் தொன்மையையும், வீரத்தையும், புகழையும் பாடி மகிழ்கின்றார்.

பாவேந்தர் அழகின் சிரிப்பிலும் தமிழை உயிர் என்று போற்றியுரைப்பார்.

*"வளர்பிறை போல் வளர்ந்த தமிழிரில் அறிஞர் தங்கள்*
*உளத்தையும், உலகில் ஆர்ந்த வளத்தையும் எழுத்துச்*
*சொல்லால்*
*விளக்கிடும் இயல்முதிர்ந்தும், வீறுகொள் இசை*
*யடைந்தும்*
*அளப்பிலா உவகை ஆடற் றமிழேநீ என்றன் ஆவி"*
*(அழகின் சிறப்பு, ப.64)*

என்பதே அவர் வாக்கு, தமிழுக்குப் படையின் வலிமை உண்டு என்பதனைப் பாரதிதாசன் பெரும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும உரத்த குரலில் கூறி, நம் தமிழ்மக்கள் உள்ளங்களை வீறுகொண்டு எழச்செய்கின்றார்.

*"இருளினை வறுமை நோயை இடறுவேன்; என்னு டல்மேல்*
*உருள்கின்ற பகைக்குன்றை நானொருவனே உதிர்ப்பேன்.*
*நீயோ*
*கருமான்செய் படையின் வீடு! நான் அங்கோர் மறவன்!*
*கன்னற்*
*பொருள்தரும் தமிழே நீ ஓர் பூக்காடு; நானோர் தும்பி"*
*(மேலது, 64)*

என்று கூறித் தமிழைக் காக்க வந்த படைவீரனாகவே தம்மைக் காட்டிப் பெருமிதம் கொள்வார்,

*"தமிழால், பாரதிதாசன் தகுதி பெற்றதும்*
*தமிழ், பாரதிதானால் தகுதி பெற்றதும்*
*என்னென்பேன் என்னென்பேன்!"*

என்று நாம் 'மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்து' வியக்கத் தோன்றுகின்றது.

## நல்லழகு வசப்பட்டவர்

பாவேந்தர் பாரதிதாசன் பாரதியாருடன் இணைந்து இயற்கையின் எழிலைக் கண்டு சுவைத்தவர். இயற்கை அழகிலே தம்மை மறந்து உள்ளத்தைப் பறிகொடுத்தவர். அவருடைய படைப்புகளில் இயற்கையின் எழில் பற்றிப் பலபடப் பாடியுள்ளார். இருப்பினும் அவர்தம் 'அழகின் சிரிப்பு' அவருடைய எண்ணத்தின் வண்ணத்தையும் வனப்பையும் சொல்லோவியமாக்கிக் காட்டுகின்றது. அந்நூலின் தலைப்பே நம்மை ஒரு கணம் மகிழ்ச்சியில் திளைக்குமாறு செய்கின்றது. அழகின் சிரிப்பின் சிறப்பைப் பேரா. தா.வே. வீராசாமி பெருமகழ்ச்சியுடனும் பெருமிதவுணர்வுடனும் பிறநாட்டுப் புலவர்களுடன் ஒப்பிட்டு வெளிப்படுத்துவதனை இங்கே கண்டு இன்புறுவோம்!.

"புதுச்சேரியில் வரலாற்றுப் போக்கின் விளைவாம் பிரஞ்சுச் சூழ்நிலையில் முகிழ்த்த இயற்கையோடுபட்ட நெறிமுறை (Naturalism) வளர்ச்சியில் அழகு பற்றிய கருத்து வளர்ந்தது. இக்கருத்து அவ்வூரில்

பிறந்த பாரதிதாசனையும் ஆட்கொண்டது. அவர் கண்ட அழகின் சிரிப்பில் கூர்தலறத்தின் (Evoution) சிறப்பைக் காண்கிறோம். மேலும் சமுதாயப் பொருளாதாரக் கூறுகளின் ஆற்றலையும் காண்கிறோம். அழகு பெற்றெடுத்துத் தந்த குழந்தையாக அன்பைப் பெறுகிறோம்.... ஹெர்பெர்டு ஸ்பென்சர் (Heorbert Spencer) என்ற மெய்யறிவாளர் 'உணர்ச்சிப் புலனும் வடிவப்புலனும் ஒன்று கலந்து தனி உணர்வாய் வெளிப்படுவதே அழகு' என்பர். இக்கருத்தை அடியொற்றிச் செல்வது போன்று புதுவைக் கவிஞர்,

*'வெள்ளைச்சிறு பிள்ளையாடும் பந்தோடு விளையாடிப் போய்க்*
*கிளிச்சிற காடைபற்றிக் கிழிக்கின்றாய் தென்றலே நீ'*

என்பார். இங்ஙனம் அழகு பற்றிய இயற்கையொடு பட்டநெறியில் வளர்ந்த பல கத்துக்களை இலைமறை காய்போல 'அழகின் சிரிப்'பிலே காண்கிறோம்" (பட்டறையிலே பாரதிதாசன், பக்.105-106).

பாவேந்தர் 'அழகின் சிரிப்பு' நூல் முன்னுரையில் "இயற்கை அனைத்தும் அழகே. அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும், கதரென்றும் சிரித்தது........ காணும் பொருளிலெல்லாம் அழகைக் காணவும், கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்யவும் திறம் பெறுதல் வேண்டும் தமிழர்கள்" என்று கூறுவதனால் அவருடைய நோக்கம் இனிதாகப் புலப்படும். இந்நூலில் அழகு, கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு, செந்தாமரை, ஞாயிறு, வான், ஆல், புறாக்கள், கிளி, இருள், சிற்றூர், பட்டணம், தமிழ் எனப் பதினாறு தலைப்புகளில் அழகைப் பாடி அவை யாவும் நம்மை நோக்கிச் சிரிப்பதாய்ப் பாடுகின்றார்.

"சங்க இலக்கியங்களான பத்தும் எட்டும் இயற்கைக் காட்சிகளின் பின்னணியினைப் பெற்று விளங்குகின்றன. அம்மரபு தமிழ் மரபு. அதனையும் போற்றியவர் இவர் என்பதற்குச் சான்று 'அழகின் சிரிப்பு' ஆகும். அதன் முதற் பாடலில் அழகின் அணி வகுப்பைக் காட்டுகின்றார். நெடுநல்வாடை, மலைபடுகடாம் என்பன போன்று அழகின் சிரிப்பு என்பதும் தொன்மரபு பேணிய பொன்மொழித் தொடராகும்." (பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும், ப.67)

*"திசைகண்டேன், வான்கண்டேன், உட்புறத்துச்*
*செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன். யாண்டும்*
*அசைவனவும் நின்றனவும் கண்டேன் மற்றும்*
*அழகுதனைக் கண்டேன்நல் லின்பங் கண்டேன்*
*பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண்!*
*பழமையினால் சாகாத இளையவள் காண்!*
*நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்*
*நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை"*
*(அழகின் சிரிப்பு, ப.5)*

ஆமாம்! அழகைக் காண்பதும் அதனைக் கண்குளிரக் கண்டு சுவைப்பதிலும் மனம் அமைதி கொள்ளும்! இன்பத்தில் துள்ளும்!

கடலும் இளங்கதிரின எழுச்சியும் நக்கீரர் பெருமானுக்கு நீல நிற மயில் மீது செவ்வேள் - முருகப்பெருமான் வருவதாகத் தோன்றிற்று:

*"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு*
*பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு*
*ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி*
*உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்*
*செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை*
*மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்."*
*(திருமுருகாற்றுப்படை: 1-6)*

ஆனால் பாரதிதாசனுக்கோ,

*"எழுந்தது செங்கதிர்தான் கடல்மிசை! ஆடடா எங்கும்*
*விழுந்தது தங்கத் தூற்றல் வெளியெலாம் ஒளியின்*
*வீச்சு!"*
*(அழகின் சிரிப்பு, ப.7)*

ஆகத் தோன்றியதொடு சமுதாய நல்லிணக்கக் கட்சியாகவும் அவருக்குப் பட்டது.

*"கடல்நீரும் நீலவானும் கைகோக்கும்" (மேலது, ப.8)*

என்று கூறித் தம் எண்ணத்தை வெளிப்படுத்துவார். தென்றலைப் பாடாத புலவர்கள் இருக்கவே முடியாது! தென்பொதிகை தந்தது இத்தென்றல். ஆம்! தெற்கிலிருந்து வீசுவது தென்றல் மட்டுமில்லையாம் பொதிகையிற் பிறந்த தமிழும் தென்றலும் இன்பம் அளித்தமையை அவர்,

*"கமுகொடு, நெடிய தென்னை கமழ்கின்ற சந்தனங்கள்,*
*சமைகின்ற பொதிகை அன்னை, உனைத்தந்தாள்;*
*தமிழைத் தந்தாள்;*
*தமிழ் எனக்ககத்தும், தக்க தென்றல்நீ புறத்தும், இன்பம்*
*அமைவுறச் செய்வதைநான் கனவிலும் மறவேன்*
*அன்றோ?"*
*(மேலது, ப.13)*

மலைகளில் மழை பொழிந்து; ஆற்றிலே புதுவெள்ளம் பெருக்கெடுத்துக் கரை புரண்டு ஓடியது. செம்புலப் பெயல் நீரைப் பெருவரவாய்ச் சிற்றூர் மக்கள் எதிர்பார்த்தனர். விசும்பின் துளி வீழ்ந்தது. பசும்புல் தழைக்கவும் பயிர் பச்சைகள் செழிக்கவும் ஆற்றில் வெள்ளம் பெருகியது. வெள்ளம் பெருகியதால் மக்கள் உள்ளம மகிழ்ந்தனர்; மகிழ்ச்சியால் நோய் நீங்கிற்று; வறுமை போயிற்றாம்!

*"நோய்தீர்ந்தார்! வறுமை தீர்ந்தார் நூற்றுக்கு நூறுபேரும்!*
*ஓய்வின்றிக் கலப்பை தூக்கி உழவுப்பண் பாடலானார்!*
*சேய்களின் மகிழ்ச்சி கண்டு சிலம்படி குலுங்க ஆற்றுத்*
*தாய்நடக் கின்றாள் வையம் தழைகவே தழைகஎன்றே"*
*(மேலது, ப.25)*

புதுவெள்ளப் பெருக்கைப் பாரதிதாசன் பாடுகிறபோது நமக்கு இளங்கோவடிகளின்,

*"உழவர் ஓதை மதகோதை உடைநீர் ஓதை தண்ப தங்கொள்*
*விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி"*
*(சிலம்பு. கானல்வரி, 86-861)*

எனப் பாடிய ஆற்றின் பெருக்கை நினைவூட்டுகின்றது.

*"வானம் மழை நீரால்*
*வாயைக் கொப்பளித்து*
*மோன இதழ்திறந்து*
*முறுவலிக்கும் பின்பொழுது" (மானிடகீதம், ப.44)*

என்னும் புதுக்கவிதையும் இவண் இணைத்துக்காணத்தகும். இன்னும் முக்கூடற் பள்ளு ஆசிரியர் காட்டும்,

*"உதைத்த விசைகொண் டெதிர்த்துக் கடலின்*
*உதரங் கீறி யதிரும் நீர்*
*உதய வரைகதும் பொதிகை வரைக்கும்*
*ஒத்துப் போம்படி முற்றும்பொய்.........*
*.............. ........... .................*
*பொருநை யாறு பெருகி வாற*
*புதுமை பாரும் பள்ளீரே"*
*(முக்கூடற்பள்ளு, பொருநை ஆறு)*

என்னும் வெள்ளக் காட்சி நம் நினைவிற்கு வருதல் இயல்புதானே! எழில் பெற்ற குன்றத்தில் நீல முக்காடு போட்டுக் கொண்ட நிலவுப்பெண் நன்கு வற்றும்படிக் காய்ச்சிய பாலிலே உறைமோர் ஊற்றிக் கடைந்தாள்; அப்பெண் தயிர் கடையும்போது பானையின் மேல் வெண்ணெய் படர்ந்திருக்கும்; அம்மேகக் கூட்டம் அள்ளிவீசி எறிந்த வெண்ணை போலக் காட்சியளிக்கின்றது கவிஞருக்கு.

மலர்களிலே தேனிருக்கும். அத்தேனை உண்டு மகிழ வண்டுகள் வரும். அது அன்றாடம் நாம் பார்க்கும் அழகிய காட்சி. பைந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் தமிழுணர்வைத் தந்து மகிழ்ந்தனர் அதுபோல வண்டுகளுக்குத் தேன் தந்தனவாம் தாமரை மலர்கள். இவ்வரிய கட்சியிலும் தமிழுணர்வைப் பாவேந்தர் மறக்கவில்லை!

*"மூடிய வாய்தி றந்து உளமார முன்னா ளெல்லாம்*
*தேடிய தமிழு ணர்வைத்தின்னவே பலர்க்கும் தந்தும்*

*வாடாத புலவர் போலே அரும்பிப்பின் மலர்ந்த பூக்கள்*
*வாடாது தேன்கொடுக்கும் வண்டுகள் அதைக் குடிக்கும்"*
*(மேலது, ப.28)*

முன்னாளில் வாழ்ந்த புலவர்கள் தேடிய தங்கள் தமிழுணர்வைப் பிறர்க்கும் கொடுத்து மகிழ்ந்தனர்; ஆனால் இந்நாளில் அப்படி இல்லையே என்ற வருத்தம் பாவேந்தருக்கு இருந்துள்ளமையினை இக்குறிப்பிலிருந்து நாம் உணர ஒண்ணும்!

*"பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சிலிர்க்கும்*
*சிங்கமே! வானவீதி திருதிரு எனஎ ரிக்கும்*
*மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த*
*தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவிளக்கே"*
*(மேலது, ப.31)*

என்று ஞாயிற்றைப் போற்றும் பாவேந்தர் 'ஒளியின் செல்வன்' என்றும், 'நிறை மக்கள் வாழ்த்தும் வெய்யோன்' என்றும் அடுக்கிச் சொல்லும் மிடுக்கு நம்மை வியக்க வைக்கின்றது.

பாரதிதாசன் இயற்கையின் எழில் மிகுந்த காட்சிகளைப் பாடும்போதும் தமிழையும், தமிழ் உணர்வையும், மேல்கீழ் என்னும் வேற்றுமை அகலவும், தொழிலாளர் நலனையும் வாய்ப்பு வரும் இடங்களில் பாடினார்; அவருடைய எண்ணத்தை எடுத்துக்கூறத் தவறுவதில்லை! இதோ அப்படி ஒரு கொள்கையைப் பாவேந்தர் வானைப் பற்றி வருணிக்கும் இடத்தில்,

*"எத்தனை பெரியவானம்! எண்ணிப்பார் உனையும் நீயே!*
*இத்தரை, கொய்யாப் பிஞ்சு; நீஅதில் சிற்றெறும்பே*
*அத்தனை பேரும்மெய்யாய் அப்படித்தானே மானே?*
*பித்தேறி மேல்கீழ் என்று மக்கள்தாம் பேசல் என்னே!"*
*(மேலது, ப.37)*

என்று பறைசாற்றுகின்றார். இளஞ்சிறுவர்களும் பூமிப்பந்தைத் தெரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையாய் விளக்கிப் போகும் பாவேந்தரின்

திறன் வியக்குமாறுள்ளது. பெண்களின் உரிமையைப் போற்றிப் பாடிய பாரதியின் வழியில் பாவேந்தரும் முனைந்து குரல் கொடுத்துள்ளார். அன்றிலைப் பற்றிக் கூறும்போது ஒன்று இறந்துவிட்டால் மற்றொன்று உயிர் வாழாது என்பர். அதே போல் பெண்ணினத்திற்கு முதன்மை தந்து போற்றவேண்டும் என்னும் கருத்தைச் சங்கத்தமிழச் சான்றோர் வலியுறுத்திப் பாடியுள்ளனர். நீர்வேட்கையினால் துன்புறும் பெண்யானைக்கு வழிவிட்டுத் தண்ணீர் அருந்துமாறு விட்டுக்கொடுத்த களிற்றின் காட்சியைக் கலித்தொகை கூறும்.

*"பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவே சென்றார்"*
*(கலித்தொகை)*

என்பதே அக்காட்சி. அதனைப் போல் பாவேந்தரும் கிளிக்காட்சியைக் கூறி நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றார்.

*"கொத்தான பழக்குலைக்குக் குறுங்கிளை தனில்*
*ஆண்கிள்ளை*
*தொத்துங்கால் தவறி, அங்கே துடிக்குந்தான் பெட்டை*
*யண்டைப்*
*பொத்தென்று வீழும்; அன்பிற் பிணைந்திடும்;*
*அருகில் உள்ள*
*தித்திக்கும பழங்கள் அக்கால் ஆணுக்குக்*
*கசப்பைச் செய்யும்!"*
*(அழகின்சிரிப்பு, ப.40)*

அஃறிணை உயிர்கள்கூடப் பெண்மையைப் போற்றுகின்றன என்றால் உயர்திணை சார்ந்த மக்கள் பெண்மையைக் கட்டாயம் போற்ற வேண்டுமல்லவா? என்று மறைமுகமாக மக்களுக்குப் பாவேந்தர் உணர்த்திவிடுகிறார். இதே போன்று புறாக்களிடமிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய பாடம் குறித்தும் பாவேந்தர் பேசுகின்றார். புறாக்களின் ஒழுக்கம் இதோ:

*"ஒரு பெட்டைதன் ஆணைஅன்றி வேறொன்றுக்*
*குடன்படாதாம்;*
*ஒரு பெட்டை மத்தாப் பைப்போல் ஒளிபுரிந்திட நின்றாலும்*
*திரும்பியும் பார்ப்பதில்லை வேறொரு சேவல்! தம்மில்*
*ஒருபுறா இறந்திட்டால்தான் ஒன்று மற்றொன்றை நாடும்'*
*(மேலது, ப.43)*

இந்தப் புறாக்கள்,

*"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி" (குறள், 137)*

என்னும் குறள்நெறியைப் பின்பற்றி நடந்தன போலும்! புறாக்களின் 'பிறன்மனை நோக்காத பேராண்மை' மக்கட் சமுதாயத்திற்கு ஒரு படிப்பினையாகும். இருளைப் பற்றிப் பேசவந்த திருவள்ளுவர் 'பசப்புறுபருவரல்' அதிகாரத்தில்,

*"விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்*
*முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" (குறள், 1186)*

எனக் குறிப்பிடுவார். பாவேந்தர் இருளின் பெருமையைப் பேசுகின்றார். 'அறியாமைதான் இருள். ஆனால் திருடனைத்தேள் கொட்டியது போல் வீட்டுச் சிறுவனைத் தேள் ஒன்று கொட்டத் தீப்பெட்டியைத் தேடமுனைந்தனராம் வீட்டிலுள்ளோர். அதற்குள் அத்தேள் எட்டுப் பேரைக் கொட்டிற்று இருட்டில் தேடியபோது. இதன் முடிவில் பாவேந்தர்,

*"கட்டாயம் தூய்மை வேண்டும் என்னுமோர் அறிவுதன்னை*
*இட்டளித்திட்ட நல்ல இருளே உன் பெருமை என்னே!"*
*(அழகின் சிரிப்பு, 53)*

என்று இருளின் பெருமையைப் பேசுவார்.

நம் தமிழகச் சிற்றூர்களின் அழகே அழகு. இன்று உலகமயமாக்கப்பட்டு வேளாண் நிலங்கள் யாவும் பசுமைப்பயிர்கள்

விளைவதற்கு மாறாகக் கற்களின் கட்டடங்களாக முளைத்து ஓங்கி வளாந்து நிற்கின்றன. ஒரு பக்கம் பெரிய குளமும் மறுபக்கம் பச்சைப் பசேலெனப் பச்சைப்பட்டு விரித்தாற் போலத் தோன்றும் வயல்களும் இவற்றுக்கு நடுவே செல்லும் சிற்றூரின் சாலைகளும் நம்மனத்தில் ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தி இன்பம் தரும்.

*"சேரிக்குப் பெரிது சிற்றூர் தென்னைமா சூழ்ந்திருக்கும்;*
*தேர் ஒன்று, கோயில் ஒன்று சேர்ந்த ஓர் வீதி, ஓட்டுக்*
*கூரைகள், கூண்டுவண்டி, கொட்டில்சேர் வீதி ஐந்தே;*
*ஊர்இது நாட்டார்க்கெல்லாம் உயிர்தரும்*
*உணவின் ஊற்று.*
*நன்செயைச் சுற்றும் வாய்க்கால் நல்லாற்றுநீரை வாங்கிப்*
*பொன்செயும் உழவு செய்வோன், பொழுதெலாம்*
*உழவு செய்தேன்*
*என்செய்தாய்' என்ற பாட்டை எடுத்திட்டான்;*
*எதிரில் வஞ்சி*
*முன்செய்த கூழுக் கத்தான் முடக்கத்தான்*
*துவையல்' என்றாள்"*
*(மேலது, ப.57)*

சிற்றூருக்கு மாறான பரபரப்பு நிறைந்த பட்டணத்தையும் பாவேந்தர் நம் கண்முன் கவிதைக்குள் காட்டியுள்ளார். பேரிரைச்சலும், தலை தெறிக்க வேலைக்குப் போகும் இருபாலரின் பதற்றமும், பள்ளிக்குச் செல்வோரின் பதைபதைப்பும், அடுத்த வீட்டுக்காரர் யார் என்பது கூடத் தெரியாத மக்கள் நிறைந்து வாழும் பட்டணம் பற்றிப் பாவேந்தர், தெளிவுறக் கூறுகின்றார். பல்வேறு வகைத் தெருக்கள், வேலைப்பாடுகள் நிறைந்த கட்டங்கள், புகையின் வண்டி, நடைபாதைகள், தானே இயங்கிடும் ஊர்திகள், கப்பல்கள், சிட்டுக்களைப் போல் பறக்கும் படைவீரர், வணிக நிறுவனங்கள் இப்படிப் பல வளர்ச்சி நிலைகளை எல்லாம் அடுக்கிச் சொல்லிவிட்டு நகரத்தில் வாழும் கம்கள், வழக்கறிஞர் ஆகியோர்தம் உள்ளங்களையும் சொல்லி உண்மைநிலையைத் தெளிவுறுத்தியுள்ளார்.

*"உள்ளத்தை ஏட்டால் தீட்டி உலகத்தில் புதுமை சேர்க்கும்*
*கொள்கைசேர் நிலையமெல்லாம்அறிஞரின்*
*கூட்டம் கண்டேன்*
*கொள்கை ஒன்றிருக்க வேறு கொள்கைக்கே*
*அடிமையாகும்*
*வெள்ளுடை எழுத்தாளர்கள் வெறுப்புறும்*
*செயலும் கண்டேன்*
*உண்மைக்கும் பொய்க்கும் ஒப்பும் உயர்வழக்கறிஞர்*
*தம்மை*
*விண்வரை வளர்ந்த நீதிமன்றத்தில் விளங்கக் கண்டேன்;*
*புண்பட்ட பெருமக்கட்குப் பொதுநலம் தேடுகின்ற*
*திண்மைசேர் மன்றிற் சென்றேன் அவரையே*
*அங்கும் கண்டேன்"*
*(அழகின் சிரிப்பு, ப.59)*

என்று மனம்நொந்து கூறுவதும் எண்ணத்தகும். இவர்கள்,

*"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு" (குறள், 374)*

என்னும் குறளுக்குச் சான்றாவார்கள். 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந் வள்ளலார்,

*"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற*
*உத்தமர்தம் உறவு வேண்டும்*
*உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு*
*கலவாமை வேண்டும்" (திருவருட்பா)*

என்று பாடினார். அவர்கால நிலையே பாவேந்தர் காலத்திலும் பட்டணத்தில் நிலவிற்று என்பதனை எண்ணும்போது நம் மனம் துடிக்கின்றது. இன்னும் மனம் திருந்தாதோர் வாழ்கின்றனரே என்பதனை எண்ணி எண்ணி நம் நெஞ்சம் வெடிக்கின்றது; குடும்ப உறவுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்கின்றன.

தமிழ் பற்றிப் பேசும்போது பாவேந்தரின் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உவகைக்கோர் அளவில்லை என்றே சொல்லவேண்டும். அவருடைய உவகைப் பெருக்கின் ஊற்றாய்ப் பெருகிவரும் உணர்வை,

*"வளர்பிறை போல் வளர்ந்த தமிழரில் அறிஞர் தங்கள்*
*உள்த்தையும், உலகில் ஆர்த்த வளத்தையும்*
*எழுத்துச் சொல்லால்*
*விளக்கிடும் இயல் முதிர்ந்தும், வீறுகொள்*
*இசையடைந்தும்,*
*அளப்பிலா உவகைஆடற் றமிழே என்றன் ஆவி!"*
*(அழகின் சிறப்பு, ப.62)*

என்னும் பாடல் வாயிலாக அறியலாம். பாவேந்தரின் இயற்கை ஈடுபாட்டைத் துலக்கிச் சொல்லும் அழகின் சிரிப்பின் நுட்பத்தை,

*"..............அரிமா என்று பகைநடுங்க*
*ஆர்த்தாய்! தமிழின் அடியவர்க்கோ*
*அழகின் சிரிப்பை அருந்துகென*
*அமுதாய்ப் படைத்தாய்! அ்.தொன்றே*
*ஆவி முற்றும் கலந்தினிக்க*
*அமையும்; தமிழுக் கரணாகக்*
*கழகம் சமைத்த கவிவேந்தே*
*கனிவாய் முத்தம் தருகவே!*
*கண்ணாய் விளங்கும் தமிழ்க்குமெழிற்*
*கண்ணே முத்தந் தருகவே!*
*(பாவேந்தர்பிள்ளைத்தமிழ், ப.47)*

என்று புலவர் புலமைப்பித்தன் ஏற்றம் தந்து போற்றியுள்ளார்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலைப் பாவேந்தர் நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தி ஓர் ஒளிப்படம் காட்டுவது போல் வேறு எவர் காட்டுவார்?

*"குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த*
*மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்*
*காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்*
*ஊற்றுக்கள் உண்டு, கனிமரங்கள் மிக்கஉண்டு;*
*பூக்கள் மணங்கமழும்; பூக்கள் தோறும் சென்றுதே*
*னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்;*
*வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு.*
*காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு;*
*நெஞ்சில் நிறுத்துங்கள்; இந்த இடத்தைத்தான்*
*சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிடுவார்"*
*(பா.கவி. முதல் தொகுதி, ப.1)*

இஃதோர் திரைப்படத்தைப் பதிவு செய்கின்ற ஒளிப்பதிவுப் படக்கருவி மெல்ல மெல்ல ஊர்ந்து செல்வது போல் இந்த இயற்கைக் காட்சி அமைந்துள்ளது. பாவேந்தர் காட்சிப் படுத்தும் சஞ்சீவி பர்வதத்தின் சார்லில் பண்டை இறையனார்களவியல் உரையில் வரும் வருணனையைக் கண்டு இன்புற முடிகின்றது. அவ்வருணனை வருமாறு:

"(அவள்) *சந்தனமும் சண்பகமும்*
*தேமாவும் தீம்பலவும்*
*ஆசினியும் அசோகும்*
*கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து*
*மாதவியும் மல்லிகையும் மௌவலொடு*
*மணங்கமழ்ந்து*
*பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும்*
*பிணியவிழ்ந்து*
*பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு*
*முகைசிறந்து,*
*வண்டறைந்து தேனார்ந்து*
*வரிக்குயில்கள் இசைபாடத் தண்தென்றல்*
*இடைவிராய்த்*
*தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண்,*

*ஒருமாணிக்கச் செய்குன்றின்மேல்,*
*விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து,*
*வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதொரு*
*வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்"*

இந்த உரை போலவே, பாவேந்தரின் சாரல் வருணனை அமைகின்றது.

பெண்களுக்கு ஏன் குட்டையான கழுத்தையும் மயிலுக்கு நீண்ட கழுத்தையும் இயற்கை தந்தது என்பதற்கு அவர்தரும் விளக்கம்,

*"அயலான் வீட்டின் அறையில் நடப்பதை*
*எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே*
*இயற்கை அன்னை, இப்பெண் கட்கெல்லாம்*
*குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கே*
*கறையொன் றில்லாக் கலாப மயிலே*
*நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்!*
*இங்குவா உன்னிடம் இன்னதைச் சொன்னேன்;*
*மனதிற் போட்டுவை; மகளிர் கூட்டம்*
*என்னை ஏசும் என்பதற் காக!"*

*(பா.கவி. முதல்தொகுதி, ப.54)*

என்று அமைவதோடு, பெண்களின் குட்டைக்கழுத்திற்குக் கமுக்கமாக மயிலின் காதிலே மறைபொருளைச் சொல்வது போல் அவர் சொல்லுதல் காண்க.

சிரித்த முல்லையைக் குறித்துப் பாவேந்தர்,

*"சோலை நடுவிலே சொக்குப் பச்சைப்*
*பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து*
*குலுக்கென்று சிரித்த முல்லை*
*மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேன்"*

*(மேலது, ப.56)*

என்று மனமகிழ்ச்சியுடன் கூறுவார். 'குலுக்கென்று சிரித்த முல்லையையும்" 'தென்னம்பாளைச் சிரிப்பையும்' பாவேந்தர் பல இடங்களில் பயன் படுத்தியுள்ளார். எழுஞாயிற்றின் எழுச்சியைச் சுட்டும்பொது,

*"ஒளிசெய்வான் கதிர்க்கோமான் வானகத்தில் மண்ணில்!*
*உயர்மலைகள்! சோலை, நதி இயற்கை*
*எழில்கள் பார்!*
*களிசெய்தான் பெருமக்கள் உள்ளத்தில்! அதனால்*
*கவிதைகள், கைத்தொழில்கள்*
*என்னென்ன ஆக்கம்"*
*(மேலது, ப.50)*

என்று கூறுவார். புதுமைகள் விளைவதற்குக் கதிரின் வருகை காரணமாயிற்று. பரந்து விரிந்த விண்மீன் கூட்டங்களையும், பகலில் கதிரவனையும் இரவில் திங்களையும் காண்பது கண்கொள்ளாக் காட்சியன்றோ! வானவில்லும் கொண்டல்களும் பரவிக் கிடக்கும் வானத்தின் வண்ணவண்ணக் காட்சிகள் காண்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் போது, பாவேந்தரை வசப்படுத்தியதில் என்ன வியப்பு?

*"எண்ணங்கள் போலே – விரி*
*வெத்தனை! கண்டாய் - இரு*
*கண்ணைக் கவர்ந்திடும் ஆயிரம் வண்ணங்கள்*
*கூடிச் சுடர்தரும் வான்!*
*வண்ணங்களைப் போய்க் - கரு*
*மாமுகில் உண்டு – பின்பு*
*பண்ணும் முழக்கத்தை, மின்னலை, அம்முகில்*
*பாய்ச்சிய வானவில்லை,*
*வண்ணக் கலாப – மயில்*
*பண்ணிய கூத்தை – அங்கு*
*வெண்முத்து மல்லிகை கண்டு சிரித்தனள்!*
*மேல்முத்தை வான் சொரிந்தான்!*
*விண்முத்தணிந்தாள் - அவள்*
*மேனி சிலிர்த்தாள் - இதைக்*
*கண்ணுண்ண உண்ணக் கருத்தி லின்பக்*
*கடல் வந்து பாய்ந்திடுதே!"*
*(பா.கவி. முதல்தொகுதி, ப.62)*

'தேன் வந்து பாயுது காதினிலே' என்ற பாரதி வழியில் பாவேந்தர் 'இன்பக் கடல் வந்து பாய்ந்திடுதே' என்கின்றார்.

சோலைக்குள் பாவேந்தர் சென்று கண்டகாட்சியில் திளைத்துப்போய்,

*"விரைமலர்த் தேன்வண் டெல்லாம் வீணையை*
*மிழற்ற ஆங்கே*
*மரங்கொத்திப் புட்கள் தாளம் வகைப்படுத்திடத்*
*தடாகக்*
*கரையினில் அலைக்கரங்கள் கவினை*
*மிருதங்கம் ஆர்ப்பக்*
*கருங்குயில் பாடத் தோகைக் கணிகை*
*நின்றாடும் சோலை"*
*(முல்லைக்காடு, ப.12)*

என்று கவிதையில் சோலைக்காட்சியைச் சிறைப்பிடித்துத் தந்துள்ளார். பாவேந்தரின் சோலை நமக்குக் கம்பரின் கவிநயத்தில் படரும்,

*"தண்டலை மயில்கள் ஆடத்தாமரை விளக்கம் தாங்கக்*
*கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண்*
*விழித்து நோக்கத்*
*தெண்டிரை எழினிகாட்டத் தேம்பிழி மகர யாழின்*
*வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ"*
*(கம்ப. பாலகாண். ஆற்றுப்படலம், 4)*

என்னும் மருதத்திணையை மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது. அந்திமறைந்த மாலை நேரத்தில் இருள்கவியும் கருக்கல் நேரம். அந்நேரத்தில் பாரதிதாசன் கடற்கரையிலிருந்து கடலில்முளைத்துவரும் நிலவைக் கண்டு மகிழ்ச்சியில் திளைத்துப்பாடுகின்றார் பின்வருமாறு:

*"கன்னங் கருத்த நற்கூந்தல் - அந்தி*
*கட்டவிழ நடந்தாளே!*

*சென்னி புனைந்த கீரீடம் - மணி*
*சிந்திட ஓடி விட்டாளே!*
*கன்னியுளம் வெறுத்தானே — கடற்*
*காதலன் போக்கினை எண்ணி!*
*என்ன உரைப்பினும் கேளான் - அந்தி*
*யின்முகம் கீழ்த்திசை காட்டாள்!*
*............. ........... .............*
*வந்திடும் சோதிநிலாவைக் கடல்*
*வாரி அணைத்தனன் கண்டீர்!*
*அந்தி பிரிந்ததினாலே — கடல்*
*ஆகம் இருண்டது, பின்னை*
*விந்தை நிலாவரப் பெற்றான் - கடல்*
*மேனியெலாம் ஒளிபெற்றான்!*
*சிந்தையை அள்ளுவது கண்டீர்!அங்குச்*
*சீதக்கடல்மதிச் சேர்க்கை"*

*(முல்லைக்காடு, பக்.9-10)*

"குறிஞ்சித்திணைக்கு எனப் பண்டைப் புலவர்கள் சில மரபுகளை ஏற்படுத்திப் பாடினார். மலையும் மலைசார்ந்த இடமும் இயற்கை தரும் சூழ்நிலை, புணர்தலும் புணர்தல் நிமித்தமும் மனித உணர்ச்சி தரும் சூழ்நிலை. இவ்விரண்டையும் பிரிக்க முடியாதவாறு இணைத்துக் குறிஞ்சித்திணைக்கு உரிய புலனெறி மரபுகளும் உருவாயின... இவ்வாறாக நாளடைவில் இயற்கைக்காட்சிகளின் கூறு ஒவ்வொன்றும் மனித உணர்வுகளின் ஒவ்வொரு பகுதிக்கு ஏற்ற வகையில் அமைந்துவிட்டன. மரபுகள் நிலையாக ஊன்றிய வரலாறு இதுதான்" (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக்.29-30) என அறிஞர் மு. வரதராசனார் கூறுவது போல் பாவேந்தரின் பாடல்களும் அமைந்துள்ளன என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை!

தென்றலைப் போற்றாதார் உலகில் யாரும் இல்லை. அது, 'பெண்கள் விலக்காத உடையை நீபோய் விலக்கினும், விலக்கார் உன்னை" என்று அவர் போற்றுமளவிற்குப் புதுமையானது. தென்றல் செல்வமாகும்!. இது பாவேந்தருடைய கருத்து,

*"அந்தியிலே இளமுல்லை சிரிக்கச் செந்நெல்*
*அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்*
*சிந்தைஉடல் அணுஒவ்வொன் றும்சி லிர்க்கச்*
*செல்வம் ஒன்று வரும்; அதன்பேர்*
*தென்றற் காற்று"*
*(பா.கவி. இரண்டாம் தொகுதி, ப.42)*

பாவேந்தர் 'மாவலிபுரச் செலவு' சென்று வந்த செய்தியை ஒரு கவிதையாக வடித்துள்ளார். படகிலே ஏறிச் செல்கின்றபோது தாம் கண்ட அழகிய காட்சிகளை எல்லாம அழகுற எடுத்துச் செல்வார்.

*"வெட்டவெளியினில் நாங்கள் - எதிர்*
*வேறொரு காட்சியும் கண்டோம்*
*குட்டைப் பனைமரம் ஒன்றும் - எழில்*
*கூந்தல் சரிந்ததோர் ஈந்தும்*
*மட்டைக் கரங்கள் பிணைத்தே - இன்ப*
*வார்த்தைகள் பேசிடும் போது*
*கட்டுக் கடங்கா நகைப்பைப் - பனை*
*கலகலவென்றுகொட் டிற்றே"*
*(பா.கவ. இரண்டாம் தொகுதி, ப.38)*

குட்டைப்பனை மட்டையும் ஈச்சமரத்தின் மட்டையும் அருகருகே இருப்பதால் பின்னிக்கிடப்பது இயல்பு. பாவேந்தர் அவை இரண்டும் காற்றில் ஆடும்போது இன்ப வார்த்தைகள் பேசுவதாய்க் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். மேலும் அவர்,

*"நீல உடையினைப் போர்த்தே – அங்கு*
*நின்றிருந் தாள்உயர் விண்ணாள்*
*வாலிப வெண்மதிகண்டான் - முத்து*
*மாலையைக் கையி லிழுத்து*
*நாலு புறத்திலும் சிந்தி – ஒளி*
*நட்சத் திரக்குப்பை யாக்கிப்*

*பாலுடல் மறையக் காலை – நாங்கள்*
*பலிபு ரக்கரை சேர்ந்தோம்" (மேலது, ப.40)*

என்று சுவைபடக் கூறும் போது நம் மனமும் அவருடன் பயணம் செய்வது போல் இருக்கிறது.

பாரதிதாசன் இயற்கையின் எழில் நிறைந்த தோற்றத்தை – சிறப்பை எல்லாம் தாம் கண்டுணர்ந்து சுவைத்து மகிழ்ந்தவாறே நம்மையும் – ஏன்? - அவர் எழுத்துக்களைப் படிப்பவர் எல்லோரும் - சுவைத்து இன்புறுமாறு காட்டுவது அவருடைய கவிதைத் திறனுக்குரிய பெருஞ்சான்றாகும்.

## மரபுப் பேச்சும் புலமை வீச்சும்

கடந்த காலத்தின் செல்வாக்கே மரபாக மாறுகிறது. தமிழ் ஞாலத்திற்கென்று சில மரபுகள் உண்டு. இலக்கணமரபு, இலக்கியமரபு இரண்டும் அன்னத்தமிழின் இருகண்களாகும். மரபின் செல்லக்குழந்தை புதுமையாகும். "இயற்கையில் பழமையாயுள்ள ஆற்றல்கள் அறிஞரால் காணப்படுங்கால், அவை 'புதுமைகள்' என்று போற்றப்படுதல் கருதற்பாலது. இதனால் பழைமையின் சேயே புதுமை என்பது விளங்குகிறது. ஆகவே புதுமையின் தாய் 'பழைமை' என்று 'புதுமைவேட்டல்' நூல் முன்னுரையில் தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் விளக்குதல் காணத்தகும். மக்கள் புதுமையில் மிகுதியும் நாட்டம் செலுத்துவர். பழைமையை மறந்து துறந்த புதுமை நிலைக்காது. பழைய மரபுகள் இனத்தின் பண்பாட்டையும் தொன்மையையும் பாதுகாத்துத்தரும் ஒரு பெட்டகம் என்பதனை மறந்து விடுதல் தகாது. தொல்காப்பியர் நூன்மரபிலே தொடங்கி மரபியலிலே நூலை முடிப்பதிலிருந்து மரபின் செல்வாக்குப் புலப்படும். பழந்தமிழர் அகக் காப்புடைய மரத்தின் பகுதிகளைக் கூறும்போது 'இலை' (மா விலை, அரச இலை) என்றும், புறக்காழ்ப்புடையவற்றை புல்லினம் என்று கருதி 'ஓலை' (தென்னை ஓலை, பனை ஓலை) என்றும் கூறினர். அம்மரபு இன்றும் தொடரத்தானே செய்கிறது. அப்படி இல்லாமல் மரபை மாற்றிப் பேசுகிறோமா? இவ்வாறு வந்த மரபுகள் சில மாறியும் வழங்குதலுண்டு.

*"மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்"*
*(தொல். மரபியல், 92)*

என்பது தொல்காப்பியர் நம்மனோர்க்குச் சொல்லிவைத்த எச்சரிக்கையாகும். "புதிய உணர்ச்சிகள் எழுந்து புதிய போக்கில் அமையும் போது, அந்த மரபுகளில் சிலவற்றைக் கடந்து அமைவதும் உண்டு. பெரும்புலவர்களின் நூல்கள் சிற்சில மரபுகளை மீறி அமைந்துள்ளமை காணலாம். ஆகவே மரபுகள் பெரும்பாலும் பிற்கால இலக்கியங்களுக்கு வழிகாட்டியாகவும் சிறுபான்மை ஏவலாளகவும் இருந்துவரும். மிகப் பெரும்புலவர்க்கு அவை குற்றேவல் புரியுமளவிலேயே நிற்கின்றன. அவர்களாலேயே மரபுகள் மாறியமைகின்றன" (இலக்கிய மரபு, ப.197) என்று அறிஞர் மு. வரதராசனார் கூறுவதற்கு ஏற்பப் பாவேந்தர்க்கு பழைய மரபுகள் பல குற்றேவல் செய்கின்றன எனலாம். அவருக்கு மரபில் மிகுந்த அழுத்தமும் புதுமையில் வரவேற்பும் சமத்தன்மையுடனே இருந்தமை கண்கூடு.

பழந்தமிழ் யாப்புமரபைச் செம்மையாகவும் சீராகவும் போற்றியவர் பாவேந்தர், மரபுவழுவாக எவ்வகைப் பாவையும் அவர் சிதைக்கவில்லை. வெண்பாவை,

*"தேர்நின்ற வீதிச் செயபேரிகை முழங்கப்*
*போர்நின்ற வீரர்குலம் பூத்தநிலம் - பார்நின்று*
*அடல்வளர்த்துப் பாரதநற் புத்திரன்நான் ஆக*
*உடல்வளர்ந்த நாடுஎன் உயிர்"*
*(கதர் இராட்டினப்பாட்டு)*

என்பதிலிருந்தும், அறுசீர் ஆசிரியவிருத்தத்தை,

*"வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள்*
*கூட்டம், அன்னார்*
*உள்ளத்தால் ஒருவரே மற்றுடலினாற்*
*பலராய்க் காண்பார்*
*கள்ளத்தால் நெருங்கொ ணாதே; எனவையம்*
*கலங்கக் கண்டு*

*துள்ளும்நாள் எந்நாள் உள்ளம் சொக்கும்நாள்*
*எந்த நாளோ"*
*(பா.கவி. முதல்தொகுதி, ப.98)*

என்பதிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். 'புதுநெறி காட்டிய புலவன்' என்ற பாவேந்தரின் பாரதியாரைப் பற்றிய பாடல் முழுவதும் நேரிசை ஆசிரியப்பாவையில் அமைந்தது. 'அழகின் சிரிபபும்', 'தமிழியக்கமும்', 'தமிழச்சியின் கத்தியும்' ஆங்காங்கே ஆசிரிய விருத்தப்பாக்களால் அமைந்தவை. தமிழச்சியின் கத்தியில் பல பாடல்கள் 'தென்பாங்குக் கண்ணிகளாகவும், ஆசிரிய விருத்தப்பாவிலும் பாவேந்தரால் இயற்றப்பட்டுள்ளன. குடும்பவிளக்கு நூலிலும் 'பாரதிதாசன் அகவல்பாவையும், விருத்தப்பா இனங்களையும், சிந்து கண்ணியிலும் பாடல்களைப் பாடியுள்ளார். 'அமிழ்து எது?' என்னும் பகுதி ப∴றொடை வெண்பா யாப்பில் அமைந்தள்ளது. இவ்வாறு பாரதிதாசன் பழந்தமிழ்ச் செய்யுள் மரபைப் பின்பற்றித் தம் மரபுக்காப்புணர்ச்சியைப் போற்றியுள்ளார்.

பாவேந்தர்,

*"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலனெறி வழக்கம்"*
*(தொல். அகத். 56)*

என்ற தொல்காப்பிய மரபையே தம் புலனெறி வழக்காகக் கொண்டு தம் எண்ணங்களை எழுத்தாக்கினார். "நன்மணம் புணர்தல் பொன்முடிகவித்தல்" என்று காப்பிய இலக்கண மரபைத் தண்டியலங்காரம் எடுத்துரைக்கும். இக்காவியப்பார்வை மரபையும் பாண்டியன் பரிசில் பாரதிதாசன் பதிவு செய்துள்ளார்.

*"ஒருவனும் ஒருத்தியுமாய் - மனம்*
*உவந்திடில் பிழையென உரைப்பதுண்டோ,?"*
*(பா.க.வி. முதல் தொகுதி, ப.29)*

என்று அமுதவல்லி கேட்பது,

*"இம்மை மாறி மறுமை யாயினும்*
*நீயாகியர் என்கணவனை யானாகியர் நின்*
*நெஞ்சுநேர் பவளே" (குறுந்.49)*

என்னும் அம்மூவனார் பாடியுள்ள சங்க இலக்கிய மரபைப் பின்பற்றியுள்ளமை வெளிப்படை. இப்படிப் பல பழைய மரபுகளைப் பாவேந்தர் போற்றிப் பல பாடல்களை இயற்றித் தம் மரபுக் காப்புணர்ச்சியை நிலைநாட்டியுள்ளார்.

பாவேந்தரின் புலமை வீச்சு அவர் எண்ணத்தில் ஊற்றெடுத்து எழுத்தில் வடிவம் பெற்றுச் சிறந்தது. அவருடைய உவமைகளும், உருக்காட்சிகளும், சொல்லாட்சிகளும், கற்பனையாற்றலும் புதுமையாகவே அமைந்துள. அவற்றைப் படிக்கப் படிக்க அவருடைய புலமையின் ஆழமும் அகலமும் விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்! மெய்ப்பாட்டுக் குறிப்புகளையம் முரண்தொடை நயங்களையும் பாவேந்தர் வேண்டும் இடங்களில் பயன்படுத்தித் தம் படைப்பைச் செழுந்தமிழாக்கியுள்ளார்.

வாழை இலையில் உணவு பரிமாறும் போது ஒரு வகை மரபு இன்றும் நம்மிடம் இருந்து வருகின்றது. வாழை இலையின் வெட்டப்பட்ட அடிப்பகுதியை நம் வலக்கைப் பக்கம் அமையும் வண்ணம் போடுவர். குடும்பவிளக்கில் வரும் காட்சியில் பாரதிதாசன்,

*"வாழை இலையின் அடி உண்பார் வலப்புறத்தில்*
*வீழ விரித்துக் கறிவகைகள் - சூழவைத்துத்*
*தண்ணீர்வெந்நிரைத் தனித்தனியே செம்பிலிட்டு*
*வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும் - பண்ணியமும்..."*
*(குடும்பவிளக்கு, ப.61)*

என்று கூறுகின்றார். இப்படி இலையின் முனையை உண்பவரின் இடதுகைப் பக்கமும் வாழை மரத்தினின்றும் வெட்டிய பகுதியை அவரின் வலதுகைப் பக்கமும் அமையுமாறு போடுவது தொன்று தொட்டு வருகின்ற மரபாகும். இம் மரபைத் தெய்வச்சேக்கிழார் அப்பூதியடிகள் புராணத்தில்

திருநாவுக்கரசருக்கு உணவு பரிமாறும்போது கூறுவது இங்கே இணைத்துக்காணத்தகும்.

*"புகழ்ந்தகோ மயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்*
*திகழ்ந்தவான் சுதையும் போக்கிச்*
*சிறப்புடைத் தீபம்ஏற்றி*
*நிகழ்ந்தஅக் கதலிநீண்ட குருத்தினை விரித்து நீரால்*
*மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற*
*மரபின் வைத்தார்"*
*(பெரியபு. அப்பூதியடிகள், 39)*

என்று மரபு காக்கப்பட்டு வந்தமையினைப் பதிவு செய்துள்ள சேக்கிழாரைப் போல் பாவேந்தரும் அப்பழங்காலத் தமிழ்மரபைப் போற்றிப் பதிவுசெய்துள்ளார். இவ்வாறு பாரதிதாசன் நல்ல மரபை மறக்காது போற்றித் தம் எண்ணங்களை எழுத்து வடிவில் தந்துள்ளார்.

புலவர் பெருமக்களின் புலமை வீச்சு, பாடல் முழுவதும் வெளிப்படலாம்; பாடலின் ஓரடியில் அல்லது ஒரு சீரில் அல்லது ஓர் அசையில் கூட வெளிப்படலாம். புலமை வீச்சு என்பது மின்னல்கீற்றைப் போன்றது. புலமை வீச்சு உவமை வாயிலாக, உள்ளடக்கத்தின் வாயிலாக, உருக்காட்சியினால் - இப்படிப் பல வகைகளில் வெளிப்படலாம். இவ்வகையில் பாரதிதாசனுடைய புலமை வீச்சையும் கண்டால் அவருடைய எழுத்தின் வண்மையும் வளமும், மென்மையும் மேன்மையும், பெருமையும் பெருமிதமும் நமக்குத் தெளிவுறும். இப்போது பாவேந்தருடைய புலமைச் செழுமையைக் காண்போம்.

உவமை ஒரு பொருளை விளக்குவதற்கு வருவதாகும். தெரியாத ஒரு பொருளைத் தெரிந்த ஒன்றைக் கொண்டு விளக்குதலாகும். இது கால வளர்ச்சியில் அலங்காரமாயிற்று; அது ஒரு வகையில் கற்பவர்க்கு இன்பம் தந்தது. எனவேதான் "அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தல்" என்று பேராசிரியர் நுணுக்கவுரை கூறினார். பாவேந்தருடைய

உவமைகள் எண்ண எண்ண இனிப்பவை; சுவைக்கச் சுவைக்க இன்பம் அளிப்பவை.

வைகறைப் பொழுதில் கதிரவன் எழும் போதில் இருள் மெல்ல மெல்ல விலகும். இதனைப் பாவேந்தர்,

*"தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த*
*கலப்பென இருள்தன் கட்டுக்குலைந்தது"*
*(குடும்பவிளக்கு, ப.1)*

எனக் கூறும்போது காலை நேரம் நம் மனக்கண் முன்னே விரிகிறது. ஆற்றிலே வாளை மீன் துள்ளிப்பாயும். இதற்கு உவமை,

*"பாண்டியன் வாளையொத்த வாளைமீன்"*
*(தமிழ்ச்சியின், ப.17)*

என அவர் உவமை கூறுவார். விழிக்கும் கன்னத்திற்கும் அவர் உவமை கூறும் அழகே தனி.

*"மாவடு வொத்த விழிக்கும் - அவள்*
*மாம்பழம் போன்ற மொழிக்கும்" (மேலது, ப.54)*

*"முன்னாக இறங்கி ஏறி*
*முதலைகள் கிடப்பதைப்போல்*
*சின்னதும் பெரிதுமான வெடிப்புகள்"*
*(அழகின்சிரிப்பு, ப.15)*

என அவர் குன்றின் பரப்பைச் சொல்லுவார். எவனோ ஒருவன் சஞ்சீவிபர்வதத்தைத் தரையோடு பெயர்த்துத் தூக்கினான்; எப்படித் தெரியுமா?

*"சஞ்சீவி பர்வதத்தைத் தாவித் தரையோடு*
*பஞ்சிருக்கும் மூட்டைபோல் பாவி அவன் எவனோ*
*தூக்குகின்றான்" (பா.கவி. முதல் தொகுதி, ப.9)*

என்றபடி அனுமன் சஞ்சீவிமலையை இலங்கையிலே வைத்ததும், அதன் இருப்பிடத்தில் தந்திரமாய் மீளவும் கொண்டு வைத்ததும் குறித்துப் பாவேந்தர்,

*"கண்ணே! மலையைக் கடுகளவும் ஆடாமல்*
*கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்தரையில் வைப்பதுபோல்*
*தந்திரமாய் மண்ணில் தலைகுனிந்து வைத்திட்ட*
*அந்தப் பகுதிதான் ஆச்சரியம் ஆகுமடி"(மேலது, ப.12)*

என்று எளிய உவமை கூறி விளக்குகின்றார். கவியரசு கண்ணதாசன் கூட ஒரு திரைப்பாடலில், *"கண்ணாடிப் பாத்திரத்தை கல்மீது வைப்பது போல் மெல்லப்பேசு"* என்று கூறுவதனை இங்கே ஒப்பிடலாம்.

'உதாரன்,

*"அமுதவல்லியின் காதலை அறிந்த மன்னன் அதிர்ச்சியுற்று,*
*.......... ................ ............ஆயிரந்தேள்*
*மண்டையிலே மாட்டியதுபோல் மனமுளைந்து*
*மாளிகைக்குகச் சென்றான்" (பா.கவி.ப.26)*

என்பதும் இவண் எண்ணத்தகும்.

கவின் நிலவைப் பற்றிக் கவிதைமழை பொழியும் உதாரன்,

*"தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்*
*சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்*
*கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்*
*கவின்நிலவே உனைக் காணும்*
*இன்பம் தானோ?"*
*(மேலது, ப.20)*

என்று அவர் பாடுவதில் உவமையோடு ஒட்டி வந்த சமுதாய உணர்வை எதிரொலிக்கக் காண்கின்றோம். புதுமையான உவமைகளை உருவாக்கித் தம் எண்ணங்களை எல்லாம் எழுத்து வடிவமாக்கி ஏற்றம் தந்து பாவேந்தர் போற்றியுள்ளார்.

பாவேந்தரின் படிமம் அல்லது உருக்காட்சி நம்மை வியக்க வைக்கின்றது. அவர் மலையிலிருந்து விழும் அருவிக்காட்சியை நம் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகின்றார் இதோ:

*"அருவிகள் வயிரத்தொங்கல்*
*அடர்கொடி பச்சைப்பட்டே*
*குருவிகள் தங்கக்கட்டி*
*குளிர்மலர் மணியின் குப்பை"*
*(அழகின்சிரிப்பு, ப.18)*

*"எழுந்தது செங்கதிர்தான் கடல்மிசை! அடடா எங்கும்*
*விழுந்தது தங்கத் தூற்றல்! வெளியெலாம்*
*ஒளியின் வீச்சு"*
*(மேலது, ப.7)*

என்றும் கூறுவன சான்றாகும்.

*"மேற்றிசையில் சூரியன்போய் விழுந்துவிட்டான்;*
*மெல்லஇருட் கருங்கடலில் விழுந்த*
*திந்த உலகம்"*
*(பா.கவி.முதல்தொகுதி, ப.74)*

என்றும்,

*"கமலம் அடுக்கிய செவ்விதழால் - மலர்க்*
*காட்டினில் வண்டின் இசைவளத்தால்*
*கமழ்தரு தென்றல் சிலிர்சிலிர்ப்பால் - கருங்*
*கண்மலரால் முல்லை வெண்ணகைப்பால்"*
*(மேலது, ப.96)*

என்றும் பாவேந்தர் படிமங்களைத்தம் பாடல்களில் சொற்களில் வடித்துக் காட்டுவார்.

முரண்தொடை செய்யுளில் பயின்று வரும் ஒரு தொடைநயமாகும். பாவேந்தர்,

*"தணலில் நின்றிருந்தோர் தண்ணீரில் தாவுதல்போல்"*
*(எதிர்பாரா, ப.24)*

*"கண்ணில் ஒளியுண்டு பார்வைஇல்லை"*
*(மேலது,ப.12)*

*"பழங்கால இயற்கை செய்யும்*
*புதுக்காட்சி பருகு தம்பி" (அழகின் சிரிப்பு, ப.7)*

எனக் கூறியுள்ள அடிகளின் வாயிலாக முரண்தொடை நயத்தை நாம் அறிந்தின்புறலாம்.

பாவேந்தரின் சொல்லாட்சிகள் அவருடைய எண்ணங்களை எதிரொலிக்கும் இனிய சான்றுகள் என்றால் மிகைஇல்லை! புதிய புதிய சொல்லிணைப்புகளையும் சொற்றொடர்களையும் அவர் பயன்படுத்திப் படிப்பவரின் கண்ணையும் கருத்தையும் சுண்டி இழுக்குமாறு அமைக்கின்றார்; சில சான்றுகள் கண்டு நாமும் நம் உள்ளத்தைப் அவர் பாடலில் பறிகொடுப்போம்:

*"பாளைச் சிரிப்பு" (குடும்பவிளக்கு, ப.146)*
*"சாக்குருவி வேதாந்தம்" (பா.கவி.முதல்தொகுதி, ப.7)*
*"மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை"*
*(மேலது, ப.19)*
*"இருவிழியால் தழுவினாள் மனத்தால் உண்டாள்"*
*(மேலது, ப.19)*
*"குளிர்விளக்கு" (மேலது, ப.21)*
*"சாதுரியச்சொல் உதாரன்" (மேலது, ப.20)*
*"உலகியலின் அடங்கல்" (மேலது, 95)*
*"உலகப்பன்பாட்டு; புதுக்கணக்கு" (மேலது, ப.147)*

"நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்" என்ற சிலம்பின் அடியில் இளங்கோவடிகள் கூறும் சொற்றொடர் நம் நெஞ்சை விட்டு அகலாத தொடராகும். இதே போன்று பாவேந்தருடைய சொற்றொடர்கள் ஒன்றிரண்டைக் காண்போம்.

*"மண்ணிடையே விண்வீழ் கொள்ளி*
*வீழ்வதுபோல் தனித்தாளும் கொடிய ஆட்சி"*
*(மேலது, ப.34)*

*"பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்"*
*(மேலது, ப.82)*

*"ஆற்று வெள்ளம் போல் ஆசை வெள்ளம்"*
*(மேலது, ப.112)*

*"மணிப்பொறியின் இருமுள்ளும் பிழைசெய்யு*
*மோ மேற்கில்"*
*(காதல் நினைவுகள், ப.13)*

பாரதிதாசனுககுச் சில சொற்களின் பொருள்களின் மேல் தணியாத விருப்பம் உண்டு. அவற்றுள் சில இதோ: பாகற்காய், பாண்டியன் போன்றன.

*"மிதிபாகற் காய்கசக்கும்; எனினும் அந்த*
*மேற்கசப்பின் உள்ளேயும் சுவைஇ ருக்கம்"*
*(கண்ணகிபுரட்சிக் காப்பியம், ப.26)*

"பாண்டியன் பரிசு" என்ற நூலின் பெயர் காண்க. "பாண்டியன் வாளையொத்த வாளைமீன்" எனவரும் அடியும் நம் பார்வையில் வீழ்கின்றன.

பாவலர்களின் கற்பனைவளத்திற்கு ஒருவரம்பு காட்டுவது இயலாத செயலாகும். கற்பனைநயம் இல்லாத கவிதை கசக்கும். கற்கின்ற ஆர்வமுடையோர்க்குப் புலவர்களின் கற்பனைச் செழுமை உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தூண்டிலாகும். அவ்வகையில் பாரதிதாசனின் கற்பனையும் நம் மனவெளியில் நம்மைச் சிறகடித்துப் பறக்க வைக்கும். வெள்ளம் பெருக்கெடுத்து வரும் போது ஆற்றில் நிகழ்கின்ற நிகழ்வுகளைக் கற்பனை செய்யுமாறு பாவேந்தர் நம்மை அழைத்துச் செல்வதைப் பாருங்கள்:

*"பெருஞ்சிங்கம் அறையவீழும் யானைபோல்*
*பெருகிப் பாய்ந்து*
*வரும்வெள்ளம், மோதலாலே மணற்கரை இடிந்து வீழும்"*
*(அழகின் சிரிப்பு, ப.23)*

*"ஒரேவகை ஆடைபூண்ட பெரும்படை ஒழுங்காய் நின்று*
*சரேலெனப் பகைமேற் பாயும் தன்மைபோல்*
*ஆற்றுவெள்ளம்" (மேலது, ப.24)*

காதலி சொல்லிவிட்டால் அதனைக் காதலன் தலைமேற் கொண்டு விண்ணேறிப் பாய்வான் என்பதனை நம் பேச்சில் பேசக் கேள்வியுறுகிறோம். இதற்குப் பாவேந்தரின் குப்பன் விலக்கல்ல.

*"கிட்டரிய காதல் கிழத்தி இடும்வேலை*
*விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ?*
*கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்*
*மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்"*
*(பா.கவி. முதல்தொகுதி, ப.4)*

பழைய திரையிசைப் பாடல் ஒன்று. காதலன்,

*"உனக்காக எல்லாம் உனக்காக...*
*இலங்கை நகரத்தில இன்பவல்லி நீயிருந்தா*
*இந்துமாசமுத்திரத்தெ இங்கிருந்தே தாண்டிடுவேன்"*

என்று பாடுவதாக வரும். அப்பாடல் இங்கே இணைத்துக் காண்பதற்குரியது. இந்தியநாட்டின் வளத்தை அடைமொழிகளுடன் இலக்கியச் சிறைக்குள் பாவேந்தர் அடைக்க முயல்கிறார்.

*"நல்ல இமயம் நலங்கொழிக்கும் கங்கைநதி*
*வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை*
*செந்நெல் வயல்கள், செழுங்கரும்புத் தோட்டங்கள்*
*தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன்மரங்கள்*
*இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்..."*
*(பா.கவி. முதல்தொகுதி, ப.15)*

மற்றுமொரு காட்சி! தற்குறிப்பேற்ற அணியயோடு தலைதூக்கும் முழுநிலவின் காட்சியை உதாரன் பாடுவதாகப் பாவேந்தர் பாடுகின்றார்.

*"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து*
*நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்*
*கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்*
*கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்*
*சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்*
*சொக்க வெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ?*
*காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்*
*கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!'*
*(மேலது, ப.20)*

என்று உதாரன் உரக்கப்பாடும்போது ஒய்யாரக் கற்பனையுடன் நம் உள்ளமும் வானத்தின் உயரே பறக்கின்றது! பாவேந்தர் படைத்துக் காட்டும் கற்பனையில் நம் மனமும் அசைகின்றது; இனிய இசையையும் இசைக்கின்றது.

*"ஆடிய கிளைகள் தோறும் கொடிதொங்கி,*
*அசையும் புட்கள்*
*பாடிய படியிருக்கும்! படைவிலங் கொன்றை யொன்று*
*தேடிய படியிருக்கும் காற்றோடு சருகும் சேர்ந்து*
*நீடிசை காட்ட நிற்கும் பயன் தந்துநிற்கும் காடே"*
*(அழகின்சிரிப்பு, ப.17)*

இப்படிக் கற்பனையின் கொடுமுடியைப் பாவேந்தர் நம் கண்முன்னர்க் காட்டிவிடுகின்றார்.

பாரதிதாசனின் பாடல்களில் மெய்ப்பாட்டுச் சுவைக்கும் பஞ்சமில்லை! வீரத்தின் விளைநிலமாகவே அவருடைய பாடல்கள் விளங்குகின்றன என்பதில் இருவேறு கருத்துகள் இருக்கமுடியாது!

*"கொலைவாளினை எடடாமிகு கொடியோர்*
*செயல் அறவே*
*குகைவாழ் ஒரு புலியே உயர் குணமேவிய தமிழா!"*
*(பா.கவி. முதல் தொகுதி, ப.173)*

*"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட*
*போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"*
*(மேலது, ப.158)*

*"எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!*
*வல்லார்க்கும் மற்றுமுள்ள செல்வர்க்கும் நாட்டுடமை*
*வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக!*
*வில்லார்க்கும் நல்ல நுதல்மாதர் எல்லார்க்கும்*
*விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே!"*
*(மேலது, ப.50)*

எனவரும் பாடல் அடிகளை நம் படிக்கும்போது நம் நரம்புகள் முறுக்கேறும்! தோள்கள் தினவெடுக்கும்; சொற்கள் சுடுசொல்லாய்ப் பிறப்பெடுக்கும், ஆண்மக்களையும் பெண்மக்களையும் ஆர்ப்பரிக்கச் செய்து அணிவகுத்துச் செலலத் தூண்டும்.

நகைச்சுவைக்கு ஒரு சான்றைக் காண்போம்.

*"கிளையினிற் பாம்பு தொங்க விழுதென்று,*
*குரங்குதொட்டு*
*'விளக்கினைத் தொட்டபிள்ளை வெடுக்கெனக்*
*குதித்ததைப் போல்*
*கிளைதோறும் குதித்துத் தாவிக் கீழுள்ள விழுதை*
*யெல்லாம்*
*ஒளிப்பாம்பாய் எண்ணிஎண்ணி உச்சிபோய்த் தன்வால்*
*பார்க்கும்!"*
*(அழகின் சிரிப்பு, ப.40)*

இவ்வாறு பாவேந்தர் பாரதிதாசனுடைய படைப்புகள் யாவற்றிலும் அவருடைய எண்ணச்சிதறல்களையும், எழுச்சியின் வேகத்தினையும், புலமைப் பேச்சையும் வீச்சையும் கண்டு சுவைக்கலாம். இன்னும் விரித்துப் பேச இடமுண்டு. தொட்ட இடமெங்கும் இனிக்கும் இனிய பலாப் போல எல்லாமும் நிறைந்து இலக்கியக்களஞ்சியமாகத் தென்னாட்டின் பொன்னேடாகப் பாவேந்தரின் படைப்புகள் விளங்குகின்றன.

## முடிவுரை

புதிய புதிய எண்ணங்களை ஏற்றமுடன் எடுத்துச் சொல்ல எண்ணிய பாவேந்தர் பாரதிதாசன் பழந்தமிழ் மரபினை வழியாகக் கொண்டார். பழந்தமிழ் மரபினை இவர் புதுக்கித் தந்தார். அவர் பாடல்களில் தமிழுணர்வும், தமிழ்க்காப்புணர்ச்சியும், சமுதாய நலனும், பகுத்தறிவுச் சிந்தனையும் நிறைந்து புதிய கவிஞர் பரம்பரையை உருவாக்கிற்று என்பது 'உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!

"He is immersed in ancient Tamil Literature and he brings back that tradition to enrich the new poetry, the new rhythm of democracy. He is a master in weaving works into charming and enchanting verses. But he represents the recent past from the social point of view" (The History of Tamil Literature by Prof.T.P.M., page.189.)

என்று பல்கலைச்செல்வர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் கூறுவது நனி பொருத்தமே!

*"பொய்கைப் புனலில் விளையாடப்*
*புகுவார் போலத் தமிழ்க்குவரு*
*பொல்லாப் பகையை வீழ்த்துதற்குப்*
*பொங்கிக்குமுறும் தீவளர்த்து*
*மெய்யின் தசைநார் எலும்போடு*
*வெடித்துச் சிதறத் தம்முயிரை*
*விலையாய்க் கொடுத்த தமிழ்மறவர்*
*வீரம் விளைத்த துன்பாடல்!*
*செய்யாத் தவங்கள் பலசெய்து*
*சிங்கப் புலவா உனை ஈன்று*
*சிரித்துச் செழித்த தமிழன்னை*
*சிந்தும் மகிழ்ச்சிக் கண்ணீரை*
*மைசேர் அழகு விழியிரண்டில்*
*மழையாய்க் காண வருகவே!*
*மறுவின் றெழுந்த கவிதைமுழு*
*மதியே வருக வருகவே!"*

*(பாவேந்தர்பிள்ளைத்தமிழ், ப.58)*

எனப் புலவர் புலமைப்பித்தன் மணிமுடி சூட்டி மகிழ்கின்றார். நாமும் அவரைப் போல் பாரதிதாசனை இருபதாம் நூற்றாண்டின் 'இலக்கியப்புதுமலர்' என்றும், 'தென்னாட்டின் பொன்னோடு' என்றும் போற்றிப் புகழ்வோம்.

## குறிப்பு

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாளை முன்னிட்டுத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அறக்கட்டளைப் பொழிவு (29.04.2014) நிகழ்த்த வாய்ப்பளிதமைக்குத் துணைவேந்தர் பேரா.முனைவர் ம. திருமலை அவர்களுக்கும், அறக்கட்டளை நிறுவிய தமிழக அரசிற்கும் ஆட்சிக்குழுவினர்க்கும் என மனம் நிறைந்த நன்றி.

## துணைநின்ற நூல்கள் (அகர வரிசையில் அமையவில்லை)

1. பாரதிதாசன் கவிதைகள் முதல்தொகுதி, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், 1906, 14-ஆம் பதிப்பு.
2. மேலது, இரண்டாம் தொகுதி, பாரிநிலையம், சென்னை, 1961, 5-ஆம் பதிப்பு.
3. மேலது, மூன்றாம் தொகுதி, பாரிநிலையம். சென்னை-1968, 4-ஆம் பதிப்பு.
4. பாரதியார் கவிதைகள், அருணாபதிப்பகம், மதுரை, 1958.
5. காதல் பாடல்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977.
6. பாரதிதாசன் கவிதைகள் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994, மறுபதிப்பு.
7. கதர் இராட்டினப் பாட்டு, இந்திய விடுதலைத் திருநாள் பொன்விழா மகிழ்ச்சி வெளியீடு, புதுவை, 1997, 3-ஆம் பதிப்பு.
8. தமிழியக்கம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1992, திருத்திய பதிப்பு
9. தமிழச்சியின் கத்தி, பாவேந்தர் பதிப்பகம், புதுச்சேரி, 1967, 3-ஆம் பதிப்பு.
10. அழகின்சிரிப்பு, பாரிநிலையம், சென்னை, 1964, 8-ஆம் பதிப்பு.

11. குடும்ப விளக்கு, சாரதா பதிப்பகம், சென்னை, 2008.
12. கண்ணகி புரட்சிக் காப்பியம், அன்புநூலகம், சென்னை, 1962.
13. இசையமுது இரண்டாம் பகுதி, பாரிநிலையம், சென்னை, 1960, 2-ஆம் பதிப்பு.
14. இளைஞர் இலக்கியம், பாரிநிலையம், சென்னை, 1967, 4-ஆம் பதிப்பு.
15. பாண்டியன் பரிசு, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், 1967, 8-ஆம் பதிப்பு.
16. பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும், நெல்லை.ந.சொக்கலிங்கம், தனித்தமிழ் இலக்கியக் கழகம், திருநெல்வேலி, 1968.
17. கவிவேந்தர் மூவர், நெல்லை ந. சொக்கலிங்கம், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2007.
18. இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், முனைவர் இரா. இளவரசு, மருதம், திருச்சி, 1990.
19. கவிதை உயிர், உள்ளம், உடல், முனைவர் க.ப. அறவாணன், பாரிநிலையம், சென்னை, 1976.
20. பட்டறையிலே பாரதிதாசன், முனைவர் தா.வே.வீராசாமி, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், 1973, 2-ஆம் பதிப்பு.
21. தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி:3, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1978.
22. பாரதிதாசன் பிள்ளைத்தமிழ், புலவர் புலமைப்பித்தன், அண்ணா பதிப்பகம், சென்னை, 1978, 2-ஆம் பதிப்பு.
23. தேசியம் வளர்த்ததமிழ், கா. திரவியம், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1974, மாணவர் தனிப்பதிப்பு.
24. முல்லைக்காடு, புரட்சிக்கவிஞர், ஞாயிறு நூற்பதிப்பகம், புதுச்சேரி, 1948.